
திருமலை திருப்பதி தேவஸ்தானம்
ஸப்தகிரி
சமய மாத இதழ்
ஜீன் 2019 விலை ரூ.5/-
14-06-2019
வைரஅங்கி அணிவிப்பு
15-06-2019
முத்துஅங்கி அணிவிப்பு
16-06-2019
பொன்அங்கி அணிவிப்பு
திருமலையப்ப ஸ்வாமி
ஜ்யேஷ்டாபிஷேகம்
14-06-2019
முதல்
16-06-2019
வரை

ஸ்ரீவராஹ ஸ்வாமி ஆலயம்,
திருமலை



# 2019, ஏப்ரல் 24 முதல் 27 வரை திருமலை ஸ்ரீவராஹ ஸ்வாமி ஆலயத்தில் தி.தி.தே. நிர்வகித்த பாலாலய அஷ்டபந்தன மஹாசம்ப்ரோக்ஷண திருக்காட்சிகள்



தி.தி.தே. அர்ச்சகர்க்குழுவினருடன்
தேவஸ்தான உயர் அதிகாரிகள்



அஷ்டபந்தன லேகியத்தை வெண்ணையோடு
சேர்த்து இடித்து சித்தப்படுத்தும் காட்சி



ருத்விக்கர்கள் குழு வைதீக நிகழ்ச்சிகளை
நிர்வகிக்க ஆலயத்திற்குள் நுழையும் காட்சி



திருமலை மாடவீதிகளில் எழுந்தருளும்
ஸ்ரீவராஹ ஸ்வாமி





ஸ்ரீவராஹ ஸ்வாமி கர்ப்பாலய சிகர மஹாசம்ப்ரோக்ஷண நிகழ்ச்சி



ஓமித்யேகாக்ஷரம் ப்₃ரஹ்ம
வ்யாஹரந்மாமநுஸ்மரந் |
ய: ப்ரயாதி த்யஜந்தே₃ஹம்
ஸ யாதி பரமாம் க₃திம் ||

எவன் "ஓம்" என்னும் ஒரே எழுத்தான பிரம்மத்தை உச்சரித்துக் கொண்டு, அந்த "ஓம்" என்ற ஏகாக்ஷரத்தின் பொருளான பிரம்மமான என்னைச் சிந்தனை செய்து கொண்டு, இவ்வுடலை நீத்துச் செல்கிறானோ, அந்த மனிதன் உயர்ந்த கதியை அடைகிறான்.

– ஸ்ரீமத் பகவத் கீதை 8–13



சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய்! உலகு
தன்னை வாழநின்றநம்பீ! தாமோதரா! சதிரா!
என்னையும் என்னுடைமையையும் உன்சக்கரப்
பொறியொற்றிக்கொண்டு
நின்னருளேபுரிந்தரிந்திருந்தேன் இனி என் திருக்குறிப்பே

திருவேங்கட மலையின் உச்சியானது விண்ணை முட்டுமாறு தொட்டுக் கொண்டிருக்கும் அத்திருவேங்கட மலையைத் தம் இருப்பிடமாக உடைய எம்பிரானே! உலகத்திலுள்ளவர்களை வாழ்விப்பதற்காக எழுந்தருளியிருக்கும் நற்குணங்கள் நிரம்பப் பெற்ற நம்பீ! தாமோதரனே! அடியார்கள் செய்யும் குற்றங்களைப் பெரிதுபடுத்திப் பார்க்காத பெருந்தன்மை மிக்கவனே! என் ஆத்மா வாகிய உயிரையும், இவ்வுடலையும் உன்னுடைய திருஇலச்சினைகளான சங்குசக்கரப் பொறிகளை இடுவித்துக் கொண்டுள்ளேன். என் மீது அதிகமாகப் பொழியும் கருணையினைப் பெரிதும் விரும்பி வேண்டுகிறேன். இனிமேல் உன் திருவுளக் கருத்து யாதாக இருக்குமோ!

- பெரியாழ்வார் திருமொழி 5-4-1

# ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷம் வைகாசி/ஆனி மாதம் உத்தராயணம்
## வஸந்த/க்ரீஷ்மருது சகவருஷம் 1941 கலியுகாதி 5120 ஜூன் 2019.

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 18 | சனி | திர | பர | மாத சிவராத்ரி, புதன் மிதுனம். |
| 2 | 19 | ஞாயிறு | சசி | கார் | கிருத்திகை, போதாயன அமாவாசை புதன் மே.உதயம், கார்வேடி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி திருத்தேர். |
| 3 | 20 | திங்கள் | அமா | ரோகி | அமாவாசை, சனி ஜெயந்தி, வடசாவித்ரி விரதம், கார்வேடி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி அவப்ருதம், சக்கரஸ்நானம், துவஜாவரோஹணம், ரிஷிகேஷ் ஸ்ரீபார்வதி தேவி சமேத ஸ்ரீசந்திரமௌளீஸ்வர ஸ்வாமி பஞ்சாஹ்ணிக திவ்ய கல்யாண மஹோத்ஸவம் நிறைவு, திரிசூல ஸ்நானம், துவஜாவரோஹணம். |
| 4 | 21 | செவ் | பிர | மிரு | சந்திர தரிசனம். சுக்ரன் ரிஷபம், ஜ்யேஷ்டசுத்த. |
| 5 | 22 | புதன் | துவி | திரு | தனிய நாள் ரம்பா திருதியை. |
| 6 | 23 | வியா | திரு | புன | சுப நாள், மாத சதுர்த்தி. |
| 7 | 24 | வெள்ளி | சது/பஞ் | | பூச க்ஷயதிதி. |
| 8 | 25 | சனி | சஷ் | ஆயி | சஷ்டி. |
| 9 | 26 | ஞாயிறு | சப் | மக | பானு ஸப்தமி. |
| 10 | 27 | திங்கள் | அஷ் | பூர | மாத துர்காஷ்டமி, தூமாவதி ஜயந்தி. |
| 11 | 28 | செவ் | நவ | உத் | வ்ய-சிரா, மஹேச நவமி. |
| 12 | 29 | புதன் | தச | ஹஸ் | பாபஹர தசமி, மெயின் வரதராஜ ஸ்வாமி திருநட்சத்திரம், அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 13 | 30 | வியா | ஏகா | சித் | நிர்ஜல ஏகாதசி, திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம் ஆரம்பம், அப்பளாய குண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ ஆரம்பம், துவஜாரோஹணம். |
| 14 | 31 | வெள்ளி | துவா | சுவா | பிரதோஷம், ராமலக்ஷ்மண துவாதசி, பாதிப்பு, திருமலை நம்பி திருநட்சத்திரம், திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் ஆரம்பம். |
| 15 | 32 | சனி | திர | விசா | சூரியன், மிதுனம், மா.5ம.38நி. ஷடசீதி. |
| 16 | 1 | ஞாயிறு | சசி | அனு | பௌர்ணமி, கரி நாள், திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் நிறைவு. |
| 17 | 2 | திங்கள் | பௌர் | கேட் | கபீர்தாஸ் ஜயந்தி, திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம் நிறைவு, அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி கருட சேவை. |
| 18 | 3 | செவ் | பிர | மூல | இயற்கைச் சீற்றம், ஜ்யேஷ்ட பஹுளா. |
| 19 | 4 | புதன் | துவி | பூரா | பத்திரப்பதிவு செய்ய. |
| 20 | 5 | வியா | திரு | உத்ரா | சங்கடஹர சதுர்த்தி, புதன் கடகம், அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருத்தேர். |
| 21 | 6 | வெள்ளி | சது | திவோ | ச்ரவணம், வைத்-சிரா, கரி நாள். நெப்ட்யூன் வ.ஆ., அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம். |
| 22 | 7 | சனி | பஞ் | அவி | சூரியன் ஆருத்ரா பிரவேசம் மா.5ம. 18நி. செவ்வாய் - கடகம். |
| 23 | 8 | ஞாயிறு | சஷ் | சத | சஷ்டி தனியநாள், புயல், திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம் ஆரம்பம். |
| 24 | 9 | திங்கள் | சப் | பூரட் | நிலம், மனை வாங்க. |
| 25 | 10 | செவ் | அஷ் | உத்ரட் | காலாஷ்டமி, திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம் நிறைவு. |
| 26 | 11 | புதன் | நவ | ரேவ | திரிதினஸ்ப்ருக்(நட்). |
| 27 | 12 | வியா | தச | ரேவ | விருத்தி திதி சுப நாள். |
| 28 | 13 | வெள்ளி | தச | அஸ் | சுப நாள், சுக்ரன்-மிதுனம். |
| 29 | 14 | சனி | ஏகா | பர | மோஹினி ஏகாதசி, கிருத்திகை. |
| 30 | 15 | ஞாயிறு | துவா | கார் | பிரதோஷம், க்ஷயதிதி, கார்வேடி ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி புஷ்பயாகம். |



# ஸப்தகிரி

## சமயமாத இதழ்

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

ஜூன் 2019 மலர் 50 இதழ் 01

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| **திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்** - *திருமதி. பா. காயத்ரி, கேரளா.* | 7 |
| **விண்ணோர் தொழும் வேங்கடம்** - *திருமதி. பட்டம்மாள் ஜெகந்நாதன், அம்பத்தூர்.* | 10 |
| **ஆழ்வாராசாரியர்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் – 18 திருக்கோட்டியூர் நம்பிகளும் எம்பெருமானாரும்** - *திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.* | 14 |
| **நமது திருக்கோயில் : ஸ்ரீபிரசன்னவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பலாயகுண்ட்டா** -*திருமதி. எஸ். வைஷ்ணவி, திருப்பதி.* | 18 |
| **வடுக நம்பி அருளிய யதிராஜ வைபவம்** - *திரு. பி.டி. சேஷாத்ரி, சென்னை.* | 21 |
| **குண்டலினி யோகம்** -*திரு. பிரபோதரன், சுகுமாரன், சென்னை.* | 24 |
| **பச்சை தோரணம் : பத்மசரோவரத்தில் ஸ்ரீபத்மாவதி தெப்போத்ஸவம்** -*திரு. கே. வேங்கடரமணா, திருப்பதி.* | 31 |
| **திருமலையில் ஸ்ரீசைலபூர்ணர்** - *செல்வன். சி.ஸ்ரீவாசுதேவா, திருப்பதி.* | 34 |
| **ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–பக்த துருவனின் சரித்திரம்** - *டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.* | 36 |
| **காமாட்சி அம்மன் விளக்கு** - *திரு. ஜி.வேலாயுதம், சேலம்.* | 39 |
| **அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** - *உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.* | 40 |
| **திருக்குறுந்தாண்டகத்தின் ஸாரம்** - *டாக்டர். கே.கே..ஏ. ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி.* | 44 |
| **108 திவ்யதேச வைபவம் – காழிச் சீராம விண்ணகரம்** - *உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.* | 46 |
| **பகவத் கீதை–இளைய சமுதாயம் செயல்முறை ஞானம்** - *திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.* | 49 |
| **ஆயுர்வேதம் – பெருங்காயம்** - *திருமதி. வி.உஷா, திருப்பதி.* | 51 |
| **2019, ஜூன் மாத ராசி பலன்** - *திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.* | 53 |



*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

பிரதான ஆசிரியர் :
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,

அச்சிடுபவர் :
**திரு. R.V. விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

*ஓவியம் :*
**திரு. P.சிவப்பிரஸாத் (ஓய்வு)**
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

*புகைப்படங்கள் :*
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**



***பிரதிகளுக்கு:***
**THE CHIEF EDITOR,**
**"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.**
**0877- 2264543, 2264359**
**2264360**


நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.org யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள் /கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ***திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம், திருமலை.***

பின்னட்டை : ***ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம், திருச்சானூர்.***

# ஸப்தகிரிவாசனின்
# அக்ஷர பிரசாதம் ஸப்தகிரி

## உங்களுடன்...

மக்களிடையே பக்தி, நல்லொழுக்கம், அறநெறி போன்றவற்றினை கொண்டு செல்லும் ஆன்மீகப் பத்திரிக்கைகளில் சிறப்புற்று விளங்குவது திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிடும் “ஸப்தகிரி” சமய மாத இதழாகும். பண்டைய காலங்களில் மக்களுக்கு எந்தவித தர்ம சந்தேகங்கள் ஏற்பட்டாலும், புராணம் அல்லது இதிகாசம் குறித்து தெரிந்த மகரிஷிகளிடமோ, ஆசிரமங்களிற்கோ, தர்ம பீடங்களிற்கோ சென்று தெரிந்து கொள்வர். ஓடிக் கொண்டேயிருக்கின்ற இன்றைய இயந்திர யுக உலகில் தர்ம சந்தேகங்கள், ஆன்மீக தகவல்களை நேரடியாக, வீட்டிற்கே சாக்ஷாத் ஸப்தகிரிவாசனின் அக்ஷர பிரசாதமாக அளிக்கக் கூடிய சமய மாத இதழ் “ஸப்தகிரி” ஆகும்.

பக்தர்களுக்கும், வாசகர்களுக்கும் திருவேங்கடமுடையானின் வரலாறு, ஸ்வாமி தரிசன நேரங்கள், சேவைகள், உத்ஸவங்கள், வசதிகள், பயண முன் ஏற்பாடுகள் குறித்து விரிவாக தெரிவிக்கும் நோக்கத்துடன் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம் மொழிகளில் தனித்தனியாக வெளிவருகின்ற சமய மாத இதழ் “ஸப்தகிரி”. திருமலை ஸ்வாமி ஆலயத்தோடு, தேவஸ்தானத்திற்குட்பட்ட ஆலயங்களின் தகவல்கள், வேதங்கள், உபநிஷத்துக்கள், பிற ஆலய சிறப்புகள், பாரதம், பாகவதம், இராமாயணம், பகவத்கீதை சம்பந்தப்பட்ட விஷயங்கள், விசேஷங்களை “ஸப்தகிரி” வாசகர்களுக்கு தெரியப்படுத்துகின்றது. இவை மட்டுமின்றி விரதங்கள், நோன்புகள், பண்டிகைகளின் முக்கியத்துவத்துடன் சங்கீதம், ஓவியம், சிற்பம்... போன்ற கலைகளைக் குறித்தும் சிறப்பாக விழிப்புணர்வை அளிக்கின்றது எ(உ)ங்கள் சமய மாத இதழ் “ஸப்தகிரி”.


இவ்வாறாக ஆன்மீக, கலாச்சார பாதையில் பயணம் செய்கின்ற “ஸப்தகிரி” பத்தரிக்கை 49 ஆண்டுகள் கடந்து இந்த இதழ் மூலம் “50”வது ஆண்டில் அடி எடுத்து வைக்கின்றது. இது வாசகர்களாகிய உங்களால் சாத்தியமானது.

பத்திரிக்கை வெளியிடும்போது, பல்வேறு விதமான தலைப்புகள், முக சித்திரம் இதுபோன்ற அனேக அம்சங்களுடன் “ஸப்தகிரி”யை மெருகூட்டி மேலும் அழகாகவும், மற்றும் வாசகர்களுக்கும், பக்தர்களுக்கும் மேன்மேலும் சேவை செய்ய வேண்டும் எனும் உன்னத லட்சயத்துடன் திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் சிறப்பான முறையில் முயற்சியை மேற்கொண்டுள்ளது. மாதாமாதம் தங்கள் இல்லங்களுக்கு வரக்கூடிய “ஸப்தகிரி” சமய மாத இதழை, ஏழுமலையானின் மறுவடிவமாகவும், பிரசாதமாகவும் பாவிக்கும் பக்தர்களும், வாசகர்களும் “ஸப்தகிரி” வளர்ச்சிக்கு தங்களுடைய ஒத்துழைப்பையும், மேன்மையான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் அவ்வப்போது அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அவற்றினை கட்டாயம் கடைப்பிடிப்போம் என்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

எம்பெருமானின் பரிபூரண அனுகிரகத்துடன் “ஸப்தகிரி” 50ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இச்சுபவேளையில் தங்களோடு தங்கள் உறவினர் நண்பர்களுக்கு “சந்தா” செலுத்தி திருவேங்கடமுடையானின் பிரசாதமாக “ஸப்தகிரி”யை அளியுங்கள். மற்றவர்களையும் சந்தாதாரர்களாக ஆக்குங்கள்.

திருவேங்கடமுடையானின் பக்தி பிரச்சாரத்தில், சனாதன இந்து தர்ம பிரச்சாரமே உயிர் மூச்சாகக் கொண்டு முன்செல்லும் உங்கள் “ஸப்தகிரி” பத்திரிக்கையின் வளர்ச்சியில் நீங்களும் பங்கு கொண்டு, கடந்த காலத்தை விட மேலும் உற்சாகத்தோடு ஊக்கமளிக்கக் கோரி, ஈரேழு லோகங்களிலும் ஈடு இணையற்ற இவ்வெம்பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கிறோம்.





# திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்

இறைவனிடமிருந்து அனைத்து ஐச்வர்யங்களும் கிடைக்க, அவரது அர்ச்சா மூர்த்தியை பிரதிஷ்டை செய்து முறையாக பூஜை செய்து, வழிபட்டு வருவதே சிறந்த முறையென்று நம் வேதங்கள் கூறுகின்றன. பகவானின் மூர்த்தியை மூன்று விதமாக பிரதிஷ்டை செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது. அவையாவன : சித்திரா, சித்ரார்தகா மற்றும் சித்ரபாஷா. அனைத்து அங்கங்களுடைய பகவானின் உருவச் சிலையை "சித்திரா" என்றும், பாதியாக தென்பட்டால் "சித்ரார்தகா" என்றும், உயர்ந்த சுவற்றில் பகவானின் உருவம் வரையப்பட்டிருந்தால் "சித்ரபாஷா" என்றும் கூறுவர் (ஸமூர்தா 18,11–3). முதல் வகையான சித்திராவை : மஹாங்கம் – அங்கம் – உபாங்கம் – ப்ரத்யங்கம் என்று நான்காகப் பிரித்துள்ளனர்.

**மஹாங்கங்கள் :**

கண்டா–உதரா–ஷிரா–தக்ஷ–பாஹு–கோஷ்டா–ஊரு–பாணி–கடி–ஜங்கம்; அங்கங்கள் : நேத்ரா–நாஸ–ஓஷ்டா–காலு–கர்ணா–அங்குலி; உபாங்கங்கள்: கேஷா–ரோமா–நகா; ப்ரத்யங்கங்கள் : மகுடா–பூஷணா–அம்பரா–சங்கா–சக்ரா, ஷிரஸ்சக்ரா–பாதமத்மாயுதா–பீடா–ப்ரபசத்ரா (க்ரியா 23,80–2)

மேற்கூறிய அங்கம், உபாங்கம் மற்றும் ப்ரத்யங்கங்களோடு செதுக்கப்பட்ட சிற்பத்தை முறையாக கோயிலில் பிரதிஷ்டை செய்து அம்மூர்த்திக்கு தினமும் பூஜை, அபிஷேகம் முதலிய அனைத்து சேவைகளையும் தவறாமல் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்து வரும் போது அதனாலோ அல்லது வேறு காரணங்களினாலோ பகவானின் வடிவத்தில் ஏதேனும் மாற்றம் வந்தால் அதற்கு பிராயர்ச்சித்தமாக சாந்தி மந்திரங்கள் மற்றும் துல்ய ஹோமத்தோடு பழுது பார்த்து சரி செய்து புணர் பிரதிஷ்டை செய்ய வேண்டும்.

மூர்த்தியின் மஹாங்கத்திற்கு பழுது பார்க்க முடியாதவாறு ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அதனை பூமியில் புதைத்து அவ்விடத்தின் மீது ஹோம குண்டம் நிறுவி, "அங்கஹோமம்" முதலிய அனுட்டானங்கள் செய்து, அம்மூர்த்தியைப் போல வேறொரு உருவச் சிலையை அதே புனித பொருட்களின் மூலம் செதுக்கி புணர் பிரதிஷ்டை செய்ய வேண்டும்.

ப்ருகு மகரிஷியின் "க்ரியாதிகாரம்" என்னும் நூலில், அங்கம்–உபாங்கம்–மஹாங்கம்–ப்ரத்யங்கம் முதலியவை பகவானின் மூர்த்தியை பாதுகாக்கவும், நித்ய பூஜை மற்றும் அபிஷேகத்தால் ஏதேனும் மாற்றம் வந்தால் அதனை சரிபடுத்த ஒரு விதியையும் கூறுகின்றது. அவ்விதி முறையே ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவம். இதனை சுகந்த தைல சமர்ப்பணோத்ஸவம் (சுகந்த தைலங்களால் செய்யக் கூடிய அபிஷேகம்) என்றும் கூறுவர். இவ்வுத்ஸவத்தின் முக்கிய பகுதியான பகவானுடைய மூர்த்திக்கு கவசம் சார்த்தும் நிகழ்ச்சியைப் பற்றி பார்க்கலாம்.

இவ்வுத்ஸவம் ஜ்யேஷ்ட (ஆனி) மாதத்தில் ஜ்யேஷ்ட நக்ஷத்திர நாளன்று செய்ய வேண்டும். இதற்காகவே நிறுவப்பட்ட சிறப்பு பௌண்டரீக ஹோம

தெலுங்கு மூலம் : திருமதி. உத்தரபல்குனி, திருப்பதி.
தமிழாக்கம் : திருமதி. பா.காயத்ரி, கேரளா.

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. குலசேகர ஆழ்வாரின் அவதார ஸ்தலம் ஏது?
2. திருமங்கை ஆழ்வாரின் அவதார திருநட்சத்திரம் எது?
3. பூங்கோவல் நாச்சியார் என்னும் திருநாமத்துடன் தாயார் சேவை சாதிக்கும் திவ்ய தேசம் எது?
4. பெருமாளுக்கு உப்பில்லாத பிரசாதம் நிவேதனம் செய்யப்படும் திவ்ய தேசம் எது?
5. பெருமாளுக்கு "முனையதரன் பொங்கல்" நிவேதனம் செய்யப்படும் திவ்யதேசம் எது?
6. கஜேந்திரன் என்னும் யானைக்கு பெருமாள் அருள் புரிந்த திவ்ய தேசம் எது?
7. தாமாகவே தோன்றிய பெருமாளின் ஸ்தலங்கள் எத்தனை?
8. நடுநாட்டில் உள்ள திவ்ய தேசங்கள் எத்தனை?
9. திருமழிசை ஆழ்வார் அருளிய பாசுரங்கள் எத்தனை?
10. தசரத ராமச்சரிதம் இயற்றியவர் யார்?

விடைகளுக்கு 12ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்

குண்டத்தில் சப்யாக்னியை மூட்டி கூர்ம (ஆமை) பீடத்தில் அமர்ந்திருக்கும் அர்ச்சகர் இவ்விதியை நடத்துவார். இப்பௌண்டரீக ஹோம குண்டத்தில் மஹா சாந்தி ஹோமமும், கடைசியாக பூர்ணஹுதியோடு கூடிய அஷ்டஹோம க்ரியையும் செய்யப்படும். கவச விதியோடு சம்பந்தப்பட்ட அனைத்து பூஜைகளும் நடத்தப்படும். பகவானுக்கு நித்ய பூஜைகளும், பாயசம் முதலிய மஹாவிஸ்சை நிவேதனம் செய்ய வேண்டும், க்ஷமா மந்திரங்களோடு கூடிய வழிபாடுகளும் செய்து பிரம்ம கோஷத்தோடு சாந்தி வாக்கியங்கள் ஒலிக்க பூஜைகள் பூர்த்தியாகின்றன. இந்த ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவத்தின்போது வைகானச விதிப்படி மூன்று நாட்கள் வைரம், முத்து மற்றும் தங்க கவசங்கள் திருமலையப்ப ஸ்வாமிக்கு அணிவிப்பது, உலக நன்மைக்கு வழி வகுக்கும் என்று கூறுவர். இப்போது ஜ்யேஷ்டாபிஷேக விதிமுறைகளைப் பற்றிப் பார்க்கலாம்.

திருமலையில் மூலமூர்த்தி வடிவில் உள்ள திவ்வியமான சாந்நித்திய சக்தியை கௌதுப பேரமாக உள்ள விக்ரகத்தில் நித்யம் ஆவாஹணம் பண்ணி விதிப்படி ஆராதனை செய்ய வேண்டும் என வைகானச ஆகமம் சொல்கிறது.

இக்கௌதுப பேரமான போக ஸ்ரீநிவாச மூர்த்தியின் வெள்ளி விக்ரகம் கி.பி.614ஆம் ஆண்டு பல்லவ ராணி சாமவை பெருந்தேவியால் திருமலை கோயிலுக்கு அளிக்கப்பட்டதாகும். பின்னர், 1339ஆம் ஆண்டு ஸ்ரீதேவி பூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமியின் பஞ்சலோக விக்ரகம் கோயிலில் பிரதிஷ்டிக்கப்பட்டது. ஸ்நபன பேரமாக (அபிஷேக மூர்த்தி) உபயதேவியருடன் உக்ர ஸ்ரீநிவாச மூர்த்தியும், பலி பேரமாக (காவல் மூர்த்தி) ஸ்ரீகொலுவு ஸ்ரீநிவாசமூர்த்தியும் காட்சியளிக்கிறார்கள்.

"நித்ய கல்யாணம் பச்சை தோரணம்" என்ற வாக்கிற்கேற்ப ஸ்வாமிக்கு வைகானச ஆகம விதிமுறைபடி அபிஷேகம், பவித்ரோத்ஸவம் முதலிய 470 உத்ஸவங்கள், 365 நாட்களும் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

இவ்விதமாக பல்வேறு அபிஷேகங்கள் நடைபெறுவதால் மூர்த்தியில் மாற்றங்கள் ஏற்படும். இதற்கு தீர்வாகவே, 9ஆம் நூற்றாண்டிலிருந்து உபயதேவியருடன் ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவம் ஆகம விதிப்படி கடைபிடித்து நடத்தப்படுகின்றது. ப்ருகு மகரிஷியின் "ப்ரகிரீர்ணாதிகார" என்னும் நூலின்படி, மூன்று நாள் தைலாபிஷேக உத்ஸவமான இந்த ஜ்யேஷ்டாபிஷேகம், ஜ்யேஷ்ட மாதத்தில் ஜ்யேஷ்ட சுக்ல திரயோதசியில் துவங்கி ஜ்யேஷ்ட சுக்ல சதுர்த்தசி ஜ்யேஷ்ட நக்ஷத்திர பௌர்ணமியன்று நிறைவு பெறுகிறது. இவ்வுத்ஸவத்திற்கு 15 நாட்கள் முன்னதாகவே உற்சவ மூர்த்திகளான ஸ்ரீதேவிபூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமியின் (கடந்த ஆண்டு சார்த்தப்பட்ட) தங்கக் கவசம் கழற்றி வைக்கப்படும்.

இவ்வுத்ஸவத்தின் தலைமை அர்ச்சகரான கங்கன பட்டர் என்பவரே பகவானின் உத்ஸவ மூர்த்தியின் தங்க

கவசத்தை "பரிலிகிதா" எனும் மந்திரத்தைக் கூறி நீக்குவார். பின்னர் மூர்த்தியில் ஏதேனும் பிளவோ, மாற்றமோ இருந்தால் அதை ஒரு சிறந்த சிற்பியின் மூலம் சரிபடுத்த வேண்டும்.

ஜ்யேஷ்டாபிஷேகத்தின் முதல் நாள், நண்பகல் பூஜைக்குப் பிறகு உபயதேவிமார்கள் உடனுறை திருமலையப்ப ஸ்வாமி விமான பிராகாரத்தில் உலா வந்து பின், சம்பங்கி பிராகாரத்தில் 108 குட "அஷ்டோத்ர சத கலச ஸ்நபன திருமஞ்சனம்" ஜ்யேஷ்ட சுக்ல திரயோதசியில் துவங்கி ஜ்யேஷ்ட சுக்ல சதுர்த்தசி வரை நடைபெறும். பின்னர், எம்பெருமானும் திருமலையிலுள்ள கல்யாண மண்டபத்தில் எழுந்தருளுவார். அங்கிருக்கும் அக்னி குண்டத்தில் வேத பாரம்பரியத்தின்படி தேவதா பிரார்த்தனை, விஷ்வக்சேன ஆராதனை, ஸ்வஸ்தி புண்யாஹவசனம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் மற்றும் அக்னி ப்ரணயனம் முதலிய அனுஷ்டானங்கள் செய்யப்படும்.

இவ்வழிபாட்டின் சங்கல்பத்தை தி.தி.தே. செயலாட்சித்தலைவர் மற்றும் அவரது மனைவியின் பெயரால் செய்யப்படும் . மூன்று 4×9 வரிசைகளில் 108 குடங்கள் வைத்து பிரதான குடத்தில் வருண தேவனை ஆவாஹித்து பின்னர் பிரதான ஆஹுூதி, ப்ராயசித்த விதி என கடைசியில் பூர்ணாஹுூதியுடன் முடிவு பெறும். பிறகு, உத்ஸவ மூர்த்திகளுக்கு பால், தயிர் என 12



திவ்ய திரவியங்களால் ஸ்நபன திருமஞ்சனமும், மாலையில் உபயதேவிமார்கள் உடனுறை திருமலையப்ப ஸ்வாமி வைர கவசத்துடன் நான்கு மாட வீதிகளில் உலா வருவார். இதே போன்று இரண்டு நாட்களும் 108 குடங்களில் ஸ்நபனமும் பின் முத்து மற்றும் கடைசி நாள் காலையில் தங்கக்கவசம் அணிவிக்கப்பட்டு எம்பெருமான் காட்சியளிப்பார்.

ஸ்நபனத்தின் பாகமாக ஹோமங்கள் முடிந்தபின், "தங்கக் கவசம்" பஞ்ச கவ்யம் மற்றும் வாஸ்து சுத்தி முறையால் சுத்திகரிக்கப்பட்டு உத்ஸவ விக்ரகமான திருமலையப்ப ஸ்வாமி மற்றும் தேவியர்களுக்கு, "விஷ்ணோம்நகம்..." என மந்திரங்கள் ஒலிக்க அணிவிக்கப்படும். இந்த ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவத்தில் மட்டுமே ஸ்வாமி தனது நிஜ உருவில் எவ்வித கவசமுமின்றி பக்தர்களுக்கு காட்சியளிப்பார். இவ்வுத்ஸவத்தின் போது மட்டுமே பகவானுக்கு அடி முதல் முடி வரை அபிஷேகம் செய்யப்படும்.

ப்ருகு மகரிஷியின் "ப்ரகீர்ணாதிகார" என்னும் நூலின்படி இந்த ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவத்தின் குறிக்கோள் பகவானின் நிஜ உருவத்தையும், அவரது தங்கக்கவசத்தையும் பாதுகாப்பதேயாகும். இவ்வுத்ஸவத்தின் கடைசி நாளான மூன்றாம் நாள் ஸ்வாமிக்கு விசேஷ தைலம் மற்றும் சந்தனப்பொடி சமர்ப்பிக்கப்பட்டு பின், தங்கக் கவசமும், வெள்ளை ஆடையும் அணிவிக்கப்படும்.

எனவே முற்கூறியவாறு, பக்தர்கள் அனைவரும் இக்கோலாகலமான உத்ஸவத்தில் பங்கு பெற்று பகவானின் அருளையும், அனைத்து நலன்களையும், வளங்களையும் பெறுவார்களாக.

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

**வாசகர்களுக்கு அறிவிப்பு!!**

**"ஸப்தகிரி பொன்விழா மலர்"**

**கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன**

தி.தி.தே. சமய மாத இதழான ஸப்தகிரி கலியுக கண் கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின் வைபவத்தையும், திருமலை குறித்தும் பிரதி மாதம் தவறாமல் வாசகர்களுக்கு வழங்குகிறது. ஆறு மொழிகளிலும் வெளி வருகின்ற ஆன்மீக, அறநெறி பத்திரிக்கைகளில் முன்னிலையில் உள்ள இவ்விதழ் 50வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இச்சுப வேளையில் ஒரு சிறப்பு இதழை வெளியிட ஸப்தகிரி கருதுகிறது. ஆதலால் வாசகர்கள் ஸப்தகிரி குறித்து தங்கள் அனுபவங்களை எழுதி எங்கள் அலுவலகத்திற்கு அனுப்புங்கள் அவற்றை பரிசீலித்து ஸப்தகிரியில் பிரசுரிக்கப்படும்.

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி : பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், தி.தி.தே. அச்சக வளாகம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி–517 507. கட்டுரைகளை தட்டச்சு செய்து tamilsapthagiri50years@gmail.com என்ற இ–மெயிலிற்கு அனுப்பவும்.

– பிரதான ஆசிரியர்

# விண்ணோர் தொழும் வேங்கடம்

திருமதி. பட்டம்மாள் ஜெகந்நாதன்,
அம்பத்தூர்

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் திருவேங்கடமுடையான். திருமலையில் எழுந்தருளியுள்ள அந்த வேங்கடவனை *''வேங்கடமே விண்ணோர் தொழுவதும்''* என்று தன் நான்முகன் திருவந்தாதி மூலம் பாசுரம் செய்த திருமழிசையாழ்வாருடைய பாசுரத்தாலும், *''விண்ணவரும், மண்ணவரும் விரும்பும் வெற்பு''* என்ற வேதாந்த தேசிகரின் பாசுரத்தாலும் திருவேங்கடமுடையானுடைய பெருமையையும் அவர் எழுந்தருளியுள்ள திருமலையின் பெருமையையும் பார்ப்போம்.

பகவான் திருமலையில் நின்று கொண்டு நமக்கு அருள் பண்ணுகிறார். திருமலையிலே ஸ்ரீநிவாஸன் என்றாலே அவனுடைய பெருமை தனி. அது எப்படிப்பட்ட ஒரு ஈர்ப்பு என்றால் அவனுடைய திருநாமத்தை சொன்ன மாத்திரத்திலே எங்கிருந்தாலும் நமக்கு அவனுடைய தரிசனம் கிடைத்து விடும். அப்படிப்பட்ட ஈர்ப்பு எம்பெருமான் திருவேங்கடமுடையானுக்கு மட்டுமே உண்டு. அவனுக்கு பேசும் தெய்வம் என்றும் பெயர். நினைத்த நேரத்தில் கண்ணை மூடி பிரார்த்தனை பண்ணினால் அவன் நமக்கு ஏதோ ஒரு வடிவில் தரிசனம் தருவார்.

ஸ்ரீவைஷ்ணவத்தில் மொத்தம் 108 திவ்ய தேசங்கள். அவற்றில் 106 தேசங்கள் பூலோகத்தில் உள்ளன. 107வது பரமபதம். 108வது ஸ்ரீவைகுந்தம். இந்த 106 திவ்ய தேசங்களும் செல்ல முடியாதவர்கள் கூட பூலோகத்தில் இருக்கின்ற மூன்று திவ்ய தேசங்களை சேவித்தாலே 106யும் சேவித்த பலன் கிடைக்கிறது. அவை கோயில் (ஸ்ரீரங்கம்), திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சிபுரம்) ஆகும். இவற்றில் நடுநாயகமாக விளங்குவது திருமலை. மலைக்கு முக்கியத்துவம். அதனால் எம்பெருமான் வீற்றிருக்கின்ற மலைக்கு சாந்நித்யம். ஆகவே திருமலை என்று பெயர்.

முப்பத்து முக்கோடி தேவதைகளும் கோபுர வாசலில் நின்று கொண்டு பெருமாளை வணங்குகின்றனர். பாகவதோத்தமர்கள் சரணாகதி பண்ணிக் கொண்டு, பெருமாளுக்கு மிக அருகில் இருந்து கொண்டு வணங்கி ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள்.

கல்யாண உத்ஸவம் பண்ணுகிற திருமலையப்ப ஸ்வாமி ஸ்ரீதேவி பூதேவி சமேதராய் இருக்கின்றார். பகவான் கண்ணன் ருக்மிணி பிராட்டி சமேதராய் எழுந்தருளியிருக்கின்றார். நவநீத கிருஷ்ணன் இருக்கிறார். போக ஸ்ரீநிவாஸர், யோக ஸ்ரீநிவாஸரும் வீற்றிருக்கிறார்கள்.

இனி திருமழிசையாழ்வாரின் பாசுரங்களை கவனிப்போம்.





*"வேங்கடமே விண்ணோர் தொழுவதும்
மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினை நோய் தீர்ப்பதுவும் -
வேங்கடமே
தானவரை வீழத்தன்னாழிப்படை தொட்டு
வானவரைக் காப்பான் மலை"*

நான்முகன் திருவந்தாதி (48)

நித்திய சூரிகள் பகவானின் எளிமைக் குணங்களை இங்கு வந்து அனுபவிக்க வேண்டி திருமலையில் வந்து தொழுகின்றனர். நமக்கு வரும் துன்பங்கள் :

ஆதி ஆத்மீகம் : தலைவலி, காய்ச்சல், காமம், பொறாமையால் ஏற்படும் துன்பம்.

ஆதி பௌதிகம் : பிசாசு, கொடிய விலங்குகளால் ஏற்படுவது.

ஆதி தெய்வீகம் : இடி, மின்னலால் உண்டாகும் பெரிய துன்பங்கள்.

தேவர்களுக்கு அசுரரால் ஏற்படும் துன்பங்களைத் திருசக்கரத்தால் தொலைத்துக் காத்தருளும் எம்பெருமான் நம் போன்ற அடியார்களுடைய துன்பங்களைத் தொலைத்தருள பெருமான் எழுந்து அருளி இருக்கும் இடம் திருமலையாகும் என்கிறார்.

மேலும் தன் 39வது பாசுரம் முதல், 47வது பாசுரம் வரை அவர் திருமலையை அனுபவித்த விதத்தை நாமும் அனுபவிப்போம். "திருமலையில் உள்ள அருவிகளிலிருந்து கொட்டும் ரத்தினங்களின் ஒளியை நெருப்புச் சுவாலையாக எண்ணிப் பிரமித்து யானைகள் பயந்து நிற்கவும், மலைப்பாம்புகள் அந்த இரத்தினங்களை மின்னல் எனக்கருதி மயங்கி புற்றில் போய் மறையும். அத்தகைய பெருமை மிக்க திருமலையை வணங்குகிறேன்" என்கிறார்.

சாத்திரங்கள் எம்பெருமானுக்கு வலை. அவ்வெம்பெருமான் திருவடிகள் நமக்கு வலை. அப்பேர்பட்ட எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருமலையை வணங்குகிறேன் என்கிறார்.

அருவிகளின் மூலமாக முத்துக்கள் உதிர திருவோணத் திருநாளில் திருப்பல்லாண்டு, வேத பாராயணம் ஆகியவற்றின் ஒலி அதிரப் பெற்ற, பக்தர்கள் விரும்பி வந்து சேரப் பெற்ற திருமலையை இருப்பிடமாகக் கொண்ட பெருமாள் என் உள்ளத்தில் வந்து விட்டாலும் அத்திருமலையை சென்று சேவிக்க விரும்புகிறேன் என்கிறார்.

தாமரையில் பிறந்த பிரம்மனும், சிவனும் எல்லா காலத்திலும் பெருமானது திருவடிகளிலே தாமரை மலர்களை சமர்ப்பித்து துதி பாடுகிறார்கள். அப்பேர்பட்ட திருமலை தன்னை அடைந்தவர்களது பாவங்கள் அனைத்தையும் ஒழிக்கும். ஆகவே அம்மலையை வணங்குவது முக்கியம்.

வேம்+கடம். வேம் – பாவம், கடம் – எரித்தல்.

மேக மண்டலத்தைத் தொடுகிற சிகரத்தை உடைய திருமலையில் எம்பெருமானுக்கு பிரம்மனும், சிவனும் திருமுத்துக்குடை முதலிய உபகரணங்களைக் கொண்டு தினந்தோறும் திருவந்திக்காப்பிடுகின்றனர். அத்தகைய திருமலையை சென்று சேவிப்போம்.

முன்பு இராவணன் தனது பத்துத் தலைகளையும் மறைத்துக் கொண்டு பிரம்மனிடம் வரம் வேண்ட, அப்போது பெருமாள் ஒரு சிறு குழந்தையாகி அப்பிரம்மனுடைய மடியில் கிடந்து "இவன் பத்துத் தலைகளை உடைய இராவணன். தன் வடிவை மறைத்துக் கொண்டு உன்னை வஞ்சித்து வரம் வேண்டிப் பெற வந்திருக்கிறான். நீ வரம் அளித்தால் பெருந்தீங்காக முடியும்" என்று தெரிவிப்பது போன்று தனது திருவடியால் பத்துத் தலைகளையும் எண்ணிக் காட்டினான். அப்பேர்பட்ட கருணைக்கு பாத்திரமான எம்பெருமான் வசிக்கும் திருமலை சென்று வணங்குவோம் என்கிறார்.

குளிர்ந்த அருவிகளை உடையதான திருமலையே நித்திய சூரிகளுக்கும் நிலத்தேவரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் நிதியாய் இருக்கும். யானையானது தம் தும்பிக்கையால் சந்திரனை பிடித்து திருவேங்கடமுடையானுக்கு மங்கல விளக்காக அவர் திருமுன்பு வைக்க எப்போதும் தன் தும்பிக்கையை தூக்கிய படி இருக்கும். திருமலையில் பிறக்கப் பெற்ற பெருமையினால் அதற்கு



## 68. சாஸ்த்திர நீதிகள் :

அர்த்தா க்ருஹே நிவர்த்தந்தே
ச்மசான மித்ர பாந்தவா: |
சுக்ருதம் துஷ் க்ருதம் சைவ
கச்சந்தே மனு கச்சதி ||

தர்மங்களை தெரிந்து கொண்டு அதை செய்யாமல் பதுக்கி வைத்துள்ள பொருள்கள், உடலை விட்டு உயிர் பிரிந்து செல்லும் போது, கூடவே வராது! எங்கு பதுக்கி வைத்து இருக்கிறோம் என்பதை மனைவி, மக்களிடம் சொல்லாவிட்டால் வேறு யாரிடமாவது அகப்பட்டு அவர்கள் சுகப்படுவார்கள். பந்துக்களும் மனைவி, மக்களும் பூலோகத்திலே காடு வரையிலுமே வரமுடியும். நாம் செய்துள்ள புண்ணியமும், பாபமும் மட்டுமே நம்முடன் தொடர்ந்து வந்து உதவும். ஆகையால் சிறந்த தர்மத்தை, தனது வாழும் காலத்தில் செய்வதே நன்மைகளை உண்டு பண்ணும்!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.

இப்படிப்பட்ட நற்கருத்து ஏற்பட்டது. அப்பேர்பட்ட திருமலையை நாட்டிலுள்ளார் அனைவரும் வலம் வந்து மகிழ்ச்சியின் காரணமாக நர்த்தனம் செய்தல் நலம் என்கிறார்.

ஸ்வாமி தேசிகன் இங்கு திருவேங்கடமுடையான் திருமலையாகவே நிற்கின்ற நிலையைப் பார்த்தார். திருமலை யாத்திரை என்றால் முதலில் நாம் தியானம் பண்ண வேண்டியது அந்தத் திருமலையைத் தானே! நாம் அந்த மலையை நினைத்து விட்டால் போதும். அந்த மலையை ஒரு தடவை தொட்டாலே போதும். திருமலை என்று வாயால் சொன்னாலே போதும். இனி பாசுரம் பார்ப்போம்.

*“ கண்ணன் அடியிணை எமக்குக் காட்டும் வெற்பு*
*கடுவினையை இருவினையும் கடியும் வெற்பு*
*திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு*
*தெளிந்த பெருந்தீர்த்தங்கள் செறிந்த வெற்பு*
*புண்ணியத்தின் புகலிதெனப்புகழும் வெற்பு*
*பொன்னுலகில் போகமெலாம் புணர்க்கும் வெற்பு*
*விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு*
*வேங்கட வெற்பென விளங்கும் வேதவெற்பே.”*

திருவேங்கடமுடையானை விட அங்கு மலைக்குத் தான் முக்கியத்துவம். மலையை நாம் முதலில் சரணாகதி பண்ண வேண்டும். ஏனென்றால்,

1) பகவானின் திருவடியை நமக்கு காட்டுகிறது.
2) நம்முடைய இருவினைகளையும் தீர்க்கிறது.
3) நமக்கு மோட்சத்தை தருகிறது.
4) பெரும் தீர்த்தங்களை உடையது.
5) நமக்கு புண்ணியத்தை தருகிறது.
6) எல்லா போகங்களையும் தருகிறது.
7) விண்ணவர்களும் மற்றவர்களும் எல்லோரும் விரும்பி வணங்குகிறார்கள்.
8) வேதம் அனைத்துக்கும் மலையாக விளங்கும் மலை.

திரேதாயுகத்தில் இராமாவதாரத்தில் ஏற்பட்ட குறை தீர பகவான் துவாபர யுகத்திலே கண்ணனாக அவதாரம் பண்ணினான். கிருஷ்ணாவதாரத்திலே ஏற்பட்ட குறை தீற கலியுகத்திலே விக்ரக வடிவில் ஸ்ரீநிவாஸனாக அர்ச்சா வதாரத்திலே இருக்கின்றான். மூன்று வடிவத்துக்கும் ஓர் ஐக்கியம் உண்டு. ஆகவே சுவாமி தேசிகர் ஸ்ரீநிவாசரின் அடியினை கண்ணன் அடியினை எமக்குக் காட்டும் வெற்பு என்று கூறி இருக்கிறார்.

இவ்வாறாக ஆசாரியர்களாலும் ஆழ்வார்களாலும் பாசுரம் பெற்று சிறந்து விளங்கும் திருமலையையும் அதில் நின்று கொண்டு அருள்பாலிக்கு ஸ்ரீநிவாசனையும் வணங்கி போற்றி அவன் அருள் பெறுவோம்.

## சிறுவர் பகுதி விடைகள்

1. திருவஞ்சிக்களம்.
2. கார்த்திகை - கிருத்திகை.
3. திருக்கோவலூர்.
4. திருவிண்ணகர் - ஒப்பிலியப்பன் கோயில்.
5. திருக்கண்ணபுரம்.
6. திருக்கபிஸ்தலம்.
7. 8.
8. 2.
9. 216.
10. தண்டி.

தொகுப்பு : என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 34

**இடமிருந்து வலம்**

1. ஏறுதிருவுடையான் எங்குள்ளான்... (8)
13. ஸ்ரீரங்கம் காவிரித் துறையின் பெயர் .....(8)
15. திருப்பதி மலையில் முதலில் தரிசிக்க வேண்டியது....(7)

**வலமிருந்து இடம்**


9. கண்ணனின் தந்தை பெயர்....(5)
17. சந்ததி உண்டாக புரட்டாசி வளர் பிறை அஷ்டமியில் மேற்கொள்ள வேண்டிய விரதம்....(10)
18. விஷ்ணுவின் மனைவியான நீலா தேவியை பாடியவர்....(9)

**மேலிருந்து கீழ்**

1. நிலவுலகில் காணமுடியாத திவ்ய தேசம்...(8)
2. ராமர் ஜடாயுவுக்கு தன் கையாலேயே ஈமச் சடங்கு செய்த ஊர்....(5)
3. முனியோதரன் பொங்கல் என்கிற நைவேத்யம் இங்கு விசேஷம்....(9)
4. தசாவதாரத்தில் ஆறாவது அவதாரம்...(10)
5. புத்திர காமேஷ்டி யாகத்தில் தசரதருக்கு யக்னேஷ்வர் கொடுத்தது....(4)
6. ஆடி மாதத்தில் முதல் நாள் சூரியன் கடக ரேகையில் பிரவேசிப்பதை .....(7) என்கிறோம்.
8 தேவர்களும், அசுரர்களும் பாற்கடலை கடைந்தபோது வெளிப்பட்ட பசுக்களில் ஒன்று...(3).
12. இராமானுஜர் மிகச் சிறந்த...(4)யாக விளங்கினார்.
13. ஆனி மாதம் தேய்பிறையில் வரும் ஏகாதசி... (3)

**கீழிருந்து மேல்**

7. இராமானுஜர் அவதரித்த தமிழ் மாதம்.......(4)
8. சூரியனின் மகனாகக் கருதப்படும் வானர வீரன்....(5)



தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.

விடைக்கு 50 ம் பக்கம் பார்க்கவும்.

10. 300 அடி நீளமுள்ள ஒரு மலைக்குகையில் நரசிம்மர் கோயில் உள்ள மாநிலம்....(5)
11. இலங்கையில் அனுமன் முதன் முதலாக கால் ஊன்றிய இடம்....(7)
13. திருப்பாணாழ்வார் அருளி செய்த பிரபந்தம்...(8)
14. நெருப்பில் இருந்து லட்சுமி தோன்றியதாக கூறும் நூல்....(9)
16. ஹரே ஹரே கிருஷ்ணா என்று இடைவிடாமல் நாம சங்கீர்த்தனம் தொடர்ந்து நடப்பதை இப்படி அழைப்பர்....(7)

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக்குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன. சந்தேகங்கள் தெளிதல் பகுதிக்கான ஆன்மீக சந்தேகங்கள் வரவேற்கப்படுகின்றன.

–பிரதான ஆசிரியர்



# திருக்கோட்டியூர் நம்பிகளும் எம்பெருமானாரும்



வைணவ குருபரம்பரை நாதமுனிகளிடம் இருந்து துவங்குகிறது. நாதமுனிகளுக்குப் பிறகு வைணவ தரிசனத்தைக் கட்டிக் காத்தவர் சுவாமி ஆளவந்தார். பெயருக்கு ஏற்ப வைணவத்தை ஆளவந்தவர் அவர்.

ஆளவந்தார் தன்னுடைய பல சிஷ்யர்களுள் ஐந்து பிரதானமான சிஷ்யர்களை அழைத்து, எம்பெருமானாருக்கு ஸம்பிரதாயத்தில் உள்ள ஸகல அர்த்த விசேஷங்களையும் கற்றுக் கொடுக்குமாறு நியமித்தார். அந்த ஐந்து பேரில், ரஹஸ்ய த்ரயத்தினுடைய (திருமந்திரம், த்வயம், சரம சுலோகம்) அர்த்த விசேஷங்களைக் கற்றுக் கொடுக்குமாறு திருக்கோட்டியூர் நம்பியை நியமித்தார்.

திருக்கோட்டியூர் நம்பிகள் வைபவம் அற்புதமானது. ஒவ்வொரு வைணவரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியது. ஆசார்யர்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும், அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதையும் கவனித்தாலே போதும்; நாம் பல அரிய விஷங்களைத் தெரிந்து கொள்ளலாம். இதை *"மேலையார் செய்வன"* என்று ஆண்டாளும் *"முன்னோர் மொழிந்த மொழி முறை தப்பாது"* என்று மணவாள மாமுனிகளும் சொல்லியிருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி**

திருக்கோட்டியூர் நம்பி ஆளவந்தாரின் முதன்மை சீடர்களுள் ஒருவராய் விளங்கியவர். வைகாசி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில், காச்யப கோத்திரத்தில், திருமாலின் புண்டரீகத்தின் அம்சமாக, சிவகங்கைக்கு அருகில் திருக்கோட்டியூர் திருத்தலத்தில, குருசேகர் எனும் இயற்பெயரில் அவதரித்தார். கோஷ்டி புரீசர் என்ற திருநாமமும் இவருக்கு உண்டு. ஆளவந்தார் பிறந்து பதினோரு வருடங்களுக்குப் பின் பிறந்தவர். இராமாநுஜரிடம் அளவு கடந்த அன்பு கொண்டவராக விளங்கியவர். எப்போது எல்லாம் இராமாநுஜரைக் காண வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்போதெல் லாம், *"நான் கோயிலுக்கு சென்று வருகிறேன்"* என்று வீட்டில் சொல்லிவிட்டு, இராமாநுஜரை சந்திக்கத் திருவரங்கம் சென்று விடுவாராம். தன் மக்களான தெற்காழ்வான் என்ற ஒரே மகனையும், தேவகிப்பிராட்டி எனும் ஒரே மகளையும் இராமாநுசருக்குச் சீடர்களாக்கி யவர்.

திருக்கோட்டியூர் நம்பி தன் ஆசார்யரான ஆளவந்தாரிடம் கற்று கொண்ட ரஹஸ்ய த்ரயத்தினுடைய (திருமந்திரம், த்வயம் மற்றும் சரம சுலோகம்) அர்த்த விசேஷங்களையே எப்பொழுதும் த்யானித்துக்

கொண்டே இருப்பார். யாரிடமும் பேசாமல் யாருக்கு என் சொல்கேன் என்று இருந்தவர்.

திருக்கோட்டியூரில் வசிக்கும் ஒருவருக்கும் இவருடைய பெருமைகள் தெரியாது. ஸ்ரீராமாநுஜருக்கு பெரிய நம்பிகள் மூலம் இவருடைய பெருமைகள் தெரிந்ததால், மிகவும் ரஹஸ்யமான மந்திர அர்த்த விசேஷங்களைக் கற்றுக் கொள்வதற்காக 18 முறை ஸ்ரீரங்கத்திலிருந்து திருக்கோட்டியூருக்கு நடந்தே சென்றார் என்பது வரலாறு.

ஸ்ரீகண்ணபிரான் கீதையில் அருளிச் செய்த சாரமான வார்த்தை “சரம சுலோகம்”. ***“ஸர்வதர்மான் பரித்யஜ்ய...”*** எனத் தொடங்கும் சரம சுலோகத்தின் பொருளை அறிவதற்காகத் திருவரங்கத்திலிருந்து திருக்கோட்டி யூருக்கு நடைப்பயணமாகச் சென்றார் பகவத் ராமாநு ஜர். ஸ்ரீஇராமாநுஜர் திருக்கோட்டியூர் சென்று அங்கே இருக்கும் கோயிலான சௌம்ய நாராயணப் பெருமாளைச் சேவித்து விட்டு, நம்பியின் திருமாளிகை (வீடு) எங்கே என்று விசாரித்து அதனை நோக்கித் தண்டனிட்டுக் கொண்டே சென்று நம்பிகளிடம் தனக்கு உபதேசம் வேண்டி நிற்க, நம்பியோ ***“இன்னொரு சமயம் பார்க்கலாம்”*** என்று சொல்லி அனுப்பி விட்டார்.

ஏன் அப்படி மறுத்தார் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சரம சுலோகத்தில் முக்கியமான அர்த்த விசே ஷத்தைக் கூறும் வார்த்தை “ஏகம்”. அதாவது பகவான் மட்டுமே ”உபாயம்”. கர்ம, ஞான, பக்தி யோகங்கள் மற்றும் நாம் செய்யும் ப்ரபத்தி (சரணாகதி), மற்ற எதுவுமே உபாயம் அல்ல. இந்த ரஹஸ்யார்த்தத்தைத் தகுதி இல்லாதவர்களிடம் கூறினால், தான் செய்ய வேண்டிய கடமைகளைக் கூடச் செய்யாமல் இருக்க லாமோ என்று தவறாகப் புரிந்து கொள்வார்கள். அதனால் இராமாநுஜருக்கு முன்னால் உள்ள ஆசார்யர் கள் இந்த அர்த்தத்தை ஓராண்வழியாகப் பாதுகாத்து வந்தார்கள். அதனால் நம்பியும் அவ்வளவு எளிதாக இராமாநுஜருக்குச் சொல்ல வில்லை.

கடைசியில் 18வது முறைதான் நம்பி அவருக்குச் சரம சுலோகத்தினுடைய அர்த்த விசேஷத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தார். தகுதி இல்லாதவர்களுக்கும், கற்றுக் கொள்ள வேண்டும் என்று கடுமையான முயற்சி இல்லாதவர்களுக்கும் இதன் பொருளை உபதேசிக்கக் கூடாது. மீறினால் நரகம் புகுவாய்! என்று ஸத்தியம் செய்யுமாறு, நம்பி ஸ்ரீராமாநுஜரிடம் கேட்டார்.

இராமாநுஜரும் அதை ஏற்றுக்கொண்டு, அவருக்கு ஸத்தியம் செய்தார். நம்பி மிகவும் ரஹஸ்யமான சரம சுலோகத்தினுடைய பொருட் சிறப்பை அவருக்குக் கற்றுக் கொடுத்தார்.

ஆனால் ராமாநுஜர் திருக்கோட்டியூர் நம்பியிடம் அர்த்த விசேஷத்தைக் கற்றுக் கொண்ட பிறகு, இதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசையுடைய வர்களை அழைத்து, விளக்கமாகக் கூறினார்.

***“ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறும்”*** என்று பேசி வரம்பறுத்தார் என்று இராமாநுஜரின் அளப்பரிய கருணையை மாமுனிகள் கொண்டாடுகிறார்.


***“ஓராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்***
***ஏரார் எதிராசர் இன்னருளால் - பாருலகில்***
***ஆசை உடையோர்க்கு எல்லாம் ஆரியர்காள்***
***கூறுமென்று***
***பேசி வரம்பறுத்தார் பின்.”***

இதைக் கேள்விப்பட்டவுடன் மிகவும் கோபப்பட்டார் நம்பிகள். இராமாநுஜரை அழைத்து, “ஏன் இப்படி செய்தீர்?” என்று கேட்டபோது, ராமாநுஜர் “தேவரீருடைய ஆணையை மீறியதால் அடியேனுக்கு வேண்டுமானால் நரகம் கிடைக்கும், ஆனால் பலருக்கு மிக உயர்ந்த பரமபதம் கிடைக்குமல்லவா” என்று கூறினார்.

மற்றவர்கள் உய்ய வேண்டும் என்று கருணை யோடு இருக்கும் ராமாநுஜருடைய பரந்த திருவுள்ளத் தைப் பார்த்து நம்பி அவருக்கு “எம்பெருமானார்” என்ற திருநாமத்தைச் சூட்டினார். இந்த இதயம் எமக்கில் லையே என்று கட்டித் தழுவிக் கொண்டார். இந்த வரலாற்றின் சில உட்கூறு களை இனி ஆராய்வோம்.

இராமாநுஜர் திருக்கோட்டியூருக்கு 18 முறை நடந்ததாகக் கூறுகின்றார்களே, 18 முறையும் எந்த உபதேசமும் பெறாமல் திரும்பி வந்தாரா, என்ற ஒரு கேள்வி எழும்.

எந்த உபதேசத்தைப் பெற 18 முறை நடந்தாரோ அந்த உபதேசம்தான் முதல் 17 முறை தரப்பட வில்லையே தவிர திருக்கோட்டியூர் நம்பி ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு “உபதேசமாக” சில ஆத்ம விஷயங்களைக் கூறி இருப்பதாகச் சொல்கிறார்கள்.



**18 முறை பெற்ற விஷயங்கள் வருமாறு :**

1. நம்பியின் முதல் நிபந்தனை "ஸம்ஸார பீஜம் தொலைத்து வாரும்!" என்பது. உய்வதில் ஆசை இருந்தால் வாழ்க்கையில் ஆசை நீங்க வேண்டும். அந்தப் பற்று இல்லை என்று இராமானுஜர் உறுதி செய்து கொண்டார்.

2. அகங்கார மகாரங்கள் நீங்காமல் இருந்தால் உடம்பின் மீது கொண்டிருக்கும் ஆசை நீங்காது. எனவே அது தொலைத்து வாரும் என்றார். அகங்கார மகாரங்கள் நீங்குவதற்கான வலிமை இல்லாவிட்டால் ஆத்ம ஞானம் கிடைக்காது.

3. அடுத்து ஆத்ம ஞானம் பெறும் தகுதி குறித்து பரிசோதித்து வாரும் என்றார். காரணம் ஆத்ம ஞானம் பெறும் விருப்பமின் றேல் சுகமாக வாழ வேண்டும் என்கிற இச்சைதான் நீடிக்கும். உலகியலில் நீடிக்கும் ஆசை நீங்காமல் இறைவனிடத்திலே அன்பு பிறத்தல் என்பது முடியாது.

4. "தேகப்பற்று நீக்கி வாரும்" என்றார். ஆத்ம ஞானம் பெரும் ஆசையிருந்தாலும் தேகப்பற்று அவ்வாசையை அவ்வப்போது தடை செய்யும். ஆத்மா வாட்டத்தோடு இருக்கிறது. அவ்வாட் டத்தை நீக்க வேண்டும் என்கிற உணர்வு வேண்டும். இதை திருமங்கை ஆழ்வார் **"வாடினேன் வாடி வருந்தினேன்"** என்று வருந்துகிறார். தேக வாட்டத்தில் தமக்கு கவலை இல்லை, ஆத்மாவில் தான் நோக்கு என்பதை உறுதி செய்து கொண்ட இராமாநுஜருக்கு ஐந்தாவது உபதேசம் கிடைத்தது.

5. ஆத்ம ஞான அறிவு இருப்பினும் சிலருக்கு தன் ஆன்மாவை தானே அனுபவிக்கும் நோக்கம் இருக்கும். இதற்கு "கைவல் யம்" என்று பெயர். இது அஞ்ஞானத்தை விட மோசம். எனவே கைவல்ய ஆசை போக வேண்டும் என்றார்.

6. இறைவனிடத்திலே நமக்கு அன்பு பிறக்க வில்லை என்றால் நம் வாழ்வின் மீது கொண்ட பற்று நீங்காது. வாழ்வில் உள்ள பற்று நீங்கவில்லை என்று சொன்னால் நாம் இறைவனுக்காக வாழாதவர்கள் ஆகி விடுவோம். ***"நய நயோர் விஷயாந்தராணாம்"*** என்ற திருப்பாணரின் நிலைப்போல இறைவனைத் தவிர்த்த மற்ற விஷயங்களில் தமக்கு என்றுமே பற்றில்லை என்ற உறுதிக்காக உலகப்பற்றை அறுத்துக் கொண்டு வாரும் என்றார்.

7. உலகியலில் ருசி இல்லை. ஆனால் பகவத் விஷயத்தில் ஆசை உண்டா என்று அடுத் துச் சோதிக்கச் சொன்னார்.

8. இவ்வளவு இருந்தும் எதிலும் விருப்பம் இருக்கக் கூடாது. வெறுப்பும் இருக்க கூடாது. எனவே ராக துவேசங்கள் இருக்கக் கூடாதே என்றார்.

9. விருப்பு வெறுப்பு போனாலும் "தான்" என்கிற சுதந்திர உணர்வு அதாவது ஸ்வாதந் திரியம் இருக்கும். அது கூடாது என்றார். பரிபூரணனுக்கே அடிமை கொண்ட தனது பாரதந்திரிய குணத்தை தெளிவுபடுத்தினார் இராமாநுஜர்.

10. இறைவனுக்கு நாம் அடிமை (சேஷ பூதன்) என்ற நினைவோடு வாழ இயலாவிட்டால் நம்மிடத்தில் உள்ள காமம் (பொதுவான ஆசைகள்) நீங்காது. காமம் நீங்கவில்லை எனில் வைணவத்துவம் இல்லை. பத்தாம் முறையாக கோட்டியூர் நம்பி இராமாநு ஜரின் வைஷ்ணவத்துவத்தை பரிசோதித் தார். இராமாநுஜரிடம் வைணவனுக்குரிய பண்புகள் யாவும் அமையப் பெற்றிருக் கின்றமையை உறுதி செய்து கொண்டார். காரணம் வைணவத்துவம் இல்லை என் றால் சாத்வீகம் வராது.

11. "ஸாத்விக பரிக்ரஹம் (நன்மக்களின் அபிமானம்) பெற்று வாரும்!" என்றார்

நம்பி. காரணம் சாத்வீகம் வராது போனால் இறை அடியவர்களின் திருவடிகளில் அன்பு பிறக்காது. பெரிய நம்பி போன்ற பரம ஸாத்வீகர்களின் பேரன் பினைப் பெற்றார் இராமாநுஜர்.

12. சரி; இனி இறைவனின் அடியார்களுடைய திருவடிக ளில் அன்பு கொண்டு வாரும் என்றார். இறை அன்பு இருப்பினும் இறைவனின் அடியார்களிடம் மதிப்பு இருக்காது. அப்படி இல்லாதவர்களுக்கு இறைவன் திருவடிகளிலும் அன்பு இருக்காது. அதையும் பெற்றார் இராமாநுஜர்.

13. பகவானிடம் கொண்ட அன்பை அதாவது உண்மை யான ஆழமான அன்பை இனி சோதிக்க எண்ணினார். காரணம் இறைவனுடைய திருவடிகளில் அன்பு இல்லாவிட்டால் இறைவனுக்குத் தொண்டு செய்ய இயலாத ஒரு நெருக்கடி ஏற்பட்டு விடும். அரங்கனே நம் இராமாநுஜன் என்று கொண்டாடி மகிழ்வதை அறிந்து கொண்டார் கோட்டியூர் நம்பி. அறிந்து மிகவும் மகிழ்ச்சி கொண்டார்.

14. *''நாராயணனே நமக்குப் பறை தருவான்''* என்று சொன்ன ஆண்டாளைப் போல் பிறருக்கு அடிமைப் படாது பகவான் நாராயணனுக்கு மட்டுமே அடிமை கொண்ட உறுதியைச் சோதித்தார் நம்பிகள். இதற்கு சம்பிரதாயத்தில் "அனன்ய சேஷத்வம்" (எம்பெருமான் ஒருவனுக்கே நாம் ஆட்பட்டவர் என்னும் எண்ணம்) என்று பெயர். இதுவும் இராமாநு ஜரிடத்திலே இயல்பாக இருந்தது.

15. இவ்வளவு இருந்தும் மற்ற பலன்களில் அல்லது வேறு குறுக்கு வழிகளில் விருப்பம் இருக்கக் கூடாது. அதாவது அனன்ய ப்ரயோஜனத்வம் கூடாது. எம்பெருமானை அடைவதே ஒரே குறிக்கோள் என் னும் உறுதி வேண்டும். இராமாநுஜரின் இந்த உறுதியையும் அறிந்து கொண்டார் கோட்டியூர் நம்பி.

16. இனி வேறு அனுபவம், ஆனந்தம் கூடாது என்றார். அதாவது "அனன்ய போக்யத்வம்" (எம்பெருமானை அனுபவிப்பதே ஆனந்தம் என்னும் எண்ணம் தவிர மற்ற எண்ணம் இல்லாமை. "உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்" என்ற எண்ணம் வேண்டும். மற்றை காமங்கள் இருக்கக் கூடாது. கண்ணனுக்கே ஆமது காமம் என்ற உணர் வொன்றே இருக்க வேண்டும். இதுவும் இருந்தது.

17. பதினாறு நிபந்தனை ஆகி விட்டது. இவ்வளவு இருந் தும் ஆசாரிய அபிமானம் இல்லாவிட்டால் எதுவும் பலிக்காதே. குருவருள் இல்லையேல் திருவருள் ஏது? ஆசாரிய அபிமானமே உத்தாரகமல்லவா. எனவே "ஆசார்ய அனுக்ரஹம் கிடைத்த பின் வாரும்!" என்றார் நம்பி. (அதாவது கோட்டியூர் நம்பியாகிய ஆசாரியனின் அன்பை பெற்றல்லாது மந்திரப் பொருள் கிடைக்க வழியில்லையே. தன்னைச் சோதிப் பதே தன் மீது கொண்ட அபிமானத்தினால் தான் என்பதை அவருக்கு உணர்த்தினார் இராமாநுஜர்.

இப்படி அவருடைய அபிமானத்தையும் உறுதி செய்து கொண்ட இராமாநுஜர் பதினெட்டாம் முறை யாக சென்ற பொழுது, "அதிகாரி புருஷரே வாரும்; நீரே மந்திரப் பொருள் கொள்ள வேண்டிய ஸத் பாத்தி ரம்; வந்து கொள்ளும் இந்த பொக்கிஷங்களை'', என்று ஆவலோடு அழைத்தார்.

அதாவது மேலே சொல்லப்பட்ட பற்பலத் தகுதி களோடு ஆசார்ய அபிமானமும் பெற்றவருக்கே பகவா னுடைய மந்திரமாகிய மூன்று மந்திரங்களை ஏற்பதற்கு உரிய தகுதி கிடைக்கும்.

எனவே, மூன்று மந்திரங்களைப் பெற மேற்படி குணங்கள் அவசியம்.

இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் ஒவ்வொரு முறை இராமாநுஜரிடத்திலே சொன்ன திருக்கோட்டியூர் நம்பிகள், இதில் பக்குவமடைந்த இராமாநுஜருக்கு, சரம சுலோக மந்திரத்தின் தத்துவத்தைச் சொல்வதற்கு எந்தவிதமான தடைகளும் இனி இல்லை என்ற நிலை யில், அவருக்கு அர்த்த விசேஷங்களையெல்லாம் கொட்டித் தந்தார் திருக்கோட்டியூர் நம்பிகள்.

இது பெரிதல்ல. அப்படி நடையாய் நடந்து பெற்ற மந்திரத்தை ஒரு நொடியில் ஆசையுடையவர்க்கெல் லாம் வாரி வழங்கினாரே, அந்த அருட்கருணைதான் அவரை எம்பெருமானை விடச் சிறந்த கருணை உடைய வர் என்ற பொருளில் எம்பெருமானாராக்கியது.

இராமாநுஜரை வள்ளலாக்கி உலகுக்குத் தந்த வள்ளலின் வள்ளல் திருக்கோட்டியூர் நம்பிகள்.

திருக்கோட்டியூர் நம்பிகள் திருவடிகளே சரணம்.

வாழ்க்கை நெறிகள் தொடரும்...



# ஸ்ரீபிரசன்னவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பளாயகுண்ட்டா

ஏழுமலைகளின் மேல் எழிலாக எழுந்தருளி பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு குலதெய்வமாக விளங்கும் திருமலையப்ப ஸ்வாமி குடிகொண்டுள்ள திருமலை, திருப்பதியிலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் பசுமை எழில் கொஞ்சும் வயல்வெளியுடன் மலை முகடுகளுக்கிடையே இயற்கை எழில் கொஞ்சும் அப்பளாய குண்ட்டா என்ற அழகிய கிராமத்தில் கேட்ட வரங்களை கேட்டவுடனே கொடுக்கும் தெய்வமாக அபய ஹஸ்த முத்திரையுடன் தரிசனமளிக்கிறார் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி.

**தல புராணம் :**

கலியுக துவக்கத்தில் சுமார் 5000 வருடங்களுக்கு முன்னர் நாராயணவனத்தை ஆண்ட ஆகாச ராஜாவின் மகளான ஸ்ரீபத்மாவதி தாயாருடன் திருக்கல்யாணத்திற்கு பிறகு திருவேங்கடவன் ஏழுமலைக்குச் சென்றார். நாராயணவனத்திலிருந்து திருப்பதிக்குச் செல்லும் வழியில் உள்ள மலைப்பகுதியே அப்பளாய குண்ட்டா. யோகிகள் பலர் இருக்கும் இம்மலையில் சித்தையா என்ற முனிவர் ஸ்வாமியை நோக்கி தவம் செய்து கொண்டிருந்தார். அத்தவத்திற்கு மகிழ்ந்து பிரசன்னமானார் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி. அந்த முனிவரின் வேண்டுகோளின்படி ஸ்வாமி அபய ஹஸ்தத்தோடு இந்த மலையின் கீழ் இன்றும் தரிசனமளிக்கிறார்.

ஒரு முறை அப்பலய்யா என்ற யாத்திரிகர் திருமலை செல்லும் வழியில் இப்பொழுது உள்ள அப்பளாய குண்ட்டா இருக்கும் இடத்தில் சிறிது நேரம் ஓய்வு எடுக்கபடுத்தார். பின்னர் அங்கிருந்து திருமலைக்குச் செல்லும் வழியில், தன்னிடம் இருந்த பணப்பையை அங்கேயே மறந்து வைத்தது நினைவிற்கு வர, ஸ்வாமி! ஏழுமலையானே! என் பணம் எனக்கு கிடைத்தால் மக்களுக்கு உதவும் வகையில் அந்த இடத்திலேயே செலவு செய்வேன் என்று வேண்டி கொண்டார். தான் எங்கு உறங்கி இளைப்பாறினாரோ அங்கேயே அந்த பணப்பையும் கிடைத்ததாம். அதனை வைத்து பிரசன்ன வேங்கடாசலபதி கோயிலுக்கு எதிராக ஒரு குளத்தை வெட்டினார். அது அப்பலய்யா தோண்டின குண்ட்டா (குளம்) ஆதலால் அக்குளத்தை அப்பலய்யாகுண்ட்டா என அழைத்தனராம்! காலப்போக்கில் அப்பளாய குண்ட்டா என மாறியது.

**இன்னொரு கதை என்னவெனில்...**

முன்னொரு காலத்தில் அக்கிராம மக்கள் ஸ்வாமி ஆலயத்திற்கு அருகில் ஒரு குளத்தை அமைக்க முன்வந்தனராம்! வேலை ஆரம்பித்த நாளிலிருந்து பணியாட்களுக்கு அந்நாள் கூலி அன்றே கொடுத்தனராம்! இவ்வாறாக கடன் (தெலுங்கில் அப்பு) இல்லாமல் அந்த குளத்தை அமைத்த காரணத்தினால் அது அப்புலேனி குண்ட்டா (கடன் இல்லாத குளம்) என்று அழைக்கப்பட்டதாம். காலப்போக்கில் அது அப்பளாயகுண்ட்டா என்று ஆயிற்று.

தெலுங்கு மூலம் : திருமதி. பி. லலிதா கிருஷ்ணமூர்த்தி.
தமிழாக்கம் : திருமதி. எஸ். வைஷ்ணவி.

மேற்கூறிய இரு கதைகளில் இரண்டாவது உண்மை என கூற லாம். எதற்கெனில் பழங்கால கூலி விதிகள் கல்வெட்டுகளில் "அப்பு லேனி குண்ட்டா" என்ற பெயரோடு அழைக்கப்பட்டது என அறியலாம்.

## சரித்திர நிகழ்வுகள்

சுமார் ஆயிரமாண்டுகளுக்கு முந்தைய கார்வேடி நகர கல் வெட்டுகளில் இந்த அப்பளாய குண்ட்டா கிராமம் இருந்ததாக காண லாம். இவர்களுடைய ராஜ்ஜியத்தில் வாயு மூலையில், தெற்கு மூலை யில் வடஆற்காடு, கிழக்கு திசையில் செங்கல்பட்டு மாவட்டம், ஈசான்ய திசையில் ஸ்ரீகாளஹஸ்தி ராஜ்ஜியம் எல்லையாக அமைந் தன. ஆதலால் திருமலை, திருப்பதி, திருச்சானூர், நாகுலாபுரம், நாராயணவனம், திருத்தணி, சோளிங்கர் போன்ற இடங்களில் உள்ள ஆலயங்கள், திருத்தலங்கள் மற்றும் 900 கிராமங்கள் இவர்கள் எல்லையில் அமைந்தவை என்று அறியலாம்.

அதுமட்டுமில்லாமல் திருமலை, திருப்பதி, திருச்சானூர், அப்பளாயகுண்ட்டா ஆலயங்களின் உத்ஸவங்கள், திருவீதி உலா போன்றவற்றில் கார்வேடி நகரத்தினர் முதன்மை பாத்திரத்தை வகித்தனர். அவர்கள் திருமலையப்ப ஸ்வாமிக்கு ஒரு இரத்தின கிரீடம், சூர்ய கட்டாரி என்ற (நந்தக கட்கம்) நந்தகம் எனும் வாள் சமர்ப்பணம் செய்ததாகக் கூட தெரிகிறது.

கார்வேடி நகர பிரபுக்களில் கடாரி சாளுவ மகாராஜு ஸ்ரீவேங்கட பெருமாள் ராஜு மிகவும் புகழ் பெற்றவர். இவர் திருமலையப்ப ஸ்வாமியின் பரம பக்தர். இந்த அரசன் அப்பளாயகுண்ட்டா பிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு நிலங்களையும், நிதிகளையும் வழங்கி யுள்ளார். உத்ஸவங்கள், திருவீதி உலாக்கள் நிர்வகித்தார். இந்த வேங்கட பெருமாள் ராஜு 1750 ஆம் வருடம் அன்பளிப்பாக கொடுத்த இரண்டு குத்து விளக்குகள் சுமார் 5 அடி உயரம் உடையவை. இன்றும் அப்பளாய குண்ட்டா ஆலயத்தில் இவற்றை காணலாம். இங்கு இருக்கும் கல்வெட்டில் இடது புறத்தில் கட்கம் (வாள்) முத்திரை, அந்த வாளின் இருபுறத்தில் சூர்யசந்திர முத்திரையும், வாள் மௌன கிரந்த வரஹ முத்திரை பதித்துள்ளனர்.

இப்பேரரசின் அரசவையில் புகழ்பெற்ற கவி தனது கவிதைகளில் அப்பளாயகுண்ட்டா பிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமியை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தாள்ளபாக்க அன்னமாசாரியரின் கீர்த்தனைகளின் மூலம் பிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமியின் இருபுறங்களிலும் அலர்மேல்மங்கை, ஆண்டாள் ஆலயங்கள் இருந்ததாக அறிய முடிகிறது. அதுமட்டுமின்றி "பிரசன்ன வேங்கடாசலபதி" என்ற பெயருடன் வேறு எங்கும் ஆலயம் இருப்பதாக தெரியவில்லை.

ஆங்கிலேயர்களின் ஆட்சி காலம் வரை அப்பளாயகுண்ட்டா கார்வேடி நகர ராஜாக்களே தர்மகர்த்தாவாக இருந்தார்கள். சுதந்திரம் அடைந்த பின்னர் மதராஸ் மாகாணத்தில் திருத்தணி ஆலய நிர்வா கத்தின் கீழ் இருந்தது. ஆந்திர மாநிலம் உருவான பின்னர் இவ்



வாலயம் ஆந்திர மாநில அறநிலையத் துறையின் கீழ் இருந்தது. அதன் பிறகு 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதி முதல் திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத் தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

## ஆலய கட்டுமானம் :

கிழக்கு நோக்கி உள்ள இவ்வாலயம் செங்கற்களால் கட்டப்பட்ட பரந்து விரிந்த பிராகாரம் உள்ளது. நுழைவுவாயிலில் மஹா துவார கோபுரம் கட்டுவதற்கு ஏதுவாக கட்டிய கற்தூணை காணலாம். நுழைவு வாயில் கடந்தவுடன் 10 அடி தூரத்தில் துவஜஸ்தம்பம், அதன் அருகில் கருட மண்டபம் மேற்கு முகமாக அதாவது ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு அபிமுகமாக உள்ளது. முதலில் முதன்மை பிராகாரம் வழியாகச் சென்றால் முழுமை யாக கட்டப்படாத மற்றொரு பிராகாரம் உள்ளது. இதனுடைய உயரம் சுமார் இரண்டு அடி மட்டுமே இருக்கும். இந்த இரண்டாவது பிராகாரத்தின் பிரதக்ஷிண வழியில் ஸ்வாமி கர்ப்பாலயம் அமைந்துள் ளது. இதற்கு நைருதி மூலையில் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு ஒரு சிறு ஆலயம், வாயு மூலையில் உயரமான ஸ்ரீஆண்டாள் ஆலயம் உள்ளன. இங்கே பத்மாவதி



தாயார் விக்ரகம் திருச்சானூரில் உள்ள விக்ரகத்தை விட பெரியதாக அமைந்துள்ளது.

பிராகாரத்தின் நடுவில், கருடனுக்கு எதிரில் முதன்மை ஆலயம் உள்ளது. இது முகமண்டபம், அந்தராளம், கர்ப்பாலயம் என மூன்று பாகமாக கட்டப்பட்டுள்ளது.

சதுர்பிராகாரத்துடன் முகமண்டபத்தில் 16 கல்தூண்கள் உள்ளன. இந்த முகமண்டபத்தின் நடுவில் மூலவருக்கு எதிரில் நான்கு தூண்களுடன் மேடை (சதுரஸ்ராகார மேடை) அமைத்துள்ளனர். இந்த மேடை மீது உத்ஸவ மூர்த்திகள் கொலுவு, கல்யாணம் போன்றவற்றை நடத்துகிறார்கள். இவ்வாலயத்தில் ஆழ்வார்கள், இராமாநுஜர் விக்ரகமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. முகமண்டபம் கடந்த பின்னர் சிறிய அந்தராளம் இருக்கிறது. அதன் பின் கர்ப்பாலயம் அந்தராளத்தை விட அரை அடி உயரத்தில் அமைந்துள்ளது.

கர்ப்பாலயத்தில் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமியை நீண்ட உயரமான விக்ரகமாக பிரதிஷ்டை செய்துள்ளனர். திருமலையப்ப ஸ்வாமி சதுர்புஜங்களுடன் சங்கு சக்கரங்கள் தரித்து கடி வரத ஹஸ்தங்களுடன் காட்சியளிக்கிறார். திருமலையப்ப ஸ்வாமி இதயத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயார் த்விபுஜமூர்த்தியாக கொலுவிருப்பது போல் அப்பளாய குண்ட்டா ஸ்வாமி இதயத்தில் மஹாலக்ஷ்மி தாயார் "ஸ்ரீவத்ஸ" சின்னத்தில் குடி கொண்டுள்ளார். திருமலை திருத்தலத்தை போன்றே இங்கேயும் வைகானச ஆகமப்படி அர்ச்சனைகள் நடைபெறுகின்றன.

ஸ்ரீதேவி பூதேவியருடன் பிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி உத்ஸவ விக்ரகங்கள் சுமார் 4 அடி உயரத்தில் அமைந்துள்ளன. மேலும் சக்ரத்தாழ்வார், விஷ்வக்சேனர், பாஷ்யகாரர் உத்ஸவ விக்ரகங்களும் உள்ளன. திருமலை திருப்பதி ஆலயம் போன்றே அப்பளாய குண்ட்டா கர்ப்பாலய கோபுரம் ஒரு கலச கோபுரத்துடன் காட்சியளிக்கிறது. முக மண்டபம், அந்தராளம், கர்ப்பாலயம் இந்த மூன்றும் இரண்டு அடி உயரமுள்ள ஒரே அதிஷ்டானம்(தளம்) மேல் கட்டப்பட்டுள்ளது. முதல் பிராகாரத்தின் உள்ளே நுழைவு வாயிலின் மேற்கு புறத்தில் அக்னி மூலையில் மடப்பள்ளி, யாக சாலை உள்ளன. இந்த மடப்பள்ளியில் திருமலையை போன்று வகுளாமாலிகா தாயார் எழுந்தருளியுள்ளார்.

பிராகாரத்தை கடந்த பின்னர் ஆலயத்தின் எதிரில் ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமி ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் அனுமன் கைகள் கூப்பிய வண்ணம் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு அபிமுகமாக அமைந்துள்ளார். பிரசன்ன ஆஞ்சனேய ஸ்வாமிக்கு ஒவ்வொரு ஞாயிறு அன்றும் பஞ்சாமிருத அபிஷேகம், பூலங்கி (பூவினால் ஆன ஆடை) சேவையும் நடைபெறும்.

**உத்ஸவங்கள் :**

ஒவ்வொரு ஆண்டும் ஆனி (ஜ்யேஷ்டா) மாதத்தில் திருவோண நட்சத்திரத்தில் முடிவடையும் விதத்தில் பத்து நாட்கள் மிகச் சிறப்பாக பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. பிரம்மோத்ஸவத்தின் ஒவ்வொரு நாளும் டோலோத்ஸவம் நடைபெறும். வைகுண்ட ஏகாதசியன்று திருவீதி உலா, வைகுண்ட நுழைவு, சக்கர ஸ்நானம் போன்றவை நடைபெறும். தெலுங்கு வருட பிறப்பு (உகாதி) அன்று ஆஸ்தானம், கொலுவு, பஞ்சாங்க ச்ரவணம் மிகவும் சிறப்பாக நடைபெறும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் அபிஷேகம் நடைபெறும். ஆனிவர ஆஸ்தானம், தீபாவளி ஆஸ்தானமும் நடைபெறும். பவித்ரோத்ஸவம், இரதசப்தமி அன்றும் திருவீதி உலா நடைபெறும்.

இத்தகைய சிறப்பு மிகுந்த ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமியை தரிசித்து அருள் பெறுவோம்.

**ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு 0877-2264543 தொலை பேசியில் தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும். மேலும் sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவியுங்கள்.**

# வடுக நம்பி அருளிய யதிராஜ வைபவம்

## (சில திவலைகள்)

திரு.பி.டி. சேஷாத்ரி,
சென்னை

**யதிராஜ வைபவம் (50-வது சுலோகம்)**

*“பத்நீம் பரித்யஜ்ய ஸ வீதராக: ஸ்ரீதேவராஜம் ப்ரணிபத்ய தஸ்மாத் |*
*துர்யாச்ரமம் ஸ்வீக்ருத வாந்த தௌ ஸ தேவோऽபி தஸ்மை யதிராஜ நாம ||”*

(வேண்டேன் மனை வாழ்க்கை என்றும், கொண்ட பெண்ணை கை விட்டு தேவப்பெருமாளை வணங்கி, அவரிடத்தே ஸந்யாஸ ஆச்ரம ஸ்வீகாரம் பெற்றும் விளங்க, வரத ராஜன் யதிராஜன் என்னும் திருநாமத்தை அனுக்ரஹித்தார்.)

த்யாக மண்டபத்தின் அதி தேவதையான ஸ்ரீத்யாக ராஜனான தேவப்பெருமாள் ராமாநுஜர் ஸந்யாஸ ஆச்ரமத்தை ஏற்றுக்கொண்ட போது அருளிய திருநாமங்கள் இரண்டு. ஒன்று “ராமாநுஜன்”. மற்றொன்று “யதிராஜன்” என்கிற திருநாமமாகும். அஷ்டோத்தர சத நாமாவில் யதீந்த்ரர் என்கிற 3–வது திருநாமமும், யதிராசர் என்கிற 107–வது திருநாமமும் இதனை விவரிக்கின்றது. யதிராசர் என்றால் யதிகளுக்கு அரசர் என்று பொருள்படும். ஸ்வாமி எம்பெருமானாரை யதீஸ்வரர், யதிஸார்வபௌமர், யதி பூபதி, யதிந்ருபதி, யதிசக்ரவர்த்தி, யதீசானர், யதிபுரந்தரர், யதீஸ்வர ஸரஸ்வதி என பெயர்கள் பலவற்றினால் மஹான்கள் போற்றுகின்றனர். யதிகளுக்கு ராஜர் என்று ஏன் அழைக்கப்படுகிறார்? என்பதற்கு காரணத்தை சண்டமாருதம் தொட்டயாசார்யார் என்னும் புகழ்பெற்ற திருக்கடிகை திவ்ய தேசத்து தக்கானுக்கு அநவரத கைங்கர்யம் புரிந்த மஹான் காட்டும் விஷயத்தை இங்கு விண்ணப்பிக்கின்றேன். போதாயன கல்பத்தில் சதுர்த்தாம்சத்தில்,

*“சாதுர்மாஸ்யம் சதம் ஜீவி வேதாந்தார்த்த விவேசக: |*
*சாந்தோ தாந்தோ யதி: ஜீவன்னாபி விஷ்ணு பராயண: ||”*
*ப்ரதிஷ்டார்ஹ பூஜ்யச்ச வந்தனீயோ ஹரிர்யதா*
*சரைர்ரப்ய வஹாராத்யை: அர்ச்ச தீயோ ஹரி ப்ரியை: |*
*வந்தனீயா யதா ஹரிப்ரியா விஷ்ணுபதோ:||’ ’*

என்று நூறு சாதுர்மாஸ்ய வ்ரதம் கொண்டவன் ஸாக்ஷாத் பகவானாகையாலே எம்பெருமானைப் போலே எம்பெருமானாருக்கு உத்ஸவங்கள் கொண்டாடப்படுவதாகவும், மேலும் வைகானஸ ஸுத்ரம் ஆநந்த ஸம்ஹிதையில்,

*“ஆரப்ய ஜன்ம நக்ஷத்ரம் நக்ஷத்ராவதி வா ஹரே:|*
*உத்ஸவம் காரயேத் தீமான் பக்தானாம் வா தசாங்கிகம்||”*



என்கிற ப்ரமாணப்படியும், அவதார திருநாள் மஹோத்ஸவமும்,

*"த்வயோப பக்த ஸக்கந்த வர்ஸோலங்கார சர்விதா:।*
*உச்சிஷ்ட போஜினோ தாஸாஸ் தவ மாயாம்*
*தரேமஹே॥"*

என்கிறபடி பூசும் சாந்து, திருமாலை, உடுத்துக் களைந்த பீதக வாடை, எம்பெருமான் போனகம் செய்த திருஅமுதுகள் முதலானவை பக்தர்களுக்கும் செய்யப் பட வேண்டியது முதலான சாஸ்த்ர வசனங்களை அடியொற்றியே செய்யப்படுவதால் இவரே "யதிராசர்" என்கிற விருதுக்கு உரியவர் என்று காட்டியுள்ளார். ஆகையாலிறே நம் ஆசார்யர்கள் யதிராச அந்தாதி, யதிராஜ ஸப்ததி, யதிராஜ விம்சதி, யதிராஜ விஜயம், யதிராஜாஷ்டகம், யதிராஜ தண்டகம், யதிபதி தினசர்யா, யதிபதிவைபவ தீபிகா, யதிபதிநுதி சதகம் என்றே வைபவ ஸ்தோத்திரங்களை அருளியுள்ளனர்.

எம்பார்,

*"எப்பொழுதும் யதிராசன் வடிவழகு என்*
*இதயத்துளதால்"*
*"இல்லையெனக்கெதிர் இல்லையெனக்கெதிர்*
*இல்லையெனக்கெதிரே"*

என்றும்,

அனந்தாழ்வான் ராமாநுஜ சதுஸ்லோகியில் பலஸ்ருதியில்

*"ப்ராப்நுயாத் பரமாம் பக்திம் யதிராஜ பதாப்ஜயோ: ॥"*

என்றும், நம் பெரிய ஜீயர் உபதேச ரத்னமாலையின் பல ஸ்ருதியில், *"யதிராசர் இன்னருளுக்கு என்றும் இலக்காகி சதிராக வாழ்ந்திடுவர்"* என்றும் *"அங்கீகுருஷ்வ யதிராஜ தயாம் புராசே"* என்று விம்சதியிலும் *"அரங்கர் எந்தை யதிராசர்க்கு ஈந்த வரம்"* என்றும்,

*"யதிராசன் வாழி யதிராசன் வாழி யதிராசன்*
*வாழியென்று யென்று ஏத்திச் சதிராக*
*வாழ்வார்கள் தாளினைக் கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவர்*
*ஆழ்வார்கள் தங்கள் அருள்"*

(ஆர்த்தி பிரபந்தம் – 13)

என்று போற்றியதை நாமும் அனுசந்திப்போமாக.

*"ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:।*
*ஸ ஏவ ஸர்வ லோகாநாம் உத்தர்த்தா நாத்ர*
*ஸம்சய:॥"*

என்கிறபடி (முக்காலும் சத்யம் செய்கிறேன். யதிராஜரே உலக குருவாவார். எல்லாவுலகையும் உய்விக்க வல்லவர் அவரே. இதில் ஐயப்பாடு வேண்டாம்.) என்றும் ஆசார்யர்களின் அமுதமொழியே நமக்கு பொன்மொழியாகும்.

## உபய விபூதி நாயகர் ராமாநுஜர்

## (57 வது சுலோகம்)

*"விபூதி யுக்மாதி பதாதிகம் ச ஸர்வம் மஹாபூர்ண*
*கடாக்ஷ லப்தம்।*
*மத்வா ஸ தத்பாதஸரோஜயுக்மம் ஸம்ஸேவ்ய தத்*
*வச்ய தயாவதஸ்தே॥"*

நம்பெருமாளால் அனுக்ரஹிக்கப்பட்ட உபய விபூதி ஸாம்ராஜ்யம் மஹாபூர்ணர் என்கிற பெரிய நம்பியின் கடாக்ஷத்தால் ஏற்பட்டது என்று அவ்வாசார்யரது திருவடித் தாமரைகளை வணங்கி தொண்டு கோலம் புரிந்து விளங்கினார்.

அஷ்டோத்தர சத நாமத்தில் 37வது திருநாமமான *"விபூதி த்வய நாயக:"* என்பதன் விவரணம் இந்த சுலோகம்.

*"ஸ்ரீரங்க மதுலம் க்ஷேத்ரம் ஸ்ரீயாஜுஷ்டம்*
*ஸ்ரீபாஸ்பதம்।*
*யத் கத்வா ந நரோயாதி நரகம் சாப்யதோகதிம்॥"*

–ஸ்ரீரங்க மஹாத்மியம் – தசாத்யாயி 1–7

என்கிறபடியே திருவரங்கத்தை அடைந்தவன் நரகம் அடைவதில்லை என்கிறபடி ஓர் பங்குனி உத்திரத் திருநாளில் நம் போல்வாருக்காக திவ்ய தம்பதிகளிடத்து கத்யத்தை விண்ணபித்து, ராமாநுசன் ஸம்பந்தம் உடையோர் அனைவருக்கும் மேல் வீடு தந்தோம் என்றும், நித்ய விபூதியான பரமபதத்தையும், லீலாவிபூதியான இவ்வுலகையும் நம்மி ராமாநுசனிடத்திலே கொடுத்தருளினார் என்கிற சரிதத்தை வடுகநம்பி வெகு அழகாக விவரித்துள்ளது காண்க.

கத்ய பாஷ்யத்தின் தொடக்கத்தில் வேதாந்தாசார்யார்,

*"லக்ஷ்மீபதேர் யதிபதேச்ச தயைகதாம் நோ:*
*யோऽஸௌ புரா ஸமஜநிஷ்ட ஜகத்திதார்த்தம்*
*ப்ராச்யம் ப்ரகாசயது வ: பரமம் ரஹஸ்யம்*
*ஸம்வாத ஏஷ சரணாகதி மந்த்ர ஸார:"*

என்று திருமகள் கேள்வனுக்கும், யதிராசனுக்கும், உலகின் நன்மை பொருட்டு ஏற்பட்ட ஸம்வாதம் என்கிற பரமரஹஸ்யம் என்று அருளியுள்ளார். மேலும் "ந்யாஸ திலகத்தில்"

1) "தத்தேரங்கீ நிஜமபிபதம் தேசிக ஆதேச காங்க்ஷீ"

(24) என்றும்

2) "ச்ருத்வா வரம் தததுபந்த மதா வலிப்தே (22)

என்றும், ஆர்த்தி ப்ரபந்தத்தின் முடிவில்(60)

"இந்த அரங்கத்தில் இனிது இரு நீ என்று அரங்கர்
எந்தை எதிராசர்க்கு ஈந்த வரம் - சிந்தை செய்யில்
நம்மதன்றோ நெஞ்சமே நற்றாதை சொம்புதல்வர்
தம்ம தன்றோ தாயமுறை தான்"

என்ற விசதவாக் சிகாமணியின் திவ்ய சூக்தியும் கண்டு தெளிவோம்.

'பத்$_3$யு: ஸம்யமிநாம் ப்ரணம்ய சரணௌ தத் பாத$_4$ கோடீரயோ:'' என்று "ந்யாய பரிசுத்தியில்" வேதாந்தாசார்யர் திருவடி, திருமுடி ஸம்பந்தத்தால் பேறு பெற்றவர்களை வணங்கியதும்,

"அர்வாஞ்சோ யத்பத ஸரஸிஜத்வந்த்வமாச்ரித்ய பூர்வே|
மூர்த்நா யஸ்யாந்வய உபகதா தேஸிகா முக்தி மாபு :||"

என்னும் பூர்வர்களின் சுலோகமும் அனுஸந்தித்து இன்புறுவோமாக.

**தஞ்சமடைந்த நம் இராமாநுசனே தஞ்சம்**

**எம்பெருமானார் தரிசனம்**

**(59 வது சுலோகம்)**

"ததஸ்ய பூர்ணோபி ததாந்தரஜ்நஸ் ஸம்மாநயம்ஸ்தம்
யதிஸார்வ பௌமம் |
த்வத் தர்சநம் சேதமீதீவ துஷ்ட: ப்ரோவாசயல்
லக்ஷ்மண தர்சநம் தத் ||"

(திருக்கோட்டியூர் நம்பியும் பின்னர் காரேய் கருணை இராமாநுசனை அறிந்து யதிகட்கு இறைவரை "எம்பெருமானார்" என்று கொண்டாடி இனி இந்த தர்சனம் "எம்பெருமானார் தர்சனம்" என்றே பெயர் பெற்று விளங்கும் என திருவாய் மலர்ந்தருளினார்.)

அஷ்டோத்தர சத நாமாவளியின் 53–வது திருநாமமான "மந்நாத:" என்கிற திருநாமத்தின் விவரணம் இந்த சுலோகம்

வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூரில் கண்ணன் கேசவன் திருவடிகளில் அநவரத கைங்கர்யம் புரிந்தவரான திருக்கோட்டியூர் நம்பி திறத்தில் பரம ரஹஸ்யமான சரம சுலோகார்த்தத்தை கேட்டு, பின் அவ்விடத்திலேயே "பாரில் ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறும்" என்கிற வசனப்படி அங்குள்ளோர்க்கு உபதேசிக்க, நம்பிகள் அங்கே எழுந்தருளி இதன் பலன் நரகம் என்பதை அறிந்தும் தேவரீர் இதைச் செய்யலாமோ? எனக் கேட்க நான் ஒருவன் நரகம் புக்கினும் மற்றோர் பேறு அடைவரே என்று விண்ணப்பிக்க, முன்பே நம்பெருமாள் அவருக்கு சாற்றிய திருநாமமான எம்பெருமானார் என்கிற திருநாமத்தை தர்சன ஸப்தத்தோடு கூட்டி, இனி இந்த தரிசனம் "எம்பெருமானார் தரிசனம்" என்று வழங்கப்படட்டும் என்று அருளினார். மாமுனிகள் உபதேசரத்னமாலையில் (38)

"எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார் - அம்புவியோர்
இந்த தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயல் அறிகைக்கா"

என்று அருளியிருப்பது சிந்தை தன்னில் நாளும் சிந்திக்க வேண்டியதன்றோ! **வைபவம் தொடரும்...**

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

## 2019, ஜூலை மாத விழாக்களும், பண்டிகைகளும்

| | |
|---|---|
| 6-8 | ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவோத்ஸவம் |
| 8 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி புஷ்பயாகம் |
| 11 | பெரியாழ்வார் திருநட்சத்திரம் |
| 12-14 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் |
| 12-15 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 12-20 | தாள்ளபாக்க ஸ்ரீகாமாக்ஷி தேவி சமேத ஸ்ரீசித்தேஸ் வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 13 | ஸ்ரீநாதமுனிகள் திருநட்சத்திரம் |
| 16 | வியாச பூஜை, குருபூர்ணிமா |
| 17 | ஆனிவர ஆஸ்தானம் |
| 18 | திருப்பதி ஸ்ரீவிகனாசாசார்யர் ஜயந்தி |
| 27 | ஆடிக்கிருத்திகை |
| 27-30 | திருப்பதி ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பவித்ரோத்ஸவம் |

# குண்டலினி யோகம்

மனிதனின் சூட்சம சரீரத்தில் நிலைக் கொண்டுள்ள ஆதார சக்கரங்களும் அதன் ஓட்டத்தை சீரான முறையில் நடைமுறைப்படுத்தி வரும் மூன்று முக்கிய நாடிகளின் நுட்பமான இயக்கங்களையும் தெரிந்து கொண்டாலொழிய குண்டலினி சக்தியின் பேராற்றல்களை நம்மால் வசப்படுத்த இயலாது.

1. இடா நாடி : மனித உடம்பின் இடது பக்க இயக்கமானது மூச்சு விட்டு சுவாசித்தல் மற்றும் உடல் சூட்டை சீராக பாதுகாக்கும் அக்னி கலையின் ஓட்டத்திற்கு அத்தியாவசியமானதாகும்.

2. பிங்களா நாடி : மனித உடம்பின் வலது பக்க இயக்கமே துண்டுபட்ட சுவாசம், பேச்சு, எண்ணம், நினைவு மற்றும் பகுத்தறிவு ஆகிய செங்குத்தான மூச்சிற்கு துணை நிற்பது.

3. சுழுமுனை நாடி : நடுமையம் கண்டு பாயும் தேவ சக்தியின் அணு சக்தி பேராற்றல்கள், மனிதனுக்கு எந்த விதமான ஆன்மீகப் பயன்களையும் அளிக்காமல் “ஓய்வு” நிலையிலேயே உள்ளது.



ஆதார சக்கரங்கள் ஆறும் நமது உடலின் பின் பக்கத்தில் வீணா தண்டம் என அழைக்கப்படும் முதுகெலும்பின் “தண்டு வடம்” பகுதியில் ஒன்றன் மேல் ஒன்றாக வரிசையான முறையில் சூட்சுமமாக அமைந்துள்ளன. அவையே நம்முடைய முதுகின் பின் பக்கத்தின் வழியாக கழுத்தின் பிடரியில் இணைக்கப்பட்டுள்ளது. மனிதனுக்கு ஆன்மீக சக்தியை அளிக்கக் கூடிய உடம்பின் புதிரான பிடரி பகுதியைத் தான் திருமூலர் “பன்னாமுடி” என திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார்.

தண்டு வடமும், கழுத்தின் பின்பக்க பிடரியும், சிறு மூளையில் இணைக்கப்பட்டுள்ளன. சிறு மூளையே தெய்வீக சக்தி வாய்ந்ததாகவும் (Astral Body)பெரு மூளை ஸ்தூல உடம்பின் இயக்கத்திற்குரியதாகவும் (Physical Body)செயல்பட்டு வருகின்றன. எனவே மனிதனின் பின் பக்கமான முதுகுப்பகுதியே தெய்வீகத்திற்குரியதாகவும் அவனுடைய முன் பக்கத்தில் அமைந்துள்ள நெற்றியின் புருவ நடுமையம், தொண்டை, இருதயம், நாபி, குய்யம், குதம் போன்ற பிற உறுப்புக்கள் யாவும் ஸ்தூல உடல் அமைப்புக்குரியவை எனவும் அழைக்கப்படுகின்றன.

யோக சாதனையற்ற மனிதனிடம் சுழுமுனை நாடி எந்தவிதமான ஆன்மீகப் பயன்களையும் அளிக்காமல் “ஓய்வு” நிலையிலேயே உள்ளது. எப்போது சாதகன் தபஸின் வழியாக இடா மற்றும் பிங்களை ஆகிய இவ்விரண்டு நாடிகளின் முரண்பாடுகளை எல்லாம் களைந்து அதனை சமன் வயப்படுத்தி நிறுத்தி வைக்கும் போதுதான் குண்டலினி சக்தியின் பேராற்றல்கள் விழிப்புணர்ச்சியை பெறுகிறது. அதற்கு உறுதுணையாக இருப்பது “மணி பூரகம் மற்றும் அனாகத” சக்கரங்களின் நேர்மறை ஓட்டத்தை வலது பக்க இயக்கமாக மாற்றி அமைப்பதேயாகும்.

1) மூலாதார சக்கரம் – சூட்சும உயிரின் பிராண சக்தியின் ஆற்றல்களை தாங்கும் ஆதாரமாகவும் அதன் மாசுப்பட்ட சப்தமே உயிர் மூச்சின் நாற்கால் பாய்ச்சலை அளித்து வருகிறது.

2) சுவாதிஷ்டான சக்கரம் – ஸ்தூல உடம்பின் அனல் சக்தி, இருமூச்சின் ஆட்டம் மற்றும் பசி, தாகம், தூக்கம், மைதுனம் இவற்றின் செயல்களாக நடைபெற்று வருகிறது.

3) மணிபூரக சக்கரம் – தலைகீழ் நாபியின் அதோமுக சுவாச ஓட்டமாகவும், ஐம்புலன்களின் வழியாக அறிவு காணுதல் மற்றும் வெளிப்பார்வையின் சலனமாகவும் இயங்கி வருகிறது.

4) அனாகத சக்கரம் – மூச்சின் ஆற்றல்களை மனிதனின் பேச்சு வெட்டிச் செல்லும் துண்டுபட்ட சுவாசமாகவும், மனம், பிராணன் இவ்விரண்டும் ஒன்றை ஒன்று வெட்டிச் செல்கிற விதமாகவும்,


திரு. பிரபோதரன் சுகுமார், சென்னை.

5) விசுக்தி சக்கரம் – ஆகாய தத்துவத்தில் மனிதனின் நுன் உடல் (கனவு தேகம்) செயல்படும் விதமாகவும் எண்ண ஓட்டங்களின் சிதறல்களாகவும்,

6) ஆக்ஞா சக்கரம் – நல்வினை, தீவினைப் பயன்களின் நுகர்வின் ஜன்ம திரையை அளிப்பதாகவும், பூமியின் ஈர்ப்பு விசை மற்றும் காந்த சக்தியின் சுழல் வேகத்தை உடலில் செயல்படுத்தி மனிதனின் 3 சுழல் நிலைகளான விழிப்பு நிலை, கனவு நிலை, உறக்க நிலை நடத்தி வருகிறது.

7) சகஸ்ராரம் – என்கிற ஏழாவது சக்கரம் தலைகீழாக ஸ்தூல தேகத்தின் இயக்கத்தை பெருமூளையின் வழியாக செயல்படுத்தி மனிதனை புலனறிவின் வசம் தள்ளி விடுகிறது.

இவ்வாறு ஆதார சக்கரங்கள், இடா, பிங்களா அனைத்துமே எதிர்மறை ஓட்டத்தில் அதாவது மனிதனின் உலகியல் (லௌகீக) வாழ்க்கை முறைக்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணத்தினால் குண்டலினி சக்தியை வெறும் தியானப் பயிற்சியின் வழியாக அதன் விழிப்புணர்ச்சியை நம்மால் காண முடிவதில்லை. யோக சாதனையாளர்கள் பெரும்பாலும் சுவாசத்தை ஒழுங்கு முறைப்படுத்தும் "பிராணாயாமம்" போன்ற பயிற்சிகளை தீவிரமாக மேற்கொள்ளும் போது கும்பகத்தின் பயன்களை அவர்களால் பூரணமாக எட்டிப் பிடிக்க முடியாமல் போய் விடுகிறது. காரணம் சுவாசத்தை ஒழுங்கு படுத்தும் பயிற்சி முறையில் இடா நாடியே "வலது நாசி, இடது நாசி" என அதன் ஓட்டத்தை இரண்டு வினாடிகளுக்கொருதரம் மாறி கொள்ளும் விதமாகவும், மூச்சு ஒரு சீரான முறையில் அல்லாமல் விட்டு விட்டு பாயும் தன்மை கொண்டதாக இருக்கும். இந்த உண்மையை உணரத் தவறி விடுவதை அமரகவி சித்தேஸ்வரர் சுட்டிக் காட்டுகின்றார். மூச்சு ஓய்வில்லாமல் அதன் ஓட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் வரை மனிதனின் "மனம்" ஒரு நிலைக்கொள்ளாமல் சித்த விருத்தியில் அலை பாய்ந்துக் கொண்டு இருப்பதால் தியானத்தில் குறைந்த பட்சம் "மன அமைதியை"க் கூட எட்டிப் பிடிக்க முடியவில்லை.




ஆழ்நிலைத் தியானத்தின் பயிற்சியின் மூலமாக குண்டலினி யோக சாதனையை நிகழ்த்த வேண்டுமானால் ஸ்ரீவித்யா யோக முறையில் மந்திர சாதனையின் வாயிலாக பேச்சை அடக்கி வெற்றி காணும்போது சப்த அலைகளை இடைவிடாமல் உருவாக்கும் உள் பேச்சு வெளிபேச்சு மற்றும் அதன் காரணத்தினால் அலை அலையாக உருவாகும் எண்ண ஓட்டங்கள் மற்றும் மனிதனுக்கு வினைப் பயன்களை ஓய்வில்லாமல் தூண்டி வரும் நினைவு அலைகள் ஆகிய இவையனைத்தும் படிப்படியாக ஓய்வு காணச் செய்யும் போது பிங்களையின் ஓட்டத்தை மெல்ல மெல்ல கைப்பற்றிக் கொள்ள முடிகிறது. "பேச்சு, மனம், எண்ணம், நினைவு, புலனறிவு" ஆகிய இவை அனைத்தும் ஓய்வு கொள்ளும் ஒடுக்க நிலைக்கு எடுத்துச் செல்லும் போது மூச்சு தானாகவே அதன் ஓட்டத்தை நிறுத்திக் கொள்கிறது. சுவாசம் தானாகவே ஓய்வு கொள்ளும் கும்பகம் சித்தியை பெற்றால்தான் மூச்சினிடையே பாய்ந்து கொண்டிருக்கும் அக்னி கலை மற்றும் புலன்களின் ஓட்டத்திற்கு காரணமான சந்திர கலை ஆகிய இவற்றின் இயக்கத்தையும் கட்டுப்படுத்தி அடக்கி வைக்க முடிகிறது.

ஆனால் யோகத்தின் இந்த விஷயங்களை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் குண்டலினி சக்தியின் எழுச்சியைக் காண மூலாதாரத்தை நோக்கி நேரிடையாக தேடிச் செல்லும் ஹடயோக சாதனையாளர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும். காரணம் மூலாதாரத்தில் உயிர் மூச்சின் சக்திகள் அனைத்தும் (பரா) அது தோன்றிய இடத்திலேயே அதோமுக (தாழ்வு) நிலையை அடைந்து விட்டதால் எங்கிருந்து குண்டலினியின் விழிப்புணர்வை அங்கு காண முடியும் என்பதே கேள்வியாகும்.

**மூலாதார முச்சுடர் – கீழ் மூலத்தின் வெற்றி :**

ஸ்ரீவித்யா யோக மார்க்கத்தில் பேச்சை அடக்கி மௌனத்தில் ஆழ்ந்து சென்று நாபி, குதம், குய்யம் முறையே மணிபூரணம், மூலாதாரம், சுவாதிஷ்டானம் ஆகிய கீழ் மூலத்தின் செயல்

களை ஒருங்கிணைத்து வெற்றி காணும் போது உயிர் மூச்சின் எழுச்சியை மணிபூரக சக்கரத்திலிருந்து பஸ்யந்தியின் ஆற்றலாக வெளிப்படும் போது ஐம்புலன்களும் ஒடுக்க நிலைக்குள் சென்று விடுகிறது. குண்டலினி யோகத்தின் இந்த சாதனையையே வாசி நிமிர்தல் அல்லது நிமிர்த்தப்பட்ட மூச்சு என குறிப்பிடும் அமரகவி அதனைக் கொண்டே அண்ணாக்கு அல்லது பிரம்ம ரந்திரப்பாதையில் ஆழ்ந்து சென்று உயிரின் மீது படிந்துள்ள சப்தத்தின் மாசுகளை எல்லாம் களைந்து அதனை பிரணவத்தின் இருப்பிடமான வலது செவியில் நாத பிரம்மத்துடன் இணைத்து விடும் போது பிங்களை நாடி பூரணமாக வசமாகி கும்பக சித்தியில் மூச்சு தானாகவே அடங்கி விடுகிறது.

இவ்வாறு இடா நாடியை, பிங்களை நாடியின் வழியாக சமன் வயப்படுத்தி வெற்றி காணும் போது சுழுமுனை நாடியின் கதவுகள் தானாகவே திறந்து கொள்ளும்போது குண்டலினி சக்தியின் பேராற்றல்கள் சர்வ பிரபஞ்ச பிரம்ம ஞானத்தை ஆத்ம போதனைகளாக அளிக்கத் தொடங்கி விடுகிறது. ஸ்ரீவித்யா யோக மார்க்கத்தின் ஸ்ரீசக்கர உபாசனை மற்றும் ஒப்பற்ற சோடசக் கலை மார்க்கம் ஒன்றே பிரம்ம நிஷ்டை நிலைக்கு சாதகனை உயர்த்தி குண்டலினி யோகத்தின் சிகரத்தை தொடுவதற்கு உதவி புரிகிறது என்று கூறினால் அது மிகையாகாது. ஸ்ரீவித்யா யோக மார்க்கத்தின் வழி முறைகளையே வேதகால மகரிஷிகளான பிருகு, துர்வாசர், அத்ரி, அகத்தியர், வசிஷ்டர், விசுவாமித்திரர், ஸ்ரீஆஞ்சநேயர், திருமூலர், போகர், அமரகவி சித்தேஸ்வரர் வரை பிரம்ம நிஷ்டையில் துய்த்து ஸ்ரீசக்தி மாதா குண்டலியின் பூரணத்துவத்தை உணர்ந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஸ்ரீவித்யா யோகத்தின் குண்டலினி தியான பயிற்சி முறைகள் :**

குண்டலினி யோகத்தை வெற்றிக் காண உதவும் ஸ்ரீவித்யா யோகத்தின் வழிமுறைகள் இடா நாடியை பின் பற்றிச் செல்லும் மூச்சின் வழியல்ல என்பதை ஆணித்தரமாக புரிந்துக் கொள்ள வேண்டும்.

1) இஷ்ட தெய்வத்தின் விக்ரக வழிபாடுகள் பர பக்தி யோக முறையில் அமைய வேண்டும்.

2) மந்திர சாதனை தேர்ச்சியின் மூலமாக "உள் பேச்சு, வெளிப்பேச்சு, எண்ணம்" இவற்றை கட்டுப்படுத்தி "மன அமைதியை" ஆழ்நிலைத் தியானத்தில் காணுதல்.

3) தேகாபிமானம் : சாதன் தன்னுடைய தேக நினைவை மூழ்கடிக்க செய்யும் பிரம்ம பாவனையில் தேர்ச்சி பெற்று "பற்றற்ற நிலையை" அடைதல்.

4) காணாக்கண் கேளாச் செவி யோக பயிற்சி முறையின் மூலம் கண்களின் வழியாக தப்பிச் செல்லும் பிராண சக்தியின் ஆற்றல்களை தக்க வைத்துக் கொள்ளும் பிரத்யாஹாரம் சித்தி பெறுதல்.

5) சகஜ நிஷ்டை : இடா நாடியின் சுவாச ஓட்டத்தின் பக்கம் செல்லாமல் மணிபூரகம் மற்றும் அனாதக சக்கரத்தின் நடைமுறையை வலது பக்க இயக்கமாக மாற்றி அமைத்து பிங்களையின் எழுச்சியை தக்க வைத்து வாசியை நிமிர்த்துதல் (நிமிர்த்தப்பட்ட மூச்சினை) பெறுதல்.

6) பிராண சக்தியின் ஆற்றலை உள்நோக்கி பாயும் தாரனை சித்தியை பாலா வழிபாட்டில் பெறுதல்

7) ஒருங்கிணைந்த யோகத்தின் "மூச்சு, பேச்சு, எண்ணம்" ஆகிய இம்மூன்றும் தனித்தனியாக பிரிந்து செல்லாமல் இணைந்து செயலாற்றக்கூடிய அனாகத சக்கரத்தை வெற்றி கொள்ளும் போது ஒப்பற்ற "அனாகத த்வனி அல்லது தெய்வீகப் பேராற்றல்கள் படைத்த ஓங்கார நாதம்" கைப்பற்றுவதே குண்டலினி யோகத்தின் சிகரத்தை அடைதலாகும்.

**ஆதிசங்கரர் அருளிய**
**பஜகோவிந்தம்**



*யாவத் வித்தோ பார்ஜன-ஸக்த :*
*தாவந் நிஜ பரிவாரோ ரக்த: |*
*பச்சாத் ஜீவதி ஜர்ஜர தேஹே*
*வார்த்தாம் கோsபி நப்ருச்சதி கேஹே||*

**ஒருவன் பணம், பொருள் சம்பாதித்துக் கொண்டு இருக்கும் வரையில்தான், அவனது மனைவி மக்கள் சுற்றத்தார் அனைவரும் அன்பாகப் பேசி பணிவிடை செய்வார்கள். உடல் தளர்ந்து போய் (வயதாகி) பொருள் ஈட்டாமல் வீட்டிலேயே கிடக்கும்படி நிலை வரும்போது, வீட்டார் எவரும் அவனை சீண்ட மாட்டார்கள். ஒரு மனிதனை நேசிப்பது போல் சூழும் சுற்றம் அனைவரும் பணத்திற்காகவே, ஈட்டப்பட்ட பொருளுக்காகவே என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.**

**- திரு. சீதாராமன், சென்னை.**

# திருமலையில் 2019, ஏப்ரல் 17 முதல் 19 வரை திருமலையப்ப ஸ்வாமிக்கு, ஸ்ரீகோதண்டராம ஸ்வாமிக்கு ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமிக்கு நடைபெற்ற வசந்தோத்ஸவம்



உபயதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமிக்கு
ஸஹஸ்ரதாராபிஷேகம்



உபயதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமிக்கும்,
ஸ்ரீசீதாலக்ஷ்மண உடனுறை கோதண்ட ராம ஸ்வாமிக்கும்,
ஸ்ரீருக்மிணி கிருஷ்ண ஸ்வாமிக்கும்
நடைபெற்ற ஸ்நபன திருமஞ்சன திருக்காட்சி

ஸ்வாமி
தங்கத்திருத்தேர்





திருமலை மாடவீதிகளில் எழுந்தருளிய ஸ்ரீதேவி பூதேவி
உடனுறை திருமலையப்ப ஸ்வாமி,
ஸ்ரீசீதாலக்ஷ்மண உடனுறை கோதண்ட
ராம ஸ்வாமி, ஸ்ரீருக்மிணி சமேத கிருஷ்ண ஸ்வாமி

# ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமிக்கு 2019. ஏப்ரல் 12 முதல் 21 வரை வைபவமாக நடைபெற்ற பிரம்மோத்ஸவம்



துவஜாரோஹணம்



ஹனுமத்வாகனம்



புறவீதிகளில் எழுந்தருளும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி



ஊஞ்சல் சேவையில் ஸ்ரீசீதாராமலக்ஷ்மண மூர்த்திகள்



கருடவாகனம்



நவநீதகிருஷ்ணன் அலங்காரம்



ஸ்ரீகோதண்டராமஸ்வாமி ஆலய முகப்பு,
ஒண்டிமிட்டா

# ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமிக்கு 2019, ஏப்ரல் 18 அன்று வைபவமாக நடைபெற்ற கல்யாணோத்ஸவ திருக்காட்சிகள்



ஸ்ரீசீதாராம உத்ஸவமூர்த்திகள்



ஸ்ரீசீதாராம கல்யாணம்





ஆ.மா அரசு சார்பில் ஸ்ரீசீதாராமகல்யாணத்திற்கு பட்டு வஸ்திரங்களை
சமர்ப்பிக்கும் இரு தெலுங்கு மாநில மேதகு ஆளுநர் திரு. இ.எஸ்.எல்.நரசிம்மன் தம்பதியினர்
மற்றும் மாண்புமிகு முதல்வர் திரு நாராசந்திரபாபுநாயுடு தம்பதியினர்





ஸ்ரீசீதாராமகல்யாணோத்ஸவத்தில் கலந்து கொண்ட பக்தர்கள்



மின் ஒளியில் ஒளிரும்
ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம்,
ஒண்டிமிட்டா

# திருப்பதி ஸ்ரீகோதண்டராமஸ்வாமிக்கு 2019 ஏப்ரல் 15,16 தேதிகளில் மிக வைபவமாக நடைபெற்ற கல்யாணோத்ஸவம் மற்றும் பட்டாபிஷேக திருக்காட்சிகள்



ஸ்ரீசீதாராம கல்யாணம்



ஸ்ரீசீதாராம பட்டாபிஷேகம்



தி.தி.தே. சார்பில் ஸ்ரீசீதாராம கல்யாணத்திற்கு திருமாங்கல்யம், பட்டுவஸ்திரங்களை அளிக்கும் திருமலை இணைச் செயலாட்சித்தலைவர் திரு.கே.எஸ்.ஸ்ரீநிவாசராஜு ஐ.ஏ.எஸ். அவர்கள்



தி.தி.தே. சார்பில் ஸ்ரீசீதாராம பட்டாபிஷேகத்திற்கு தங்கக்கிரீடத்தை அளிக்கும் திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர் திரு.பி.லக்ஷ்மிகாந்தம் ஐ.ஏ.எஸ். அவர்கள்

சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் திருவேங்கட முடையானின் தவத்தினால், தங்கத் தாமரையில் சாட்சாத் "ஸ்ரீமஹாலட்சுமி" அவதரித்தார். பத்மத்தில் அதாவது தாமரையில் அவதரித்ததால் "பத்மாவதி" என்றும் "அலர்மேல் மங்கை" என்றும் அழைக்கப்படு கின்றார். மேலும், பாற்கடலில் தோன்றிய "மஹாலக்ஷ்மி" யாக, பூவியில் தோன்றிய "சீதாதேவி"யாக, ப்ருகு மஹரிஷியின் மகளாக, "அலர்மேல் மங்கை"யாக, கலியுகத்தில் ஆகாச ராஜாவின் மகள் "பத்மாவதி"யாக திருவேங்கடவனின் பட்டத்துராணியாக அவதரித்த "ஸ்ரீபத்மாவதி தேவி" என பல்வேறு காலங்களில் பக்தர் களால் வழிபடுகின்றார்.

பரந்தாமனான ஆனந்த நிலையனின் பட்டத்து தேவியாகிய ஸ்ரீபத்மாவதி தாயாரே, திருமலை ஆனந்த நிலையத்தில் ஸ்ரீநிவாசனின் வக்ஷஸ்தலத்தில் "வியூக லக்ஷ்மி"யாகவும், திருச்சானூர் க்ஷேத்திரத்தில் சாந்தி நிலையத்தில் "பத்மாவதி, அலர்மேஸ்மங்கை"யாகவும் கொலுவீற்று பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.

*"சூர்யஸ்ய ரஸ்மயோ யத்வத ஊர்மயஸ் சாம்புதே ரிவ*
*சர்வைஸ்வர்ய ப்ரபாவேன கமலா ஸ்ரீபதே: ததா"*

திருமலை பரந்தாமன், திருச்சானூர் பத்மாவதி தாயார் சம்பந்தம் எத்தகையது என்றால் சூரியனுக்கும் சூரிய ஒளிக்கும், சமுத்திரத்துக்கும் அதன் அலைகளுக் கும் உள்ள சம்பந்தத்தைப் போன்றது. திருவேங்கட முடையானின் திருமார்பில் நித்யம் கொலுவீற்றிருந்து, திருச்சானூரில் அர்ச்சா மூர்த்தியாக எழுந்தருளி தினமும் பக்தர்களின் கோரிக்கைகளை தீர்க்கக்கூடிய தயாதேவி யாக ஸ்ரீபத்மாவதி விளங்குகிறார்.

கம்பீரத் தோற்றத்துடன் காட்சியளிக்கும் சமுத்திர ராஜனின் புதல்வி ஸ்ரீலக்ஷ்மி தேவி. சாந்த ஸ்வரூபிணி யாக தரிசனமளிக்கக் கூடிய லோகமாதா! லக்ஷ்மி தேவியு டன் சமுத்திரத்திலிருந்து வேண்டும் வரங்களை அள்ளித் தரும் காமதேனுவும் பிறந்தது. கல்ப விருக்ஷமும் அவதரித்தது. மேலும் சிந்தாமணியும் தோன்றியது. இம்மூன்றையும் விட மிக்க மகிமையும் வரங்களை அளிப்பவராகவும் விளங்கியவர் அலர்மேல்மங்கை தாயார். அதுமட்டுமின்றி சந்திரனின் உடன் பிறந்தவ ளான அந்த தாயார் தன்னை பக்தியுடன் பூஜிப்பவர்க்கு ஆனந்தத்தை அருள்கிறார்.

பூலோக வைகுண்டமான திருமலையில் ஸ்வாமி இதயத்தில் குடி கொண்டிருக்கும் அலர்மேல்மங்கை, கோடைக்காலம் முடிவடைந்தவுடன் ஆனி(ஜ்யேஷ்ட) மாதத்தில், பௌர்ணமி ஒளியில், குளிர்ந்த பத்மசரோ வரத்தில் புண்ணிய நீரின் மேல் உலா வந்து தரிசன மளித்து பக்தர்களை குளிர்விப்பது மஹா பாக்கியம் அல்லவா!

# பத்மசரோவரத்தில் ஸ்ரீபத்மாவதி தெப்போத்ஸவம்



தெலுங்கு மூலம் : திரு. ஜெ.பாலசுப்ரமண்யம்
தமிழாக்கம் : திரு. கே. வெங்கடரமணா



தாயார் இந்த கலியுகத்தில் பத்மசரோவத்தை தன் பிறந்த வீடாக நினைத்து தெப்பத்தில் அதாவது குளிர்ந்த நீரில் அகம் குளிர்ந்து, உலா வந்து பக்தர்களுக்கு தரிசனமளிக்கிறார். அந்த ஜகன்மாதாவான பத்மாவதி தேவியின் தெப்போத்ஸவத்தை பற்றி அறிந்து கொள்வோம்.

ஆனி மாதத்தில் ஏகாதசி முதல் பௌர்ணமி வரை 5 நாட்கள் நடைபெறும் தெப்போத்ஸவத்தின் முதல் நாள் மாலை ருக்மணி சத்ய பாமா உடனுறை ஸ்ரீகிருஷ்ணரை ஆலயத்தில் இருந்து கொடி சாமரம் மேள தாள மரியாதைகளுடன் ஆலயத்தைச் சுற்றி வலம் வந்து பத்மசரோவரத்தை அடைகின்றனர்.

கண்ணைக்கவரும் பல வண்ண மின் விளக்குகள், வேத நாதங்களின் நடுவே, மங்கள வாத்தியங்கள் முழங்க, அன்னமய்ய சங்கீர்த்தனைகளை கேட்டபடி ருக்மணி சத்யபாமா உடனுறை ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி தெப்பத்தில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் புரிகிறார்.

இரண்டாம் நாளான துவாதசியன்று ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமியும், மூன்றாம் நாள் திரயோதசி அன்று மாலை ஸ்ரீபத்மாவதி தாயார் திருச்சியில் சர்வ ஆபரணங்கள் மற்றும் புஷ்ப ஹாரங்களால் அழகாக அலங்கரித்து தெப்பத்தில் மூன்று முறை வலம் வரச் செய்வர்.

நான்காவது நாளான சதுர்த்தசி அன்று இரவு ஸ்ரீபத்மாவதி தாயார் திருச்சி வாகனத்தில் வைபவமாக உலா வந்து தெப்பத்தில் எழுந்தருளி வேத நாதங்கள், மங்கள வாத்தியங்கள் மற்றும் சங்கீர்த்தனைகளின் நடுவே 5 முறை வலம் வந்து பக்தர்களை ஆனந்தக் கடலில் மூழ்க வைக்கிறார். பின்னர் தெப்பக்குளத்தில் இருந்து பத்மாவதி தாயார் தங்க கஜ வாகனத்தில் எழுந்தருளி "கஜலட்சுமி"யாக பக்தர்களுக்கு தரிசனமளித்துக் கொண்டு ஆலயத்தை

## தெப்பத்தில் ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி

ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்திற்கு தென்திசையில் கிழக்கு முகமாக ஸ்ரீபலராம கிருஷ்ணர் ஆலயம் அமைந்துள்ளது. குருசேத்திர சமயத்தில் பலராமர் யாத்திரை செய்து கொண்டு, இங்குள்ள சுகமஹரிஷி ஆசிரமத்தை அடைந்தார். யுத்தத்திற்கு பிறகு சகோதரரை தேடிக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணரும் இவ்விடத்திற்கு வந்தார். ஸ்ரீசுக மகரிஷி இவர்கள் இருவருக்கும் அடைக்கலம் கொடுத்தார். இவர்கள் இங்கு வந்ததற்கு அடையாளமாக இருவரையும் இங்கு எழுந்தருள வேண்டினார். இந்நிகழ்ச்சியை நினைவு கூறும் வகையில் அமைந்த இப்பழமையான ஆலயமே ஸ்ரீபலராம கிருஷ்ணர் சன்னதி. இங்கே ருக்மணி, சத்யபாமா உடனுறை ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி உத்சவ மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இந்த ஸ்வாமி முதல் நாள் நடைபெறும் தெப்போத்ஸவத்தில் உலா வருவார்.





**ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம் :**

ஸ்ரீபத்மாவதி தாயாரின் ஆலய பிரகாரத்தில் தெற்குப் பகுதியில் கிழக்கு முகமாக ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி ஆலயம் அமைந்துள்ளது. 15–16ஆம் நூற்றாண்டிற்கும் முந்தைய இவ்வாலயத்தின் கருவறையில் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி எட்டு அடி உயரத்தில் ஸ்ரீதேவி பூதேவியுடன் கொலுவீற்றுள்ளார்.

நெற்றியில் வெள்ளை நாமத்துடன் சங்கு சக்கரத்துடன் வரத முத்திரை ஹஸ்தத்துடன் சதுர் புஜத்துடன் அழகாக எழுந்தருளியுள்ளார். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வாலயம் 1906 ல் ஆனி மாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் மஹந்துக்களால் புனரமைக்கப்பட்டது. அப்பொழுது அவதாரோத்ஸவம் என்ற பெயரில் மூன்று நாட்கள் கர்பாலய சிகரத்தின் மேல் தங்க கலச பிரதிஷ்டை, மஹாகும்பாபிஷேகம் ஆகியவை நடைபெற்றன.

மறுபடியும் 100 ஆண்டுகளுக்குப் பின் 2006 ஜுன், (ஜ்யேஷ்ட) மாதத்தில் உத்திரட்டாதி நட்சத்திரம் அன்று நிறைவு பெறும் வகையில் மூன்று நாட்கள் மஹா அவதாரோத்ஸவத்தை நிகழ்த்தினர். அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதத்தில் மூன்று நாட்கள் வருடாந்திர அவதாரோத்ஸவத்தை நிகழ்த்துவது சிறப்பு. இவ்வருடம் 2019 ஜுன் மாதம் 23ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரை மூன்று நாட்கள் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமியின் வருடாந்திர அவதாரோத்ஸவம் நிகழ்த்தப்பட உள்ளது.

இம்மூன்று நாட்கள் ஸ்நபன திருமஞ்சனம், அர்ச்சனை மற்றும் நிவேதனத்துடன் மாலை ஊர்வலமும் சிறப்பாக நடைபெறும். முதல் நாள் மாலை ஸ்ரீதேவி பூதேவி உடனுறை சுந்தரராஜ ஸ்வாமி பெரிய சேஷ வாகனத்திலும், அவர் மட்டுமே இரண்டாவது, மூன்றாவது நாட்களில் ஹனுமந்த வாகனம் மற்றும் கருட வாகனத்தில் உலா வருவார். பத்மசரோவரத்தில் நடைபெறும் தெப்போத்ஸவ திருநாட்களில் இந்த ஸ்வாமி இரண்டாம் நாள் தெப்பத்தில் பவனி வருவது குறிப்பிடத்தக்கது.

அடைகிறார். அடுத்து ஐந்தாம் நாள் பௌர்ணமி அன்று வெண்ணிலாவின் ஒளியில் குளிர்ச்சியுடைய பத்ம சரோவரத்தில் பத்மாவதி தாயார் தெப்பத்தில் 5 முறை பிரதக்ஷிணமாக உலா வந்து வேதகானம், அன்னமய்யா கீர்த்தனைகளுக்கிடையே பக்தர்களின் திவ்ய மங்கள ஆரத்தியை பெற்று மனம் குளிர்கிறார்.

பின்னர் அலர்மேல்மங்கை தாயாரை புஷ்கரணி யில் இருந்து தங்கத்தால் செய்யப்பட்ட கருட வாகனத் தில் எழுந்தருளச் செய்து, மேளதாளங்களின் நடுவே பக்தர்களின் ஆரத்தியைப் பெற்று புறவீதிகளில் உலாவந்து ஆலயத்தை அடையச் செய்வர். இவ்வாறு 5 நாட்கள் தெப்போத்ஸவம் மிகச் சிறப்பாக நடை பெறும். பௌர்ணமி ஒளியில் உலாவரக் கூடிய தாயாரைக் கண்ணாரக் கண்டு மனதார மகிழ்ச்சியுற்று இவ்வாறு வணங்குவோம்!


*அக்ஞானதிமிரம் ஹந்து, சுத்தக்ஞான பிரகாசிகா*
*ஸர்வைஸ்வர்ய ப்ரதாமே உஸ்து, த்வத்கலா*
*மயஸம்ஸ்திதா*

தூய்மையான பௌர்ணமி ஒளியில் உலா வந்து, அஞ்ஞானம் என்னும் இருளைப் போக்கி, நிர்மலமான ஞான ஒளியையும், அனைத்து செல்வங்களையும் அருளக்கூடிய ஓ! அலர்மேல்மங்கை தயாரே! உம் திவ்ய தரிசனம் எங்களுக்கு ஓர் அனுக்கிரகம் என்று மனதார வணங்கி மகிழ்வோம்.





# திருமலையில் ஸ்ரீசைலபூர்ணர்



சிறார் வாக்கு

செல்வன். சி. ஸ்ரீவாசுதேவா,
திருப்பதி.

கலியுக தெய்வமான திருவேங்கடவனின் அருளால் மகிமைகள் நிறைந்த திருமலையின் முதல் ஆசார்ய புருஷ ரான ஸ்ரீசைலபூர்ணர் என்கிற பெரிய திருமலை நம்பிகள் இம்மலையிலே அவதரித்தார். திருவேங்கடமுடையானுக்கு அனுதினமும் தீர்த்த கைங்கர்யம் செய்து வந்த இவர் ஆளவந்தாரின் முதன்மையான சிஷ்யர்களில் ஒருவர். இராமாயணத்தின் 18 ரகசியத்ரயங்களை ஸ்ரீராமாநுஜருக்கு எடுத்து உரைத்தவர்.

திருமலைநம்பி பாபவினாசனத்திலிருந்து ஸ்வாமி கைங்கர்யத்திற்காக சுமந்து வந்த தீர்த்த பானையை திருமலையப்ப ஸ்வாமியே சிறு வேடுவ பாலகனாக வந்து, உடைத்து, அதனுள் இருந்த தண்ணீர் முழுவதும் கீழே விழுமாறு செய்தார். கோபமடைந்த திருமலை நம்பி, "சிறுவனே! நீ தவறு செய்து விட்டாய். ஸ்வாமி கைங்கரியத்தை கெடுத்து விட்டாயே" என்று கூறி மன வருத்தப்பட்டார். உடனே சிறுவனாக வந்திருந்த திருவேங்கடவன் அஞ்சனாத்ரி மலையிலிருந்து ஆகாச கங்கையை உருவாக்கிக் கொடுத்தார். இங்கிருந்து தனக்கு தேவையான நீரினை கொண்டு வரலாம் என கூறினார். அதுமட்டுமல்லாமல் அவர் நம்பிகளை "தாதா" என்று அழைத்ததால், நம்பிகளின் வம்சத்தவர்கள் "தாதாசாரியர்" என அழைக்கப்படுகின்றனர்.

ஒரு சமயம் சிவபக்தரான கோவிந்த பெருமாள் ஸ்ரீகாளஹஸ்தி கோயிலில் சேவை புரிந்து கொண்டு இருந்தார். இராமாநுஜரின் வேண்டுகோளின்படி கோவிந்த பெருமாளை வைணவராக்குவதற்காக தன் இரு சீடர்களுடன் திருமலையிலிருந்து புறப்பட்ட திருமலை நம்பிகள் கோவிந்த பெருமாள் தினமும் நீராடி, பூக்களை சேகரிக்கச் செல்லும் வழியில் ஓர் மரத்தின் அடியில் அமர்ந்து வைணவத்தையும், எம்பெருமானுடைய லீலைகளையும் கோவிந்தனின் காதில் விழும்படி கூறி கொண்டிருந்தார். தினமும் அவ்வார்த்தைகளை கோவிந்த பெருமாள் கேட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் திருமலை நம்பிகள் கீழ் கண்டவாறு ஸ்வாமி நம்மாழ்வாரின் பாசுரத்தை ஒரு பனை ஓலையில் எழுதி அதை கோவிந்த பெருமாள் வரும் பாதையில் அவரின் கண்களில் படுமாறு வைத்தார்.

*"தேவு மெப்பொருளும் படைக்க, பூவில் நான்*
*முகனைப் படைத்த தேவன்*
*எம்பெருமானுக்கல்லால் பூவும், பூசனையும்*
*தகுமே?"*

"உலகத்திலுள்ள ஜீவராசிகள் அனைத்தையும் படைப்பதற்காக படைப்புக் கடவுளான பிரம்ம தேவரைத் தனது உந்தியின் மூலம் சிருஷ்டித்த ஸ்ரீமந்நாராயணன் மட்டுமே புஷ்பங்களால் பூஜிக்கப்படத்தகுந்தவன்" என்ற பொருள் கொண்ட இப்பாசுரத்தை படித்த கோவிந்த பெருமாள், திருமலை நம்பிகளுடன் வாதங்களை தொடர்ந்து அதனால் தெளிவுற்று மனம் மாறி, வைணவத்திற்கு மாறினார்.

இவ்வாறாக வைணவத்தை பரப்பி, எம்பெருமானின் கீர்த்திகளை அனைவருக்கும் எடுத்து உரைத்து, இராமாயணத்தின் ரகசிய அர்த்தங்களை பிரபந்தங்களின் வாயிலாக நமக்கு அருளி, தினமும் தீர்த்த கைங்கர்யம் செய்த திருமலை நம்பிகளுக்கு திருமலையில் தனிச் சந்நிதி உள்ளது. திருமலை நம்பிகளை நாமும் வணங்குவோம்!

# ஸ்ரீவாரி சேவை:தன்னார்வத் தொண்டர்களுக்கான வழிகாட்டுதல்கள்

1) ஸ்ரீவாரி சேவையை ஒரு வாரம் காலம் செய்வதற்கு குறைந்தது 10 நபர்கள் கொண்ட குழுவாக இருத்தல் வேண்டும்.

2) சுயநலமற்ற சேவை புரிவதற்கு இவ்வுறுப்பினர்கள் ஆன்மீக ஞானம் கொண்டிருக்க வேண்டும். ஆண், பெண் வேறுபாடு இல்லை. இந்துக்களுக்கு மட்டுமே அனுமதி.

3) ஸ்ரீவாரி சேவையில் பங்கு பெற விரும்பும் சேவகர்கள் தங்கள் பெயர், முகவரி, வயது, ஆண்/பெண், தொழில், stamp size புகைப்படம், தொலைபேசி எண் போன்ற விவரங்களை "மக்கள் தொடர்பு அலுவலர், தி.தி.தே. நிர்வாகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517501" என்ற முகவரிக்கு அனுப்பவும். மேலும், தொடர்புக்கு : 0877–2263544, 2263293.

4) தற்பொழுது இணையதளத்தில் 25–40 வயதுடையோர் 3 நாட்களும், 18–60 வயது வரை 4 நாட்கள் அல்லது 7 நாட்கள் வரை ஸ்ரீவாரி சேவையில் பங்கு பெறலாம்.

5) ஸ்ரீவாரி சேவை செய்ய இணையதளத்தின் மூலமாகவும் பதிவு செய்துக் கொள்ளலாம். www.tirumala.org எனும் வலைதளத்தில் "ஸ்ரீவாரி சேவை" எனும் இணைப்பு மூலமாகவும் பதிவு செய்துக் கொள்ளலாம்.

6) ஸ்ரீவாரி சேவையில் பங்கு கொள்ள வருபவர்கள் அசல் ஆதார் அட்டை மற்றும் நகல் பிரிதியை கொண்டு வருதல் வேண்டும். ஆதார் அட்டை இல்லாதவர்களுக்கு சேவை செய்ய அனுமதி இல்லை.

7) குழுத்தலைவர் அல்லது ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீவாரி சேவகர்களின் முழு விவரங்களையும் திருமலையிலுள்ள "ஸ்ரீவாரி சேவா சதனில்" தெரிவித்தல் வேண்டும்.

8) ஸ்ரீவாரி சேவகர்கள் தம்முடன் குழந்தையையோ, நோயாளியையோ, வயதானவர்களையோ அழைத்து வர வேண்டாம். அவ்வாறு அழைத்து வந்தால் எவ்விதத்திலும் அவர்களுக்கு சேவையில் அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

9) ஸ்ரீவாரி சேவைக்கு வரும் குழுத்தலைவர் அவருக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர்களை மட்டுமே அழைத்து வரவும். சேவகர்கள் செய்யும் தவறுகளுக்கு குழுத்தலைவரே முழுப்பொறுப்பாவார்.

10) சேவகர்களை திருமலைக்கு அழைத்து வருவது முதல் திரும்பி அவர்கள் சொந்த ஊருக்கு செல்லும்வரை முழு பொறுப்பும் குழுத்தலைவரே ஆவார்.

11) ஸ்ரீவாரி சேவை குழுவினர் தமக்கு அறிவுறுத்திய தேதியில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் திருமலையில் பாபவினாசனம் செல்லும் சாலையில் கல்யாண மேடை அருகிலுள்ள ஸ்ரீவாரி சேவா சதனில் ஏ.இ.ஓ./சிறப்பு அலுவலரை சந்தித்து தகவல் அளித்தல் வேண்டும்.

12) ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக தங்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சேவகர்கள் தங்கும் அறைக்கு சொந்தமாக பூட்டு சாவி கொண்டு வரவும்.

13) ஸ்ரீவாரி சேவா சதனில் சேவகர்களுக்கு அடையாள அட்டையை அளித்து சேவை செய்ய வேண்டிய பணியையும் ஒதுக்குவர். சேவகர்கள் தினமும் குறைந்தது ஆறு மணி நேரம் சேவை புரிய வேண்டும்.

14) தினமும் காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை, மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை பஜனை, சத்சங்கம் மற்றும் பயிற்சி வகுப்புகளில் பங்கு கொள்ள வேண்டும். காலையில் சேவை செய்பவர்கள் மாலையிலும், மாலையில் சேவை செய்பவர்கள் காலையிலும் பயிற்சி வகுப்புகளில் ஆஜராக வேண்டும்.

15) ஸ்ரீவாரி சேவையில் உள்ளபோது மட்டுமே ஸ்கார்ப் அணிதல் வேண்டும்.

16) எப்பொழுதும் "கோவிந்தா" என்று சொல்லுங்கள். மற்றவரையும் "கோவிந்தா" என அழையுங்கள்.

17) ஸ்ரீவாரி சேவை என்பது பக்தர்களுக்கு செய்யும் இலவச சேவை மட்டுமே. இந்த சேவைக்காக குழுத் தலைவருக்கோ, ஊழியர்களுக்கோ பணமோ பொருளோ அளிக்க வேண்டாம்.

18) ஸ்ரீவாரி சேவகர்கள் இந்து மதத்தின் அடையாளமான திருநாமம்/திலகம் அல்லது குங்குமம்/சந்தனம் நெற்றியில் அணிதல் வேண்டும்.

19) ஸ்ரீவாரி சேவகர்கள் பக்தர்களுள் ஸ்வாமியை தரிசித்து பக்தியோடு சேவை புரிதல் வேண்டும்.

20) ஸ்ரீவாரி சேவகர்கள் தமக்கு அளிக்கப்படும் இடங்களில் மட்டுமே சேவை புரிய வேண்டும். ஸ்ரீவாரி ஆலயத்தில் சேவை கட்டாயமில்லை. ஆலயத்திலேயே சேவை வேண்டும் என்றும் கேட்கக் கூடாது.

21) ஸ்ரீவாரி சேவகர்கள் ஸ்ரீவாரி சதனில் உள்ள கழிவறையை தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள். தங்குமிடத்தில் தண்ணீரையும் மின்சாரத்தையும் வீணாக்காதீர்கள்.

22) ஸ்ரீவாரி சேவகர்கள் தாம் தங்கும் வளாகத்தில் இரவில் ஆண்கள் அரை பேண்ட் அணிந்தும், பெண்கள் நைட்டி அணிந்தும் இருத்தல் கூடாது.

23) ஸ்ரீவாரி சேவையில் உள்ள விதிமுறைகளை ஸ்ரீவாரி சேவகர்கள் கடைபிடிக்கத் தவறினால் இரண்டாண்டுகள் சேவைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

24) சேவாசதன் மற்றும் பி.ஏ.சி.யில் ஸ்ரீவாரி சேவை நடவடிக்கைகள் குறித்து இரண்டு அல்லது மூன்று ஸ்ரீவாரி சேவை ஒருங்கிணைப்பாளர்கள் மேற்பார்வை இடுவர். அவர்களுக்கு ஒத்துழைப்பு அளியுங்கள்.

**சீருடை : ஆண்கள் :** வெள்ளை (சட்டை அல்லது குர்தா, பேன்ட்/வேஷ்டி/பைஜாம்)

**பெண்கள் :** மெரூன் பார்டர் கொண்ட ஆரஞ்சு வண்ண புடவை, மெரூன் பார்டர் கொண்ட இரவிக்கை அல்லது ஆரஞ்சு வண்ண குர்தா, மெரூன் வண்ண பைஜாம், மெரூன் வண்ண சுடிதார்.



# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## பக்த துருவனின் சரித்திரம்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி.

தேவதேவனின் அம்சமான பிரம்ம தேவரின் குமாரர் சுயம்புமனு. சுயம்பு மனுவின் இரண்டாவது குமாரர் உத்தானபாதர். உத்தானபாதருக்கு இரண்டு மனைவியர், மூத்தவள் சுனீதி. இளையவள் சுருசி. மூத்தவளாகிய சுனீதியின் மகனே பக்த துருவன். இளையவளாகிய சுருசிக்கு உத்தமன் என்ற பிள்ளை இருந்தான். ஒரு சமயம் உத்தான பாதர் சுருசியின் மகனான உத்தமனை தன் மடியில் வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த சுனீதி மகனாகிய துருவனுக்கும் தன் தந்தையின் மடியில் விளையாட வேண்டும் என்னும் ஆசை அரும்பிற்று. ஆனால், உத்தானபாதர் துருவனின் ஆசையைக் கண்டும் சிறிதும் இலட்சயம் செய்யவில்லை. இருந்தபோதிலும் துருவன் தந்தையின் மடியில் ஏறி அமர்வதற்கு முயற்சித்தான். அப்பொழுது அங்கு வந்த சுருசி, அரசன் தன் மீது மிகவும் விருப்பமுற்று இருக்கின்ற காரணத்தினால் கர்வம் கொண்டு “பாலகனே! அரசரின் மடியில் அமர்வதற்கும், சிம்மாசனத்தில் ஏறி அமர்வதற்கும் உனக்கு தகுதியில்லை. நீ ஒரு ராஜ குமாரனாகவே இருந்த போதிலும் என் வயிற்றில் வந்து பிறக்கவில்லை. அதனால் நீ அதற்கு தகுதியிழந்தவனாகிறாய். ஒரு வேளை அந்தச் சிம்மாசனம் ஏற உனக்கு விருப்பம் இருந்தால், பகவானை நோக்கித் தவம் செய்து ஸ்ரீமந்நாராயணனின் அனுகிரகத்தோடு என் வயிற்றில் பிள்ளையாக வந்து பிறந்திடுவாயாக” என்று கூறினாள்.

சிற்றன்னையின் இந்த வார்த்தைகள் துருவனின் மனதை மிகவும் புண்ணாக்கியது. இக்கொடுஞ்சொற்கள் அரசனின் செவிகளில் விழுந்த போதிலும் அதற்கு எந்தவொரு பதிலும் பேசாமல் இருந்து விட்டார். எனவே தான் என்ன செய்வது என்று ஒன்றும் புரியாதவனாகிய துருவன் அழுதுக் கொண்டே தன் தாயிடம் சென்றான். அங்கு நடந்தவற்றை எல்லாம் எடுத்துக் கூறினான். அதனை அறிந்த சுனீதி மிகவும் வேதனைப்பட்டாள்.

“மகனே! மறந்தும் பிறருக்கு அமங்கலம் உண்டாக வேண்டும் என்று நினைக்காதே. மற்றவர்களுக்கு யாரொருவர் துன்பத்தைச் செய்கிறார்களோ அவர்களே அத்துன்பத்தை அனுபவிக்க வேண்டி வரும். உன் சிற்றன்னை கூறுவதும் உண்மையே! என் வயிற்றில் பிறந்ததால்தான் நீ அதிர்ஷ்டமில்லாதவனாக ஆகி விட்டாய். சுருசி சொல்லிய வார்த்தைகள் கடுமையானதாக இருந்தாலும் யதார்த்தம் அதுதான். உத்தமனைப் போல நீயும் அரசருடைய சிம்மாசனத்தை விரும்பினால் உன் சிற்றன்னைக் கூறியபடி நாராயணனுடைய திருவடிகளைப் பற்றி வணங்கி அவனுடைய திருவடி சேவையில் ஈடுபடுவது ஒன்றே உன் துன்பத்தை போக்கும் வழியாகும். அதுமட்டும் அல்லாது அடைவதற்கும் அதுவே வழியாகும்” என்றாள்.

தன் தாயின் வார்த்தைகளை செவிமடுத்த துருவன் ஒருவாறு மனம் தெளிந்தான். திட சித்தத்துடன் அரண்மனையை விட்டு



வெளியேறி காட்டை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

துருவன் தவம் செய்வதற்காகக் காட்டிற்குச் செல்வதை அறிந்த நாரதர் அவருடைய திருக்கரத் தால் அவனை ஆசிர்வதித்தார். ஆயினும் அவனு டைய மன உறுதியைச் சோதிப்பதற்காக நாரதர் இப்படிக் கூறினார்.

“மகனே! நீயோ சிறுபிள்ளை; விளையாட்டுப் பிள்ளை. விளையாட்டில் கவனம் செலுத்துகின்ற வயது இது. உன் சிற்றன்னை அவமானப்படுத்தி விட்டாள் என்ற கோபத்தோடு தவம் செய்யப் புறப்பட்டு விட்டாயே. சிற்றன்னையின் வார்த் தையைப் பெரிது படுத்தாமல், நல்லதும் கெட்டதும் இறைவனுடைய செயல் என்று அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியது தானே.

மேலும், தபசு என்பது உன்னைப் போன்ற சாதாரணமானவர்களுக்கு மிகவும் அசாத்தியம். இறைவனை தரிசிக்க வேண்டும் என்பது அவ்வளவு எளிமையான காரியம் அல்ல. எனவே உன் முயற்சியைக் கைவிட்டு வீட்டுக்குத் திரும்பிப் போய் விடு. நீ பெரியவனானப் பின்பு யோகப் பயிற்சியின் மூலம் இக்காரியத்தை சாதிக்கலாம்” என்றார்.

நாரத முனிவரின் வார்த்தைகளைக் கேட்ட துருவன், அதற்கு சம்மதிக்கவில்லை. தங்கள் அறிவுரைகளை ஏற்கும் மனநிலை எனக்கு இப்பொழுது இல்லை. மேலும் சிற்றன்னை யின் கொடிய வார்த்தைகளைப் பொறுத்துக் கொள்ளும் குணம் எனக்கு இல்லை என்று கூறினான். மூவுலகிலும் இதுவரை யாரும் பெறாத திவ்யமான இடத்தை நான் பெற விரும்புகிறேன். எனவே, அதற்கு ஒரு நல்ல வழியுண்டானால் கூறுங்கள் என வேண்டினான். அவனுடைய பணிவான வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நாரதர் உன் விருப்பப்படியே தக்கதொரு மார்க்கத்தை உனக்கு காட்டுகிறேன் என்றார்.

உன் தாய் சொல்லியப்படியே நீ ஸ்ரீகிருஷ்ண பக்தியைக் கைக்கொள்வாயாக. ஏனென்றால் அறம், பொருள், இன்பம் ஏன் மோட்சத்தை விரும்புமவர்கள் கூட ஸ்ரீஹரி பக்தியிலேயே தன் மனதை நிலைக்கச் செய்ய வேண்டும். குழந்தாய் நீ யமுனை நதிக்கரையில் உள்ள மதுவனத்திற்குச் செல்வாயாக!

நாள்தோறும் மூன்று வேளையும் யமுனையின் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி அஸ்டாங்க யோகத்தின் மூலமாக இந்திரியங் களையும் மனதையும் கட்டுப்படுத்தி ஏகாக்கிர சிந்தையுடன் ஸ்ரீகிருஷ்ண பகவானை “ஓம் நமோ பகவதே வாசுதேவாய” என்னும் துவாதசாக்ஷர மந்திரத்தை ஜபிப்பாயாக. ஸ்ரீகிருஷ்ணரை பிரதிஷ்டை செய்து தினமும் தவறாமல் பூஜித்து தியானித்து வந்தால் பகவத் தரிசனம் உண்டாகும் என்றார்.

பின்பு நாரதமுனி நேராக உத்தான பாதரின் அரண் மனைக்குச் சென்றார். துருவன் காட்டுக்குச் சென்ற பின்பு அதை நினைத்து மனம் வருந்தினான் உத்தானபாதர். நாரதரைப் பார்த்தவுடன் “ஸ்வாமி! இளையவள் மீதிருந்த மோகத்தால் அருமைக் குமாரனான துருவனை நான் ஆதரிக் காமல் இருந்து விட்டேன். இப்பொழுது அவன் காட்டில் என்ன பாடுபடுகின்றானோ அல்லது துஷ்ட மிருகங்களால் அவன் உயிருக்கு ஏதாவது தீங்கு நேர்ந்திருக்குமோ என்றெல்லாம் நினைத்து மனம் வருந்தி நாரதரிடம் முறையிட்டான்”.

அதற்கு நாரதர் அவன் கவலையை போக்கும் விதமாக இவ்வாறு கூறினார். துருவன் இப்பொழுது இறைவனுடைய பாதுகாப்பில் இருக்கிறான். அவனைப் பற்றி நீங்கள் கவலைக் கொள்ள வேண்டியதில்லை. உலகத்திலேயே இதுவரையில் யாராலும் செய்ய முடியாத செயல்களை அவன் சாதித்துக் காட்டப் போகிறான். அவனால் உன்னுடைய புகழ் மேலும் பரவப் போகிறது என விவரித்தார். நாரதர் கூறியதைக் கேட்டு சற்று மனம் ஆறுதல் அடைந்தாலும், எப்போதும் தன் மகனைப்

பற்றிய நினைவோடு ராஜ்ய பரிபாலன காரியங்களையும் மறந்தான்.

நாரத முனிவரின் உபதேசத்தின்படி துருவன் மதுவனத்திற்குச் சென்றான். அங்கே புனித நீரில் நீராடி உபவாசம் மேற்கொண்டான். முதல் மாதத்தில், மூன்று நாட்களுக்கு ஒரு முறை பழங்களையும், சிறு காய்களையும் உட்கொண்டு இறைவனை தியானித்தான்.

இரண்டாம் மாதத்தில், ஆறு நாட்களுக்கு ஒரு முறை உலர்ந்த இலைகளையும் பச்சைப்புல் போன்றவற்றை மட்டுமே உண்டு தன் உபவாசத்தைத் தொடர்ந்து தியானித்து வந்தான். மூன்றாம் மாதம் ஒன்பது நாட்களுக்கு ஒரு முறை வெறும் தண்ணீர் மட்டும் அருந்தினான்.

நான்காம் மாதம், பிரணாயாமத்தை கைவரப் பெற்றவனாகிப் பன்னிரண்டு நாட்களுக்கு ஒரு முறை காற்றை மட்டும் சுவாசித்து வந்தான். ஐந்தாவது மாதத்தில் துருவன் காற்றைக் கட்டுப்படுத்தி விட்டு சலனமின்றி ஒரு காலை மட்டும் பூமியில் ஊன்றியபடி கட்டைப்போல் அசைவற்று நின்று பரபிரம்மத்தை தியானம் செய்து வந்தான்.

அவனுடைய கடும் தவத்தின் விளைவாக மூன்று உலகங்களும் நடுங்கின. உலக பாலகர்கள் அனைவரும் மூச்சு விட முடியாமல் தவித்தார்கள். இந்நிலையில் தேவர்கள் அனைவரும் நேரே ஸ்ரீஹரியிடம் ஓடிச் சென்று தங்களை இத்துன்பத்திலிருந்து காத்தருளும்படி வேண்டிக் கொண்டனர்.

தேவர்களின் இத்துன்பத்திற்குக் காரணம் துருவன் தன்னை நோக்கி மேற்கொண்டிருக்கின்ற கடுந்தவமே என்பதை அறிந்த இறைவன், தன் கருட வாகனத்தின் மீதேறி மதுவனத்தைச் சென்றடைந்தார். அதுவரையில் துருவன் தன்னுடைய இதயத்தில் தரிசித்துக் கொண்டிருந்த இறைவனின் திவ்ய சொரூபம் மறைந்தது. உடனே கண்களைத் திறந்துப் பார்த்தான். அதே போன்ற திவ்ய சொரூபத்துடன் எதிரே இறைவன் காட்சியளித்தார்.

பகவத் தரிசனத்தைக் கண்டவுடன் துருவன் மிகவும் பரவசமடைந்தான். ஆச்சரியத்தில் மூழ்கிய அவன் தன்னை மறந்தவனாகி அப்படியே பூமியில் விழுந்து இறைவனை வணங்கினான். வாயால் அவன் பெருமைகளைப் பாடி போற்ற வேண்டும் என எண்ணினான். ஆனால், அவனுக்கு வார்த்தைகள் அகப்படவில்லை; தவித்தான். அவனுடைய தவிப்பை உணர்ந்த ஸ்ரீஹரி தன்னுடைய கையில் இருந்த சங்கத்தால் அவன் கன்னங்களை மெல்ல வருடினார். சங்கம், கன்னங்களில் பட்டவுடனே துருவனுக்கு வேதசாரம் எல்லாம் தெரிய வந்தது. பகவத் தத்துவமான ஞானத்தோடு பக்த துருவன் இறைவனை போற்றி வணங்கினான்.

திவ்ய வரத்தைப் பெற வேண்டும் என்னும் நோக்கத்தோடு தபசு செய்யத் தொடங்கிய துருவனுக்கு பகவானுடைய தரிசனமே கிடைக்கப் பெற்றதினால், திவ்ய வரம் பெற வேண்டும் என்ற எண்ணமே அவனை விட்டு விலகிப் போனது. பகவத் சேவையைத் தவிர மற்ற எதுவும் தனக்கு வேண்டியதில்லை என்ற எண்ணம் துருவனுக்கு ஏற்பட்டது.

பக்த துருவனுடைய பிரார்த்தனைக்கு மிகவும் மனம் மகிழ்ந்த இறைவன் அவனுக்கு திவ்வியமான வரங்களைத் தந்தார். "இராஜகுமாரனே! துருவா! கல்ப முடிவில் உண்டாகும் பிரளயத்திற்குப் பின்பும் கூட நிலைத்து நிற்கக் கூடிய துருவ லோகத்தை உனக்கு நான் தருகிறேன். க்ருக நட்சத்திரங்கள் எல்லாம் அந்த துருவ லோகத்தை எப்பொழுதும் சுற்றி வரும்.

உன் தந்தைக்குப் பின்பு முப்பத்தாறாயிரம் ஆண்டுகள் நீ நாட்டை ஆள்வாய். உனக்கு முதுமை என்பதே கிடையாது. நீ இவ்வுலகத்தில் அனைத்து சுகங்களையும் அனுபவித்துப் பின்னர் கடைசியில் என்னை வந்தடைவாய். எல்லோராலும் வணங்கப்படும் துருவ லோகத்தை அடைந்து பின்பு நீ பிறப்பறுத்த புண்ணியவனாகி நீ எப்பொழுதும் இந்த பூவுலகுக்கு வராதவனாகக் கடவாய்" என்று துருவனை இறைவன் ஆசிர்வதித்தார்.

பக்த துருவனின் சரித்திரம் இறைவன் அடியார்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். அனைவராலும் மிகவும் விரும்பக்கூடியதுமாகும். எப்படி பக்தி வைராக்கியம் மேற்கொள்ள வேண்டும் என்றும் தீவிரமான தபசு மேற்கொண்டு பக்தி செய்து பகவத் தரிசனத்தைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் துருவ சரித்திரத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

துருவ சரித்திரம் கேட்பதினால் மனிதர்களின் மனம் இறைவனின்பால் இழுத்துச் செல்லப்பட்டு நிலையாக நிலைக்க செய்கிறது. ஹரே கிருஷ்ணா!

பாகவத கதை சாகரம் தொடரும்...

# காமாட்சி அம்மன் விளக்கு

திரு. ஜி.வேலாயுதம், சேலம்.

வீட்டில் விளக்கு ஏற்றுவது என்பதே, வீட்டை ஒளியூட்டும் சிறப்பான ஒரு விஷயம்தான். விளக்குகளில் வட்ட முகம், இரட்டை முகம் முதல் 5 முகம் என பலவிதங்களில் காணப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இல்லங்களில் ஏற்றப்படும் காமாட்சி அம்மன் விளக்கு அமைகிறது. இது பெரும்பாலும் பல வீடுகளில் இருக்கும். காமாட்சி அம்மன் விளக்கை ஏன் பெரும்பாலானவர்கள் பயன்படுத்துகிறார்கள்? அந்த விளக்கை வீட்டில் ஏற்றி வைப்பதால் என்ன நன்மை ஏற்படும்? என்பதை இப்போது காணலாம்.

உலக மக்களின் நன்மைக்காக தவம் இருந்தவர், காமாட்சி அம்மன். அவர் அப்படி தவம் இருந்த வேளையில், சகல தெய்வங்களும் காமாட்சி அம்மனுக்குள் அடங்கினர். இதன் காரணமாக காமாட்சி அம்மனை வழிபட்டாலே, ஒருவருக்கு அனைத்து தெய்வங்களையும் வழிபட்ட பலன் கிடைத்து விடும்.

காமாட்சி அம்மனுக்குள் சகல தெய்வங்களும் அடக்கம் என்பதால், ஒவ்வொருவரும் தங்களுடைய குலதெய்வங்களை நினைத்துக் கொண்டு காமாட்சி அம்மன் விளக்கை ஏற்றி வணங்குவது ஐதீகம். இதனால் அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு காமாட்சி அம்மனுடைய அருளும், அவரவர் குல தெய்வத்தின் ஆசியும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. ஒரு சிலருக்கு தங்களுடைய குலதெய்வம் எது? என்பது தெரியாமல் இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள், காமாட்சி அம்மனையே குலதெய்வமாக நினைத்துக் கொண்டு, நீயே என் குல தெய்வமாய் இருந்து என் குலத்தை காப்பாற்று என வணங்கியபடி விளக்கேற்றி வழிபடுவார்கள். அதற்கு “காமாட்சி தீபம்” என்று பெயர்.

அனைத்து தெய்வங்களின் அருளையும், ஒன்றாகப் பெறுவதற்காகத் தான், திருமண சமயங்களில் கூட, மணமக்கள் கையில் காமாட்சி அம்மன் விளக்கை ஏந்திக் கொண்டு வலம் வரச் சொல்கிறார்கள். திருமணமாகி கணவன் வீட்டிற்குச் செல்லும் மணப்பெண், அங்கு முதன் முதலில் காமாட்சி அம்மன் விளக்கை ஏற்றவதற்கும் இதுதான் காரணம். அதோடு காமாட்சி அம்மன் விளக்கில் குலதெய்வமும் இருந்து அருள்புரிவதால், முதன் முதலில் அந்த விளக்கை ஏற்றுவதன் மூலம் அவர்கள் குலம் தழைத்து வளரும் என்பது நம்பிக்கை.

மங்கலப் பொருட்களில் இந்த காமாட்சி அம்மன் விளக்கும் ஒன்று. காமாட்சி அம்மன் விளக்கு புனிதமானது. இதில் கஜலட்சுமியின் உருவமே பொறிக்கப்பட்டிருக்கும். இது எல்லா வீடுகளிலும் இருக்க வேண்டிய விளக்கு. பூஜைக்கு முன் பூவும், பொட்டும் வைத்து மங்கலத்துடன் தீபம் ஏற்றி, தினமும் வழிபட்டு வந்தால் வறுமை விலகும்.

மணப்பெண்ணுக்கு சீர்வரிசைகளைத் தரும்போது, காமாட்சி அம்மன் விளக்கும், இரண்டு குத்து விளக்குகளும் அவசியம் வழங்குவார்கள்.

சிலர் தம் முன்னோர்கள் ஏற்றிய காமாட்சியம்மன் விளக்குச் சுடர் தொடர்ந்து, நிலைத்து எரியும்படி கவனித்துக் கொள்கின்றனர். பல குடும்பங்களில் பரம்பரை பரம்பரையாக காமாட்சியம்மன் விளக்குகளை பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். புதுமனை புகும்போதும், மணமக்கள் மணப்பந்தலை வலம் வரும்போதும், எல்லா இருள்களையும் நீக்கியபடி, அருள் ஒளியை அனைவருக்கும் அருளியபடி முன்னால், பக்தியுடன் ஏந்திச் செல்லப்படும் விளக்கு, இந்த காமாட்சி அம்மன் விளக்கு.



# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

## குலசேகர ஆழ்வார் :

குலசேகர ஆழ்வார் கேரள தேசத்தில் திருவஞ்சிக் களத்தில் மாசி மாதம் புனர்வசு நக்ஷத்ரத்தில் அவதரித்தவர். இவர் அருளிய பிரபந்தம் பெருமாள் திருமொழியாகும்.

"அஞ்சனமாமலைப் பிறவி ஆதரித்தோன் வாழியே
அணி அரங்கர் மணத்தூணை அடைந்து உய்ந்தோன் வாழியே
வஞ்சி நகர் தன்னில் வாழ வந்தோன் வாழியே
மாசி தன்னில் புனர்பூசம் வந்துதித்தான் வாழியே
அஞ்சல் எனக் குடப்பாம்பில் அங்கையிட்டான் வாழியே
அநவரதம் இராமகதை அருளுமவன் வாழியே
செஞ்சொல்மொழி நூற்றஞ்சும் செப்பினான் வாழியே
சேரலர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே"

### பதவுரை

அஞ்சனமாமலை – அஞ்சனாத்ரி என்னும் திரு வேங்கடமலையில், பிறவி – ஜன்மத்தை, ஆதரித்தோன் – விரும்பினான். அணி அரங்கர் – அழகிய திருவரங்கன், மணத்தூணை – கர்ப்ப க்ரஹத்தின் முன்புள்ள திருமணத் தூணை, அடைந்து உய்ந்தோன் – அடைந்து பரமபதம் பெற்றான். வஞ்சி நகர் தன்னில் – சேர நாட்டில், வாழ வந்தோன் – அரசாட்சி செய்தவன். மாசி தன்னில் – மாசி மாதத்தில், வந்து உதித்தான் – பிறந்தான். அஞ்சல் என – பயம் வேண்டாம் என்று குடப்பாம்பில் – பாம்பு நிறைந்த குடத்தில், அங்கை இட்டான் – அழகிய கையை இட்டவன். அநவரதம் – எப்போதும், இராமகதை – இராமாயணக் கதையை, அருளுமவன் – பாசுரமாகப் பாடினவன். செஞ்சொல் மொழி – நேர்மையான சொல்லான தமிழில், நூற்றஞ்சும் – 105 பாசுரங்களான பெருமாள் திருமொழியை, செப்பினான் – அருளினவன். சேரலர் கோன் – தமிழ் வேந்தர் மூவரில் ஒருவரான சேர நாட்டு அரசன், செங்கமலம் – சிவந்த தாமரை போன்ற, – திருவடிகள், வாழியே – நித்யமாக வாழ வேண்டும்.

### சிறப்பு உரை

(அஞ்சனமாமாலை) வடக்குத் திருமலைக்கு அஞ்சனாத்ரி என்று பெயர். திரேதாயுகத்தில் பம்பா க்ஷேத்ரத்தில் (தற்போது ஹம்பி) வசித்து வந்த வானர இனத்தைச் சேர்ந்த அஞ்சனை, கேஸரி ஆகிய இருவரும் மதங்க முனிவர் ஆச்ரமத்துக்குச் சென்று அவரை வணங்கி வருவார்கள். மகப்பேறு இல்லாத காரணத்தால் மதங்கர் சொல்லியபடி அஞ்சனா தேவி திருமலையில் ஆகாச கங்கை தீரத்தில் 12 வருடம் கடும் தவம் புரிந்தாள். பின்னர், வாயுதேவன் நேரில் வந்து மாங்கனியைக் கொடுக்க, அதனால் உண்டானவனே அனுமானாவார். இது பற்றியே அஞ்சன மாமலை என்ற பெயர் திருமலைக்கு ஏற்பட்டது என்று பவிஷ்யோத்தர



புராணம் சொல்லும். பிரம்மாண்ட புராணத்திலும் இந்த வரலாறு சற்று மாறுபட்டு வருகிறது. இப்படிப்பட்ட அஞ்சனாசலத்துக்கு அதிபதியானவன் திருவேங்கடவன். இது பற்றியே திருவேங்கடவன் அஷ்டோத்தர சத நாமாவளியில் **''ஓம் அஞ்ஜனா கோத்ரபதயே ஸ்ரீவேங்க டேசாய நம:''** என்ற திருநாமம் (81) சொல்லப்படுகிறது. மேலும் அஞ்சனைக்கு அருமையான தனயனை அளித்த திருவேங்கடவனுக்கு **''ஓம் அஞ்சனாஸுததாத்ரே ஸ்ரீவேங்கடேசாய நம:''** என்ற திருநாமமும் (83) உள்ளது காணலாம். மேலும், நம்மாழ்வார் திருவாய்மொழியில் (8.2.8) ப்ராப்ய ஸ்தலங்களை – அடைய வேண்டிய தலங்களைச் சொல்லும்போது **''அஞ்சன வெற்பும்''** என்று திருமலை ஆகிற அடைய வேண்டிய தலம் என்பர். இவ் விடத்தில் அஞ்சன வெற்பு என்பது திருமலையும் பரமபதத்தோடு ஒக்கச் சொல்லலாய் இருக்கிறதாயிற்று என்பர் நம்பிள்ளை.

(பிறவி ஆதரித்தோன்) ஆதரித்தல் – ஆசை கூர்தல். அதாவது அஞ்சனமா மலையான திருமலையில் பிறக்க விருப்பப்படுதல். காரணம் யாதெனில் – இவ்வாழ்வார் தாம் அருளிய பெருமாள் திருமொழியில் முதல் பதிகத்தில் அரங்கனைக் காண்பதில் ஸங்கல்பம் கொண் டார். இரண்டாம் பதிகத்தில் அவன் அடியார்கள் திறத்து நன்மை பிறந்தபடியைப் பேசினார். இப்படி பகவத் பாக வத விஷயத்தில் நன்மையும் மற்றவர்களோடு பற்றற்ற மையும் ஏற்பட்ட பின்பும் எம்பெருமானை அடையக் காணாமையாலே அந்த அரங்கனே பிறப்பின் ஸம்பந்தம் அறுத்துக் கொடுக்கைக்கும் கைங்கர்யம் கொள்ளுகைக் கும் திருமலையில் நிற்கிறான். ஆகையால் அவன் திருவடிகளிலே விழுந்து விரோதியில் ருசியின்மையும் கைங்கர்யத்தில் ருசியும் பிறந்த வேகத்தை **''ஊனேறு செல்வத்து''** என்னும் நான்காவது பதிகத்தில் குருகு, மீன், பொன்வட்டில் பிடிப்பவன், செண்பகம், தம்பகம், பொற்குவடு, கானாறு, நெறி, படி என்று திருமலையில் ஏதேனுமாக பிறக்க ஆசைப்படுகிறார். **''படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே''** என்று ஆழ்வார் வேண்டி யமை பற்றி திருமலையில் கர்ப்ப க்ருகத்திலுள்ள படிக்கு மட்டும் "குலசேகரப்படி" என்று வழங்குவர். இதற்குச் சேர, பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீவசந பூஷணத்தில் (238) **''ராஜாவான ஸ்ரீகுலசேகரப் பெருமாள் திர்யக் ஸ்தாவர ஜந்மங்களை ஆசைப்பட்டார்''** என்று அருளியது காண்க. இவை அனைத்தும் நிலையற்றதாகையாலே இறுதியில் ஆழ்வார் **''எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனு மாவேனே''** என்று அருளுகிறார். இது பற்றியே, திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசியத்தில் (15) **''ஏதேனும் என்றோனோ குலசேகரர் போலே''** என்று பெண் பிள்ளை அருளியது காண்க. பிள்ளை பெருமாள் அய்யங்காரும் தாம் அருளிய திருவேங்கடக் கலம்பகத்தில், **''மாடாக நிழற்று செழுமரனாகத் தவச்சிறிய பூடாகக் குழைத்த நறும்புதலாக வழிப்படுமோ ரோடாகப் பெறுவ மெனில் உயிர்காள்! நற்கதி பெறலாம் வீடாகத் திருநெறி மால் வீற்றிருக்கும் வேங்கடத்தே''** என்றது நினைதற்பால தாகும். இதனால் அஞ்சனமாமலையில் பிறவியின் பெருமை சொல்லப்பட்டது.

(அணி அரங்கர்) அழகிய அரங்கத்தைத் தனக்கு இருப்பிடமாக உடையவன் என்று அருளுவர் பெரிய வாச்சான்பிள்ளை. திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரானில் **''அணி அரங்கனார்''** என்பதற்குச் சேர உரிய விஷயமாயிருக்கக் கை விட்டுப் போகாமல் பிறவி மண்டலத்துக்கு ஆபரணமான பெரிய கோயிலிலே வந்து பள்ளி கொண்டவர் என்பர் பெரியவாச்சான்பிள்ளை. மேலும் ஆபரணமானது பூண்டவனுக்கு நிறம் கொடுக் கிறது. திருவரங்கமும் காப்பாற்றுபவனுக்கு அழகு அளிப்பதாகையாலே **''அணிஅரங்கன்''** என்று சொல்லு



கிறது என்பர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். மேலும் வேதாந்தாசார்யர் தாம் அருளிய முனிவாகன போகத்தில் **''அணிஅரங்கனார்''** என்பதற்குச் சேர பரம பதம், பாற்கடல் முதலானவற்றைக் காட்டிலும் குணம் மிகுதியாலே அடியார்க்கு நெஞ்சுக்கு இனிதாம்படி யாலே விண்ணாட்டுக்கும் மண்ணாட்டுக்கும் ஒரே அணி கலனாய் இருக்கிறது என்றும், கண்டு பற்றுவதற்கு எளிமையாம்படி ஸ்ரீரங்க விமானத்தை பள்ளி கொள்ளு மிடமாக உடையவர் என்றும் அநுபவிப்பர்.

(மணத்தூணை அடைந்து உய்ந்தோன்) – மணத் தூண் – திருவரங்கன் கர்ப்பக்கிருகத்துக்கு முன் இருக் கும் இரண்டு திருமணத் தூண்கள். **''மணத்தூணே பற்றி நின்று''** என்று இவ்வாழ்வார் அருளியதற்கு ஏற்ப **''ஆமோத ஸ்தம்பங்களைப் பற்றி நின்று''** என்று பெரியவாச்சான் பிள்ளை உரைப்பர். ஆமோதம் – பரிமளம். அழகிய மணவாளனுடைய திருக்கண்ணோக்கமாகிற அமுதவாற் றின் பெருவெள்ளமானது அநுபவிக்க இழிந்தவர்களை ஒருமித்து நிலை நின்று அநுபவிக்கவொட்டாமல் தூக்கித் தள்ளி அசைக்குமளவில், அவர்கள் கைப்பிடிப்பாகப் பற்றிக் கொண்டு நிற்பதற்கு நாட்டப்பட்ட திருமணத் தூண்கள் என்பர் ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமிகள். **''அழகிய மணவா ளனது திருமேனி பரிமளம் இரண்டு தூணாகப் பரிணமித்து, உருவெடுத்து நிற்பதால் திருமணத்தூண்''** என்று பெயரா யிற்று என்பர். அப்படி திருமணத்தூணைப் பற்றி உய்ந்த வர் ஆழ்வார். இக்கருத்தை உட்கொண்டே பராசர பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவபூர்வசதகத்தில் (59) **''அந்தரங்கம் ஆலம்பம் இவ ஆமோத ஸ்தம்ப த்வயம் அபி யாம:''** என்பதற்குச்சேர **''அணுகின கைப்பிடிபோன்றுள்ள திருமணத்தூண்கள்''** என்றது காண்க.

(வஞ்சி நகரம் வாழ வந்தோன்) – வஞ்சி நகர் – சேர நாடு. கேரள தேசத்துக்கு உட்பட்டது. சேர நாட்டில் கொல்லி நகர் என்னும் தலைநகரான திருவஞ்சிக் களத்தில் அரசாண்ட த்ருடவ்ருதன் என்னும் அரசனுக்குப் பிறந்தவர் குலசேகரன். நாளொருமேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்த இவருக்கு உரியன செய்வித்தார். பின்னர், இவர் நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் முற்றும் கற்று வல்லவனாய் விளங்கினார். அரச தருமப்படி பகைவரை வெல்ல நால் வகை சேனையோடு சென்று சோழ பாண்டிய அரசர் களை வென்று அவர்கள் நாடுகளைத் தன் வசமாக்கி, தான் சேர சோழ பாண்டிய நாடுகள் மூன்றுக்கும் தலைவனாகி வாழச் செய்தார்.

(மாசிதனில் புனர்பூசம் வந்து உதித்தான்) மாசி – தமிழ் வருடத்தில் பதினோராம் மாதம். **''மாசிப்புனர்ப்பூசம் காண்மின் இன்று மண்ணுலகீர்''** என்று இவ்வாழ்வார் அவதார நாளைக் குறிப்பர் மணவாள மாமுனிகள். **''மாசி முன்னாள்''** என்று ஆண்டாள் அருளியபடி பிரிதொன்றுக் கில்லாச் சிறப்புடையதாய், கொள்ளத்தக்கதான மாசி மாதத்தில் புனர்வசு நக்ஷத்திரம் காணும்கோள். உலகில் உள்ளவர்களே! அதுதானும் இன்றாவது உங்களுக்கு. சித்திரை மாதம் புனர்வசு நக்ஷத்திரத்தில் ஆயிற்று சக்கரவர்த்தி திருமகன் அவதரித்தருளினது. மேலும் தம் பிரபந்தத்திலே **''அங்கணெடுமதிள் புடை சூழ்''** என்ற கடைசி பதிகம் மூலமாக இராமன் வைபவத்தைத் தெரியப்படுத்துபவராகையாலே இவருக்கு நக்ஷத்ரமும் அதுவாயிற்று. ராஜ குலங்களிலே அவதரிப்பார்க்கு நக்ஷத்ரமும் அதுவாக வேணும் போலே காணும். இப்படி பகவத் ஸம்பந்தமுடைய திருநக்ஷத்ரமாயிற்று இவர் அவதரித்தது என்று சுவைபட உரைப்பர் பிள்ளைலோகம் சீயர். **''புநர்வஸுதிநே ப்ரீத்யாக்ய யோகாந்விதே த்ராதும் ந: குலசேகர: க்ஷிதிபதிச் ஸ்ரீகௌஸ்துபாத்மாऽ பவத்''** என்கிற படியே புனர்வசு நக்ஷத்ரத்தில் பிரீதி என்னும் யோகத்தில் ஸ்ரீகௌஸ்துபத்தின் அம்சமாய் குலசேகராழ்வார் என்னும் அரசர் நம்மைக் காப்பதற்கு அவதரித்தார் என்று திவ்யசூரி சரிதம் கூறும்.

(அஞ்சல் எனக்குடப்பாம்பில் அங்கையிட்டான்) குலசேகராழ்வார் அரசாண்ட போது, வைணவர்கள் திறத்தில் ஆழ்வாருக்கு உண்டான பக்தியைக் குலைக்க வேணும் என்று எம்பெருமானின் திருவாபரணங்களில் ஒன்றான விலை மதிக்கமுடியாத ஒரு முத்து மாலையை ஒருவரும் அறியாதபடி எடுத்து மறைத்து வைத்தனர் மந்திரிகள். திருமஞ்சனம் முடிந்த பின்பு இம்மாலையைக் காணாமையால் மந்திரிகள் வைணவர்களில் ஒருவரே இம்மாலையை எடுத்திருக்க வேணும் என்று பழி சுமத்தினர். அத்தைக்கேட்ட ஆழ்வார், "எம்பெருமான் பொருளிலே பக்தி செய்பவர்கள் பரவஸ்துவைக் கொள்ளமாட்டார்கள்" என்று சபதம் செய்தார். பின்னர் ஆழ்வார் பாம்பை உள்ளே இட்ட ஒரு குடத்தை வர வழைத்து "வைணவர்கள் எவரேனும் இச்செயலைச் செய்திருந்தால் இப்பாம்பு என்னை தீண்டிக் கொல் லட்டும். அப்படியல்லாமல் அவர்கள் முக்கரணங்களா லும் தூயவராயின் இது என்னைத் தீண்டாது விடட்டும்" என்று சபதம் செய்து அக்குடத்திலே அஞ்சாது பாம்பின்

பணத்திலே பட கையை விட்டார். சத்தியத்துக்குக் கட்டுப்படும் அப்பாம்பு ஆழ்வாரைத் தீண்டாது விட்டது. இது பற்றியே மணக்கால் நம்பி என்னும் ஆசாரியர் **''ஆரங் கெடப்பரனன்பர் கொள்ளாரென்று அவர்களுக்கே வாரங்கொடு குடப்பாம்பில் கையிட்டவன்''** என்று பெருமாள் திருமொழி தனியனில் கூறுவர்.

(அநவரதம் ராமகதை அருளுமவன்) எம்பெருமானுடைய கல்யாண குணங்களிலே ஈடுபட்டவராகையாலே ஸ்ரீராமாயண காலக்ஷேபத்தையே எப்பொழுதும் பொழுதுபோக்காகப் பெற்றவர் இவ்வாழ்வார். இதுபற்றியே தாம் அருளிய பெருமாள் திருமொழியில் கௌசல்யா பாவனையை அடைந்து **''மன்னுபுகழ் கௌசலைதன்''** என்ற பதிகம் மூலமாக திருக்கண்ணபுரத்திலே இராமனுக்குத் தாலாட்டுப் பாடுகிறார். தசரதன் பாவனையில் "வன்தாளினை" என்ற பதிகத்தில் இளமையில் அனுபவித்த இராமனுடைய இளமைப்பருவ வீர சரிதத்தை அநுபவிக்க முடியாதபடி அவனைக் காட்டுக்கு அனுப்பினேனே என்று தசரதன் புலம்பலாக அநுபவிக்கிறார். இறுதியில் இராமன் திருவவதாரம் தொடங்கித் தன்னுடைச் சோதிக்குச் சென்றது ஈறாக ஸ்ரீவால்மீகி பேசி அனுபவித்தாற்போல் தம்முடைய ஞானத் தெளிவாலே ஸமகாலத்திற்போல் **''அங்கணெடுமதிள் புடைசூழ்''** என்ற பதிகத்தில் இராமகதையை அருளியது காணலாம்.

(செஞ்சொல் மொழி நூற்றஞ்சும் செப்பினான்) ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி பிரபந்தம் 10 பதிகங்களாய் 1,4,7,8,9,10 பதிகங்கள் 11 பாடல்களையும், 3ம் பதிகம் 9 பாடல்களையும், 2,5,6 பத்து பாடல்களையும் சேர்த்து 105 பாடல்களைக் கொண்டதாகும். செஞ்சொல் – பயனில்லாத செவ்வையையுடையதாய், தானே பயனான சொற்கள் என்பர் வாதிகேசரி சீயர். மொழிக்கு செவ்வை யாவது வேறுபயன் கருதாது தானே பயனாயிருக்கை என்பர் நம்பிள்ளை. குலசேகராழ்வார் பிரபந்தத்தை அமுதனார் இராமாநுச நூற்றந்தாதியில் (14) **''கொல்லிகாவலன் சொல் பதிக்கும் கலைக்கவி''** என்பதற்கு ஏற்ப மாமுனிகள் ஆழ்வாரின் அநுபவ தொடர்ச்சியான தன் சொற்களை ரத்னங்களை பதித்து வைத்தாப் போலே நிரைத்து வைத்த தாய் சாஸ்த்ர ரூபமாயிருந்த கவிகள் என்பர். மேலும் சாஸ்த்ர சொற்களினுடைய கருத்து விசேஷங்களாயிருக்கிற எம்பெருமானுடைய ஸ்வரூபம், ரூபம், குணம், செல்வங்களையும், தத்துவ ஹித புருஷார்த்தங்களையும் முத்துக்களையும் ரத்னங்களையும் முகமறிந்து கோக்குமவனைப்போலே விரிவாக அந்தந்த இடங்களிலே ஆழ்வார் அருளியுள்ளார் என்பர் பிள்ளை லோகம் சீயர்.

(சேரலர்கோன் செங்கமலத் திருவடிகள்) கோன் – அரசன். "சேரன் குலசேகரன்" என்னும்படி சேரனுடைய குலத்துக்குத் தலைவராய், பறவை, தாவர பிறவிகளை ஆசைப்பட்ட குலசேகரப் பெருமாள் என்பர். இவ்வாழ்வார் பாகவதர்களுக்கு அடிமையாம் தன்மையில் ஊன்றியிருப்பவர். அத்தாலே அவர்களுக்குத்தாம் குடப்பாம்பில் கையிட்ட குணப்பெருமை உடையவர். அக்குணங்களிலே தோற்று ஆழ்வார் திருவடிகளுக்கு நல்லராயிருப்பவர்கள் வைணவர்கள். இதனால் திருவடி பெருமை சொல்லப்பட்டது. மேலும் ப்ர.ப. அண்ணா தாம் அருளிய வரவர முனி சதகத்தில் (48) **''யச்சித்தம் ரகுசேகராங்க்ரி கமலத் வந்தௌ... ஸ்ரீகுலசேகரஸ்ய பாதயோ:''** என்கிற படியே எந்த குலசேகராழ்வார் மனதானது ஸ்ரீராகவனுடைய திருவடிக்கமலங்களில் ஈடுபட்டு அவர் புகழைப் பாடுவதில் நாட்டமுடையதோ, அந்த ஆழ்வாருடைய திருவடிகளைத் தாம் நினைப்பதாக மாமுனிகளின் ஈடுபாட்டைக் காட்டுவர். அப்படிப்பட்ட ஆழ்வார் திருவடிகள் வாழ நாமும் பல்லாண்டு பாடுவோம்.

வாழித்திருநாமம் வளரும்...


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**தானத்தில் சிறந்தது அன்னதானம்**

- அன்னம் பரபிரம்ம வடிவம் தயவு செய்து வீணாக்காதீர்கள்.
- அனைத்து பக்தர்களுக்கும் அன்னப்பிரசாதம் எளிதில் கிடைக்கிறது.
- குழந்தைகள்/பெண்களுக்கு முதலிடம் அளியுங்கள்.
- கைக்குழந்தைகளுக்கு தேவையான பால் எப்பொழுதும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பால் தேவைப்படுபவர்கள் வைகுண்டம்-2 அன்னப்பிரசாதம் அலுவலகத்தை அணுகி பெற்றுக் கொள்ளுங்கள்.

*இறைவனின் சேவையில் பக்தர்கள்; பக்தர்களின் சேவையில் தி.தி.தே.*

# திருக்குறுந்தாண்டகத்தின் ஸாரம்

டாக்டர்.கே.கே.ஏ. ரங்கராஜன் ஸ்வாமி,
திருப்பதி.

திருக்குறுந்தாண்டகம் – “குறுந்தாண்டகம்” என்பது தமிழில் ஒருவகைப் பிரபந்தம். ஆறு கணம் அளவு கொண்ட நான்கு பதங்களையோ எட்டு கணம் அளவு கொண்ட நான்கு பதங்களையோ விரும்பிய கடவுளைப் புகழ்ந்து பாடும் பிரபந்தம். ஆறு கணங்களைக் கொண்டது குறுந்தாண்டகம் ஆகும். குறுந்தாண்டகத்தில் ஒவ்வொரு மெய்யெழுத் தோடு கூடிய பதினைந்து எழுத்துக்களுக்குக் குறையாமல் இருபத் தாறு எழுத்துக்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். நெடுந்தாண்டகத்தில் இருபத்தாறு எழுத்துக்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்பது மரபு. திருமங்கையாழ்வார் தாம் வாள் வலியால் மந்திரங்கைக் கொண்டு எம்பெருமானைக் கண்டு இத்தனை நாள் இழந்த இழவு தீர அவனைக் குறித்து *“வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்”* என்று பெரிய திருமொழியில் அவனுடைய ஸ்வரூபரூப குண விபூதிகளைத் திருமந்திர முகத்தாலே அவனை உணர்ந்து, தம்முடைய முன்னை வினைகளையும் தாம் பெற்ற பேற்றின் பெருமையையும் அனுஸந்தித்துத் தலை சாய்க்கிறார் ஆழ்வார். முதல் திருமொழியிலிருந்து பதினோராம் திருமொழி வரை எம்பெருமானின் அவதாரங் களின் குண விசேஷங்களை அனுபவித்து *“ஆற்றங்கரை வாழ்மரம்போல்”* என்றும் *“இருபாடெரி கொள்ளி யின் உள்ளெறும்பேபோல்”* என்றும் ஸம்ஸாரத்தின் இன்னல் களைப் பார்த்து இத்திருக்குறுந்தாண்டகத்தில் கூப்பிட்டு தாகங் கொண்டவன் தண்ணீரைக் கண்டதும் முகத்திலும் உடம்பிலும் அந்நீரை இறைத்துக் கொள்வதைப் போலே பேசி அனுபவிக்கிறார்.

**ரக்ஷகன் :**

*“வைத்தமா நிதியாம் மதுசூதனன்”* (திரு வாய்.6.7.11) என்னுமாபோலே நிதியானவன்; இந்நிதியினை ப்ரஹ்மம் என்றும், என்றும் அழிவில்லாதவன் என்றும், *“யோ வேத நிஹிதம் குஹையாம்”* (தைத்திரிய உப.) என்கிறபடியே குஹையான ஹ்ருதயத்திலே இருப்பவன் என்றும், தாரகன் என்றும், *“நிதியினைப் பவளத் தூணை”* என்னும் முதல் பாசுரத்தாலே ஆழ்வார் தெரிவிக்கிறார். மேலும் ப்ராப்யன்,ப்ராபகன் அவனே; அவனை நினைப்பவர்களே அதிகாரிகள் என்றும் அறிவிக்கிறார். “பவளத்தூணை” என்பதில் “தூண்” என்னும் சொல்லால் எம்பெருமான் உபாய உபேயன் என்பதை ஸ்ரீராமாயண ச்லோகத்தால் தெரிவிக்கிறார் பெரியவாச்சான்பிள்ளை. அதாவது *“ராமோ ராஜ்ய உபாஸித்வா”* என்கிறபடியே சக்ரவர்த்தி திருமகன் ராஜ்யத்தை ஆண்டு இறுதி யில் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினாற்போலே கஞ்சன் நினைவை அவனுக்கே முன் வைத்து அவன் உயிர்மாள வைத்து நாட்டைப் பாதுகாத்து ரக்ஷித்தான் எம்பெருமான் என்கிறார். திருவரசு அடியிலே தனக்குக் காட்சிக் கொடுத்தமையைத் தாம் மறக்கமுடியாமல் தனக்கு ஸ்வரூபஜ்ஞானம் பிறந்ததாகவும், எம்பெருமான் தலைவன் என்றும், தான் அடியான் என்றும் இவனை விட வேறு



உபாயம் ஏதுமில்லை என்றும் தான் உணர்ந்ததாக ஆழ்வார் கருதுகிறார்.

### காரணன் :

ஸ்வரூபஜ்ஞானம் பெற்ற ஆழ்வார் எம்பெருமானைக் கார்ய காரணானவன் என்பதைத் தெரிவிக்கிறார். காற்று, நீர், தீ இவற்றுக்கெல்லாம் அந்தர்யாமியாயிருந்து உலகிற்கே சரீரியாக உள்ளவனே பரம்பொருள் என்பதை

*''ஸேயம் தேவதைக்ஷத - ஹந்தாஹமிமாஸ் திரோ தேவதா: |*
*அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி ||''*

(சாந் 6.3.2)

என்ற உபநிஷத்தால் விளக்குகிறார். அதாவது நிலம், நீர், நெருப்பு இம்மூன்றினுள்ளும் ஜீவாத்மாவுடன் நுழைந்து உலகில் பல வடிவங்களையும் பெயர்களையும் படைக்கப் போகிறேன் என்பதிலிருந்து எம்பெருமானே பரம்பொருள் என்பது புலனாகின்றதல்லவா! ஆச்ரித விரோதியான ராவணனைக் கொன்றபடியால் எம்பெருமானுடைய தேஜஸ் மிகுந்து பிற்பட்டவர்கள் யாவராலும் அனுபவிக்கும்படியான போக்யமானவன். *''ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வான்''* (தைத்திரிய உப.) என்னும்படி பரமாத்மாவின் ஆநந்த குணத்தை அறிந்தவர்கள் உலகில் எதனிடத்தும் பயங் கொள்ளார் என்று வேதம் கூறுகிறது. அக்குணத்தில் மூழ்கி *''ஏததேவ அம்ருதம் த்ருஷ்ட்யா த்ருப்யந்தி''* (சாந் 3.7.1) என்கிறபடி அவனைக் கண்டு புஜிக்கலாம்படி அம்ருதமானவன். ப்ராப்யம் ப்ராபகங்களிரண்டும் அவனே யாதலால் இந்த அம்ருதபானம் செய்வார் *''உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும்... ம்ருத்யும்ருத்யும் நமாம் யஹம்''* (ந்ருஸிம்ஹ அனுஷ்டுப் 12.1) என்பதால் ப்ரஹ்லாதனின் விரோதியான ஹிரண்யன் பட்டதுபோலே விரோதி ஸ்வரூபம் அழியும் என்பதை உணர்த்துகிறார்.

### உபகாரகன் :

*''பாயிரும் பரவை தன்னுள் பருவரை திரித்து''* என்கிறபடி மிகவும் பரப்புடையதாயும், மிகுந்த ஆழமுடையதாயும், அகலமானதாயுமான திருப்பாற்கடலில் மந்தரமலையை மத்தாகக் கொண்டு கடைந்து: *''ஸர்வ லோக சரண்யாய''* என்னும்படித் தன்னைப் பொதுவாக ஆக்கிக் கொண்டு ப்ரயோஜனம் கருதுபவர்களுக்குத் தன்னை அழியமாறி அவர்களுக்காக உருவத்தை எடுத்து உபகரித்த உத்தமன்; அவனே அம்ருதமானவன். அவன் திருமாலிருஞ்சோலை என்னும் திருநாமத்தையுடைய என் அப்பன். அதாவது ஸ்வாமி – தலைவன் என்று "அப்பனை" என்னும் சொல்லால் தெரிவிக்கிறார். அவனே உபகாரகன் என்றும் புகழ்கிறார். "அப்பனை" என்று சொல்லி "மைந்தனை" என்று சொல்வானேன் என்பதற்கு அரும்பதவுரைகாரர் "அரும்பினை, அலரை" என்னுமாபோலே என்று குறிப்பிடுகிறார். "அரும்பினை, அலரை" அதாவது கௌமாரம் கழியத் தக்கதாய் யௌவனம் வந்து குடிபுக்கதான நடுப்பருவத்தைச் சொன்னவாறு என்பதாம் (திவ்யார்த்த தீபிகை). முதற் பாசுரத்தில் தன்னுடைய வணக்கத்தைத் தெரிவித்த ஆழ்வார் இப்பாசுரத்திலும் "வணங்கினேனே" என்கிறார்.

### பகவத் விஷயம் :

*''கேட்கயானுற்றதுண்டு''* என்னும் பாசுரத்தில் ஸாமர்த்யமும் ஸுகுமாரமும் உடையவனான எம்பெருமானின் விஷயத்தைக் கேட்பதற்குத் தனக்கு ஆசை இருந்ததுண்டு. ஆனால் "புஷ்பஹாஸ" என்னுமாபோலே ஸுகுமாரமான வடிவை மானமிலாப் பன்றியாக வந்து நிலங்கோட்டிடைக் கொண்டது போலே தனக்கும் அருள வேண்டும் என்கிறார் ஆழ்வார். மனம், மொழி, உடல் இவற்றாலும் பற்றுதலாலும் மிக்க ஆசை கொண்டவராய் அனுபவிப்பவர்களுக்கு இனியவனாய் இருக்கிறவன் தன்னுடைய விஷயத்தில் பகவத் விஷயத்தை இனியதாகச் செய்வித்து ஸம்ஸார ஸாகரத்திலிருந்துத் தன்னை மீட்கச் செய்தானாம். அதனாலே பகவத் விஷயம் இனிது என்கிறார்.

தொடரும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம்
திருமலையில்
இரத்ததானம் செய்யுங்கள்!
திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!

- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவைபடுபவர்களுக்கு அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் : 0877-2263601

இரத்தம் தானம் செய்யுங்கள்!
ஆபத்தில் உள்ளோரை காத்திடுங்கள்!!

- முதன்மை மருத்துவ அலுவலர்






## 108 திவ்யதேச வைபவம்

# காழிச் சீராம விண்ணகரம் (தாடாளன் கோயில்)



– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

பிரம்மாண்ட புராணம் விரிவாகக் கூறுகிறது, உரோமச முனிவர், அஷ்டவக்ரர் இருவரின் நெருங்கிய சம்பந்தம் பெற்ற ஊர். பிரம்மாவுக்கு, படைப்புக் கடவுள் என்கிற கர்வம் ஓங்கி இருந்தது. அவரது கர்வத்தை அடக்க, பகவான் திருவுள்ளம் கொண்டான். உரோமச முனிவர் இருக்கிறாரே... இவருக்கு உடலெல்லாம் உரோமம். இவர் பகவானை நோக்கித் தவம் இருந்து, எண்ணற்ற யுகங்களை ஆயுளாக அடைந்தார். பகவான், இவருக்கு அருளும்போது, இவருடைய ஒரு உரோமம் உதிர்ந்தால், ஒரு பிரம்மன் இறப்பான் என்று சொல்லி இருந்தார். உரோமச முனிவர், பிரம்மனிடம், ஹே... பிரம்மனே... உன் ஆயுளும் என் ஒரு உரோமமும் சமம் என்றார். இதைக் கேட்ட பிரம்மாவின் செருக்கு அடங்கியதாகச் சொல்வர்.

பிரகலாதனின் பேரன் மஹாபலி. இவனது செருக்கை அடக்க பகவான் வாமனாவதாரம் எடுத்தார். கம்பர் சொல்கிறார் சிறுமீனின் சிறு விதையைக் காட்டிலும், மிகச் சிறிய ஆலமர விதை போன்று குள்ளமாக அவதரித்ததாகக் கூறுகிறார்.

வாமனனைக் கண்ட மஹாபலி, வரவேற்று, வேண்டியதைக் கேட்குமாறு சொல்ல, பகவான் மூன்றடி நிலம், தன் திருவடியால் அளந்து எடுத்துக் கொள்வ தாகக் கூறுகிறார். மஹாபலி, தானம் கொடுக்க முயலும் போது அசுர குரு சுக்ராசார்யார் தடுக்கிறார். அதைப் புறக்கணித்து, அரசன் தானம் செய்ய, வாமன மூர்த்தி யாக வந்த பகவான், த்ரிவிக்ரமனாக வளர்கிறார். மஹா பலி செருக்கு அழிந்தது. பகவானின் இந்த அவதாரத்தில் மயங்கிய, உரோமசர், பகவானை இங்கேயே த்ரி விக்ரமனாகக் கோயில் கொள்ளுமாறு வேண்டினார். பகவான், இங்கு த்ரிவிக்ரமனாக எழுந்தருளி இருக்கி றான்.

அஷ்டவக்ரர், கர்ப்பவாசம் செய்தபோது, தகப்பனார் கஹோளர் வேதத்தை ஸ்வரம் பிசகிச் சொல்வதை அடிக்கடி கேட்டார். தகப்பனாரிடம், தாயின் கர்ப்பத்தில் இருந்தவாறே அவ்வப்போது ஸ்வரம் பிசகுவதைச் சொல்லிக்கொண்டே இருந்தார். இதனால், தந்தை கஹோளர் சபிக்க உடலில் எட்டு கோணல்களுடன் பிறந்தார். அதனால் அஷ்டாவக்ரர் என்று பெயர் வந்தது. ஜனக ராஜன் சபையில் இருந்த வந்தி என்னும் வித்வானால் தனது தந்தை முறையற்ற வகையில் அழிக்கப்பட்டார் என்பதை அறிந்து, அந்த சபைக்குச் சென்று, வாதத்தால் வந்தியை வென்று, வருண லோகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தகப்பனாரை வெளிக் கொணர்ந்தார். இந்த அஷ்டவக்ரரும் பகவானை வேண்டி த்ரிவிக்ரமனின் அருளைப் பெற்றவர். இவருடைய பிரார்த்தனையின் பேரில் பகவான் இந்த தலத்தில் த்ரிவிக்ரமனாக எழுந்தருளி இருக்கிறார். இந்த தலம், விச்வாமித்ரர், ராமனை அழைத்து வந்து, யாகம் செய்த சித்தாச்ரமம் என்றும் சொல்வர். திருமங்கை ஆழ்வாரும், சைவ சமயக்குரவர் நால்வரில் திருஞான சம்பந்தரும் இப்பகுதியில் தோன்றியவர்கள். ஆழ்வார்,

சாளக்ராமம், பத்ரிகாச்ரமம் போன்ற வடநாட்டு திவ்ய தேசங்களை மங்களாசாசனம் செய்து கொண்டு, இந்த தலத்துக்கு வரும்போது, சிஷ்யர்கள், ஆழ்வாரின் விருதுகளை முழக்கமிட்டதாகவும், அதைத் திருஞான சம்பந்தரின் சிஷ்யர்கள் தடுத்ததாகவும், பின்பு இருவரும் சந்தித்து, சம்பந்தரின் வேண்டுகோளின்படி, கலியன் இவ்வூர்ப் பெருமானைத் தியானித்து, ஒரு குறளாய் என்கிற பாசுரத்தைப் பாடியதாகவும், சம்பந்தர் மிகவும் உருகி எல்லா விருதுகளும் உங்களுக்குத் தகும் தகும் என்று சொல்லி, தன்னிடமிருந்த வேலினைப் பரிசாக அளித்ததாகவும் சொல்வர். சமயக் கலவரங்கள் ஏற்பட்ட சமயத்தில், இவ்வெம்பெருமானிடம் பக்தி கொண்ட ஓர் அம்மையார், தன் வீட்டுத் தவிட்டுப் பானையில் வைத்துப் பாதுகாத்ததாகவும், ஆழ்வார் இவ்வூருக்கு வரும்போது, பகவான் அந்த அம்மையாரின் கனவில் தோன்றி தன்னை ஆழ்வாரிடம் சேர்ப்பிக்கச் சொன்னதாகவும், அம்மையாரும் அப்படியே செய்ததால், அன்றுமுதல், தவிட்டுப் பானைத் தாடாளன் என்கிற திருநாமம் ஏற்பட்டதாகவும் சரிதம் உண்டு.

இதே சமயக் கலவரங்களில், ஒரு சமயம், ஆற்காடு நவாப் கோவிலை இடித்து, பெருமாளை எடுத்துத் தன்னுடைய பெண்ணுக்கு விளையாட்டுப் பொருளாகக் கொடுத்ததாகவும், அடியார்கள் கலங்க, தாடாளன், தன் பக்தனான சிதம்பர படையாக்ஷி கனவிலும் அர்ச்சகர் கனவிலும் தோன்றி, தான் இருக்குமிடத்தைச் சொல்லித் தன்னை மீண்டும் ஆஸ்தானத்தில் சேர்ப்பிக்குமாறு கட்டளையிட, அப்படியே இவர்கள் ஆற்காடு நவாப் அரண்மனைக்குச் சென்று தாடாளனை உரக்க அழைக்க, தாடாளன் கட்டுக் காவலை எல்லாம் உடைத்து இவர்களிடம் வந்து சேர்ந்தானாம். அன்றுமுதல், சிதம்பர படையாக்ஷி வம்சத்தாருக்கு, பிரம்மோத்ஸவ ஏழாம் நாளில் மரியாதை செய்யப்படுகிறது என்பர்.

**பெருமாள்** – மூலவர் ... த்ரிவிக்ரமன், தாடாளன் ... இடது திருவடி உலகை அளக்கும் திருக் கோலம். கிழக்கே திருமுக மண்டலம். வலது திருக்கை–தான ஹஸ்தம். இடது திருக்கை– இடது திருவடி மேல் உள்ளது. ஐந்து ஆயுதங்களுடன், இன்னும் ஒரு அடி நிலம் கொடு என்கிற குறிப்புடன் சேவை.

**உத்ஸவர்** – த்ரிவிக்ரம நாராயணன்.

**தாயார்** – மூலவர் – லோகநாயகி,
உத்ஸவர் – மட்டவிழ் குழலி.

**தீர்த்தம்** – சங்க புஷ்கரணி, சக்ர தீர்த்தம்.

**விமானம்** – புஷ்கலாவர்த்த விமானம்.

**ப்ரத்யக்ஷம்** – உரோமச முனிவர், அஷ்ட வக்ரர்.

**ஆகமம்** – வைகானசம்.

**மங்களாசாஸனம்** – திருமங்கை ஆழ்வார்,

**சிறப்புகள் :**

திருஞான சம்பந்தர் பிறந்த ஊர். இவருக்கும் திருமங்கை ஆழ்வாருக்கும் விவாதம் நடந்து, ஆழ்வார் நாலு கவிப் பெருமாள் என்கிற விருதையும் சம்பந்தர் சமர்ப்பித்த வேலினையும் பெற்ற ஊர். ஆழ்வார், தான் பெற்ற சிறப்புப் பெயர்களைத் தன் நாவினாலேயே சொல்லும் பாசுரம் இங்குதான் பிறந்தது. பகவான் அர்ச்சாவதாரத்தில், த்ரிவிக்ரமனாக, முதல் அடி எடுத்து வைத்த தலம். இரண்டாவது அடி காஞ்சி உலகளந்த பெருமாள் கோயில் என்றும், மூன்றாவது திருவடிக்கு இடம் எங்கே என்று கேட்கிற தலம் திருக்கோவலூர் என்றும் சொல்வர்.

இங்கே சக்ரவர்த்தி திருமகன், தேவியோடும் தம்பியோடும் தனிச் சந்நிதியில் எழுந்தருளி உள்ளார். அதனால் சீராம விண்ணகரம் என்றும் இந்த தலத்தைக் கூறுவர். அருணாசலக் கவிராயர் இராம நாடகக் கீர்த்தனை, அனுமன் பிள்ளைத் தமிழ் இயற்றியது இங்கேதான். விண்ணகரம் என்று அழைக்கப்படும் ஐந்து திவ்ய தேசங்களில் இதுவும் ஒன்று.

### த்யான சுலோகம்

*தாடாளாலய வாஸிநோ பலிரிபோஸ் ஸௌகந்த்ய வத் குந்தலா*
*தேவீ தத்ர விமாநமிஷ்ட பலதம் தத் புஷ்கலா வர்த்தகம் ।*
*தீர்த்தம் சங்க ஸர: பிரஸித்தயசஸே நாம்நாஷ்ட கோணாயவை*
*தஸ்மை துஷ்கர தாபஸாய வரத: ப்ராசீமுகோ பாஸதே ॥*

----

### பாசுரம்

*பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்*
*பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்து*
*கறைதங்கு வேல் தடங்கண் திருவை மார்பில்*
*கலந்தவன் தாள் அணைகிற்பீர்! கழுநீர் கூடித்*

துறைதங்கு கமலத்துத் துயின்று கைதைத்
தோடு ஆரும் பொதி சோற்றுச்சுண்ணம் நண்ணி
சிறைவண்டு களிபாடும் வயல்சூழ் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே.

———

செல்லும் தொறும் உயிர்ப்பின் செல்லும் இருவினையை
வெல்லும் உபாயம் விரும்புவீர் ... தொல் அரங்கர்
சீராம விண்ணகரம் சேர்மின் : பின் மீளாத
ஊராம் அவ் விண்ணகரம் உண்டு.

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

## நாமாக்கள்

321. *ஓம் ப்ராணாய நம:*
(எல்லா ஜீவாத்மாக்களுக்கும் உயிரே)
*ஓம் வரவர்ணிந்யை நம:*
(விரும்பத்தக்க பேச்சுக்களை பேசுபவளே)

322. *ஓம் ப்ராணதாய நம:*
(தேவர்களுக்குப் பலமாக இருப்பவனே)
*ஓம் ஸ்வநிஷ்டாயை நம:*
(தானும் அருளி, பகவானின் தண்டிக்கும் மனத்தையும் மாற்றி அருள் புரிய வைத்து, தன் கொள்கையில் நிலைத்திருப்பவளே)

323. *ஓம் வாஸவாநுஜாய நம:*
(இந்திரனுக்கு, இளையோனாக உதித்தவனே)
*ஓம் பத்மநிலயாயை நம:*
(எல்லோராலும் அடையப்பட வேண்டிய பகவானிடம் நிலைத்திருப்பவளே)

324. *ஓம் அபாம் நிதயே நம:*
(கடலைக் கடையும்போது அதைத் தாங்கியவனே)
*ஓம் ஸத்கத்யை நம:*
(ஸாதுக்களுக்குப் புகலிடமே)

325. *ஓம் அதிஷ்டாநாய நம:*
(மந்த்ர மலைக்கும் ஆதாரமானவனே)
*ஓம் பத்மகந்தின்யை நம:*
(தாமரை மலரைப் போல நுகரத்தக்க நறுமணம் உடையவளே)

326. *ஓம் அப்ரமத்தாய நம:*
(பக்தர்களைக் காப்பதில் எப்போதும் ஜாக்ரதையாக இருப்பவனே)
*ஓம் பத்ம வர்ணாயை நம:*
(தாமரையின் நிறம் போன்ற அழகானவளே)

327. *ஓம் ப்ரதிஷ்டிதாய நம:*
(தன் மகிமையையே ஆதாரமாகக் கொண்டவனே)
*ஓம் காமயோந்யை நம:*
(அடியார்களின் விருப்பமனைத்தையும் அருளுபவளே)

328. *ஓம் ஸ்கந்தாய நம:*
(அசுரர்களை வற்றச் செய்பவனே)
*ஓம் சண்டிகாயை நம:*
(அடியார்களை நலிப்பவர்களை வெறுப்பவளே)

329. *ஓம் ஸ்கந்ததராய நம:*
(அவர்களை அழிப்பவனான, ஸ்கந்தனையும் தாங்குபவனே)
*ஓம் சாருகோபநாயை நம:*
(கோபத்திலும் அழகு, காந்தி உள்ளவளே)

330. *ஓம் துர்யாய நம:*
(உலகங்களைத் தரிப்பவனே)
*ஓம் ரதிஸ்நுஷாயை நம:*
(ஆனந்தத்தைப் பெருக்குபவளே; ரதி தேவியை நாட்டுப் பெண்ணாக உடையவளே)

ஸ்ரீமதே லோகநாயிகா ஸமேத
ஸ்ரீலோகநாத த்ரிவிக்ரம பர ப்ரஹ்மணே நம:

திவ்ய தேச வைபவம் வளரும்...

## வாசகர்களுக்கு அறிவிப்பு

பிரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் பிரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ்இதழினை உடனே அனுப்பி வைக்கப்படும்.

நீங்கள் கீழ் குறிப்பட்ட விவரங்களை தொலைபேசியில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.

பிரதான ஆசிரியர்
அலுவலக தொலைபேசி எண்:
0877-2264543



பகவத் கீதை - இளைய சமுதாயம்

# செயல்முறை ஞானம்

சித்தாந்தப்படி விழிப்புணர்வு கொள்வதே ஞானம். ஆனால் அந்த விழிப்புணர்வை, ஞானத்தை செயல் முறைப்படுத்தும்படி செய்வதே விஞ்ஞானம். இதனையே கீதையில் "சவிக்ஞானம்" என்று கூறப் பட்டுள்ளது. பகவத் கீதை கூறுவது சித்தாந்தம் அல்ல. உண்மையில் பகவத் கீதையானது மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் கூறப்பட்டது. அதுவும் மிகவும் இக் கட்டான மனநிலையில் இருந்த ஒருவனுக்கு சொல்லப் பட்டது. ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் அல்லது தன் செயலில் வெற்றியை சாதிக்க வேண்டுமென்றே எண்ணுவர். தன் செயலில் தோல்வியடைய வேண்டு மென்று எவரும் விரும்ப மாட்டார்கள். ஆனால் தனக்கு வெற்றி வேண்டவே வேண்டாம் என கூறியவன் அர்ஜுனன் மட்டுமே. தனக்கு வெற்றியும், வெற்றியின் மூலமாக கிடைக்கும் பலனும் வேண்டாம் என்று அர்ஜுனன் ஒளிவு மறைவின்றி கூறினான். இது போன்ற மனநிலை கொண்டோருக்கு பகவத் கீதை மிக அற்புதமான வெற்றியை அளிக்கின்றது. பகவத்கீதை கூறுகின்ற ஆற்றலுடைய ஞானத்திற்கு இதுவே ஆதாரமாகும். எவ்வளவு இக்கட்டான நிலை ஏற்பட்டா லும் நிச்சயமாக எவ்விதத்தில் வெற்றி பெற முடியும் என்பதனை நமக்கு கற்றுத் தருகின்றது.

இதனை நிரூபிக்க கீதாசார்யன் நாம் செய்ய வேண்டிய சில பணிகளை கூறுகின்றார். ஒவ்வொரு மனிதனும் தம் வாழ்நாளில் தினமும் சில செயல்களை செய்து கொண்டே தான் இருக்கின்றான். அவை தவிர்க்க முடியாத செயல்களாகும். அவை உணவு உண்ணுதல், உறங்குதல், யாத்திரையில் பங்கு கொள்ளல், பல்வேறு பணிகளை மேற்கொள்ளல் என பல செயல்களைச் செய்கிறான். எனினும் இச்செயல்களை கீதையின்படி செய்தால் வெற்றி உறுதியாகும். ஆனால் இவற்றினை கண்டபடி செய்தால் நிச்சயம் தோல்வியே ஏற்படும். இதனை ஸ்ரீகிருஷ்ண பகவான் "ஓ அர்ஜுனா! மிகுதியாக உண்பவனும் அல்லது குறைவாக உண்பவனும், நீண்ட நேரம் உறங்குபவனும், குறைவான நேரம் உறங்குபவ னும் யோகியாக ஆவதற்கான வாய்ப்பே இல்லை" என்று கூறுகின்றார் (பகவத்கீதை 6:16). எவராவது தம் வாழ்க்கையில் துன்பங்களையும், தோல்விகளையும் எதிர் கொண்டேயிருந்தால் மேற்கூறிய இரண்டில் ஏதாவது ஒன்று நடைபெறுகின்றது என்று அறிந்து கொள்ளல் வேண்டும். இச்சுலோகத்தின் வாயிலாக கீதாசார்யன் மாணவர்கள் எதிர் கொள்ளும் தோல்விக் கான ரகசியத்தை தெறியப்படுத்துகின்றார். பிரச்சனையை மட்டும் கூறாமல் அதனை தீர்ப்பதற்கான வழி முறையினையும் பரம்பொருளான அந்த தேவாதிதேவன் கூறியுள்ளார். அந்த வழிமுறைகளை எவர் கடைபிடிக் கின்றனரோ அவர்களுக்கு அனைத்தும் வெற்றியாகவே அமைந்து விடும்.

உணவு, உறக்கம், யாத்திரை, பணிகள், பழக்க வழங்கங்களை முறைபடுத்துபவன் யோக சாதனையின்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி.

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

கல்யாண கட்டாவில் பக்தர்கள் தலை முடி காணிக்கை செலுத்தும் பொழுது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல் ப்ரீ எண் : **1800-425-4141** க்கு தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்

மூலம் அனைத்து உடல் இன்பங்களை குறைத்துக் கொள்வான் (பகவத் கீதை 6:17).

அதாவது மேற்கூறிய பகவத் கீதையின் பொருளை அறிந்து அதன்படி செயல்படும் மாணவர்கள் உடல் ஆரோக்கியம், மனதளவில் சமநிலை பெறுகிறான். அறிவார்ந்தவனாக ஆகிறான். ஆத்மாபடி ஆன்மீக நிஷ்டை கொள்கிறான். உண்மையில் இது தான் யோகமாகும். மேற்படி பார்த்தால் கீதையில் நாம் கடைபிடிப்பதற்கான கடினமான வழிமுறையினை கூற வில்லை. கீதையானது அனைவருக்கும் உணவும், உறக்கமும், யாத்திரையும் யுக்தியுடனும் செய்தல் வேண்டும் என்று கூறுகின்றது. இவ்விதமாக நம் வாழ்க்கையில் உடல் நலத்திற்கு அவசியமானவற்றை கூறுவதில் பகவத் கீதைக்கும் மேலான சாஸ்திரம் இல்லை எனலாம். நம்மை அன்புடன் கவனித்துக் கொள்ளும் பெற்றோரும் கீதையை விட மேலானவற்றை செய்ததில்லை என்றே கூறலாம்.

உணவு விஷயத்தில் மாணவர்கள் சைவர்களாக இருப்பதே சாலச் சிறந்ததாகும். நம் நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்த மகாத்மா காந்தியும் சைவமே. முன்னாள் குடிமகன், விஞ்ஞானியுமான டாக்டர். அப்துல்கலாம் சைவமே, உலக புகழ் பெற்ற ஐசக் நியூட்டன் சைவமே. அதுமட்டுமின்றி சைவம் உண்ணும் மாணவர்கள் ஆரோக்கியமாக முன்னேறிச் செல்வர். மனதும் மகிழ்ச்சியுடன் இருக்கும். ஆதலால் மாணவர்கள் தினமும் அருகிலுள்ள ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்திற்குச் சென்று தரிசனம் செய்து, பிறகு குறைந்தது அரைமணி நேரமாவது ஏதாவது பூங்காவிற்குச் சென்றால் மனதும், உடலும் நன்றாக இருக்கும். அவ்வபோது கண்கள் பகவான் லீலைகளையும், புத்தி கூர்மைக்கு சிறந்த புத்தகங்களையும் படித்தல் வேண்டும். இவையாவும் மனத்திற்கு உற்சாகத்தை அளிக்கும்.

அதேபோன்று உறக்கத்தை எவரும் அலட்சியப்படுத்துதல் கூடாது. உறங்கும் நேரத்தில் தான் உடலும் மூளையும் முழுமையாக ஓய்வினை பெற்று மேற்கொண்டு பணிபுரிவதற்கு தயாராகின்றன. அதேபோன்று பணிகளையும் உத்தியோடு செய்தல் வேண்டும். ஆதலால் தான் புத்தியை கூர்மை படுத்துதல் அவசியமானது என்று கீதாசார்யர் கூறுகின்றார். எதை செய்தல் வேண்டும், எதை செய்தல் கூடாது என்பதை நன்றாக அறிந்து கொண்டு அதற்கேற்றார்போல் செய்தால் இவ்வாழ்க்கையானது அற்புதமாக அமைந்து, அனைத்தும் வெற்றியாகவே அமைந்து விடும். வாழ்க்கையும் பரிபூரண ஆனந்தமயமாக அமையும்.

பகவத்கீதை தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 34க்கான பதில்


| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | மா | லி | ரு | ஞ் | சோ | லை | 2 பூ | | | 3 தி |
| ரு | ம் | 4 ப | 5 பா | ன் | | ம் | ம | த | ன் | றை | ரு |
| ப் | ண | ர | ய | ரா | 6 த | க | ன் | ங் | வ | தி | க் |
| பா | ய | சு | ச | பி | ட் | ட | ட | கு | ரீ | த் | க |
| ற் | மா | ரா | ம் | தி | ச | நா | ன் | டி | க் | 7 சி | ண் |
| க | ரா | ம | வ | னா | ணா | ர் | வ | தே | 8 சு | 9 வ | ண |
| ட | த | அ | த | ல | ய | 10 க | 11 வெ | | சீ | | பு |
| ல் | ந் | வ | ரா | ம | ண | | | | லை | | ர |
| 12 வே | ன | தா | பு | 13 அ | ம் | மா | ம | ண் | ட | ப | ம் |
| தா | 14 ஆ | ர | ம் | 15 ஸ்ரீ | வ | ரா | க | ஸ் | வா | மி | |
| ந் | | ம் | 16 த | ர | வி | மி | ட | ஷ் | வா | ர் | 17 து |
| தி | | | ர் | வா | ழ் | யா | கை | ங் | ம | ரு | 18 தி |

தொடர்



### ஆயுர்வேதம்

# பெருங்காயம்



| | |
|---|---|
| தெலுங்கு மூலம் | : டாக்டர். சி. மதுசூதன சர்மா. |
| | : 90007 61390. |
| தமிழாக்கம் | : திருமதி. வி. உஷா. |

உணவு சுவையாக இருக்கவும், வாசனைக் காகவும் பெருங்காயம் பயன்படுத்தப்படுகிறது. இதனை சமஸ்கிருதத்தில் "ஹிங்கு" என்றும், பலவித மான நோய்களை முறிக்கும் சக்தி கொண்டதால் "ஸஹஸ்ர வேதி" என்றும், தீயைப் போன்று பணி புரிவதால் "தீப்தி" என்றும், கிருமிகளை அழிப்பதால் "பூதரி" என்றும் பல சமஸ்கிருத பெயர்களால் அழைக்கின்றனர்.

"ஏபியேசி" என்னும் தாவர குடும்பத்தைச் சார்ந்த இந்த பெருங்காயத்தின் அறிவியல் பெயர் "பெருல போடிட" என்பதாகும். பெருங்காயத்தை ஆங்கிலத் தில் "ஆஸபோடிட" என்பர். இப்பெருங்காயம் மருத்து வத்திற்கு எவ்வகையில் பயன்படுகிறது என்று அறிந்து கொள்வோம்.

பெருங்காயத்தை மருத்துவத்திற்கு பயன் படுத்தும்போது நெய்யில் வறுத்து பொடி செய்து பயன்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் வேறு பக்க விளைவுகள் வராமல் தடுக்கலாம்.

### சுவாசப்பிரச்சனை நீங்க :

25 கிராம் பெருங்காயப் பொடி, 25 கிராம் கற்பூரப் பொடி கலந்து சிறிது நீர் விட்டு நன்றாக அரைத்து சிறு மாத்திரைகளாக செய்து காய வைத்து நாள்தோறும் இரண்டு, மூன்று வேளை 1, 2 மாத்தி ரையை உட்கொண்டால் சுவாசப் பிரச்சனை நீங்கும். இம்மாத்திரை நெஞ்சு படபடப்பு, பல்வலி போன்ற வற்றையும் குறைக்கும்.

### மதாவிடாயின்போது ஏற்படும் வலிக்கு :

5 கிராம் பெருங்காயப் பொடியை 10 கிராம் வெல்லத் துடன் கலந்து சிறிது நீர் சேர்த்து மிருதுவாக அரைத்து 6 மாத்திரையாக செய்து நன்கு காய வைத்து மாதவிடா யின்போது இரண்டு வேளைகளில் வேளைக்கு 1 மாத்திரை வீதம் 3 நாட்கள் உட்கொண்டால் வலி நீங்கும்.

மேலும் கருப்பையில் ஏற்படுகின்ற கட்டிகள், அதிக மான ரத்தப்போக்கு, கருப்பை புற்றுநோய் போன்ற பாதிப்பு களினால், தற்காலத்தில் பெண்களுக்கு அறுவை சிகிச்சை மூலம் கருப்பையை நீக்குதல் இது போன்ற பிரச்சனைகள் வராமல் இருக்க உணவில் அதிக அளவில் பெருங்காயத்தை உபயோகிக்க வேண்டும்.

### மூட்டு வலி குறைய :

200 மி.லி. எள் எண்ணெய், 20 கிராம் பெருங்காயப் பொடி, 20 கிராம் இடித்த வெள்ளைப்பூண்டு, 20 கிராம் சைந்தவலவணப்பொடி ஆகியவற்றைக் கலந்து கொதிக்க வைத்து இறக்கி, அதனை வடிகட்டி தினமும் 1 அல்லது 2 முறை வேளைக்கு 5 மி.லி. மருந்தை 100 மி.லி. தினமும் வெதுவெதுப்பான பாலில் கலந்து குடித்து வந்தால் மூட்டு வலி குறையும். இந்த எண்ணெயை சூடு செய்து வலி உள்ள இடத்தில் தடவினாலும் குணமாகும்.

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருமலை

### வயது முதிர்ந்தவர்கள் / உடல் ஊனமுற்றோர்க்கான "தரிசன டோக்கன்கள்" வழங்கும் மையம்

**டோக்கன்கள் வழங்கும் நேரம் : காலை 7.00 மணி**

- டோக்கன் வைத்திருப்பவர்கள் காத்திருக்கும் கூடத்தில் காலை 10.00 மணியளவில் 11 மணி தரிசனத்திற்கும், மாலை 2.00 மணியளவில் 3.00 மணி தரிசனத்திற்கும் ஆஜராக வேண்டும்.
- குறிப்பிட்ட ஒதுக்கீடு முடிந்ததும் டோக்கன் கௌண்ட்டர் மூடப்படும். யாத்திரிகர்கள் அடுத்த நாள் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- இந்த டோக்கனைப் பெற ஆதார் அட்டை /வாக்காளர் அட்டையை தவறாமல் காண்பிக்க வேண்டும்.
- இந்த டோக்கனை பெற்று தரிசனம் செய்தவர்கள் அடுத்த மூன்று மாதத்திற்கு பிறகே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

### தேள் கடிக்கு :

கால் தேக்கரண்டி பெருங்காயப் பொடி அதனுடன் வெங்காய நீரை கலந்து மிருதுவாக அரைத்து தேள் மற்றும் புழுக்கடியின் மேல் தடவினால் வலி, எரிச்சல் போன்றவை குறையும்.

### வாயுத் தொல்லை நீங்க :

பெருங்காயப் பொடி, வறுத்த சீரகப் பொடி, சுக்குப்பொடி, வறுத்த கடுகுப்பொடி, சைந்தவ லவணப் பொடி ஆகியவற்றை 10 கிராம் வீதம் எடுத்துக் கொண்டு காலை, மாலை வேளைகளில் ஒரு கிராம் மருந்தை 100 மி.லி. மோரில் கலந்து பருகினால் வயிற்று வலி, வாயுத் தொல்லை, வயிற்றுப்போக்கு ஆகியவை குறையும்.

### குழந்தை பிறந்த பின் உடல் நிலை சீராய் இருக்க :

பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, பனை வெல்லம் ஆகியவற்றை 25 கிராம் வீதம் எடுத்துக் கொண்டு மிருதுவாக அரைத்து சிறு உருண்டைகளாகச் செய்து ஆற வைத்து நாள்தோறும் காலை வேளையில் 1 மாத்திரையை விழுங்கினால், கர்ப்பிணியாக இருக்கும் போதும், குழந்தை பிறந்த நேரத்தில் ஏற்படக்கூடிய உடல் வலி, சோர்வு போன்றவை குறைந்து உடல் சீராய் இருக்கும்.

### பலவிதமான வயிற்றுப்போக்குகள் குறைய :

பெருங்காயம், பச்சைக் கற்பூரம், ஜாதிக்காய் பொடி, சீரகப்பொடி ஆகியவற்றை சம அளவில் எடுத்து நன்கு வறுத்து பொடி செய்து தினமும் 3 அல்லது 4 முறை, 500 மி.கி. முதல் ஒரு கிராம் வரை தகுந்தளவு தேனுடன் கலந்து உட்கொண்டால் எவ்வித வயிற்றுப் போக்காக இருந்தாலும் குறையும்.

### வயிற்றில் உள்ள புழுக்கள் நீங்க :

10 கிராம் பெருங்காயம் மற்றும் 40 கிராம் வேப்ப இலையை தேனுடன் கலந்து மிருதுவாக அரைத்து சிறு உருண்டைகளாக செய்து காய வைத்து நாள்தோறும், 1,2 மாத்திரைகள் வீதம் உட்கொண்டால் வயிற்றில் உள்ள புழுக்கள் நீங்கும். உட்புற இரத்தபோக்கு, குடலில் வாயு, இரத்தப்போக்கு நோய்கள், கர்ப்பம் போன்ற சமயங்களில் பெருங்காயத்தை உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும். மருந்திற்கு உபயோகிக்கப்படும் பெருங்காயம் தரமானதாக இருக்க வேண்டும் அப்பொழுது தான் நல்ல பலன் கிட்டும்.

பெருங்காயப் பொடி தூய்மையானதா என்று அறிந்து கொள்ள சிறிதளவு பெருங்காயப் பொடியை நீரில் போட்டால் முழுமையாக கரைந்து பால் போன்று மாறும். தீயைக் கொண்டு சுட்டால் எரிந்து விடும்.

இரஜ: ப்ரவர்த்தினி வடி, ஹிங்கயாஷ்டக சூர்ணம், ஹிங்கு கற்பூரவடி, ஹிங்கு திரிகுண தைலம் போன்ற புகழ் பெற்ற ஆயுர் வேத மருந்துகள் மற்றும் மேகநாத குளிக, அகத்தியர் குஜ"ம்பு போன்ற தமிழ் நாட்டில் புகழ் வாழ்ந்த சித்த மருந்துகளில் இப்பெருங்காயத்தை உபயோகிக்கின்றனர்.

ஆயுர்வேதம் வளரும்...

### ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது.ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.

– பிராதன ஆசிரியர்



# 2019
# ஜூன் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்

| | | | |
|---|---|---|---|
| | யுரேனஸ் சுக்ரன் சந்திரன் | சூரியன் புதன் | ராகு செவ்வாய் |
| நெப்ட்யூன் | ஜூன்–2019<br>01– புதன் –மிதுனம்<br>04– சுக்ரன் –ரிஷபம்<br>15– சூரியன் –மிதுனம்<br>22– செவ்வாய் –கடகம் | | |
| | | | |
| ப்ளூட்டோ கேது (சனி) | குரு | | |



மேஷம்

இம்மாதத்தில் ராசிநாதன் செவ்வாய் கடக ராசியில் சஞ்சரிக்க அவரை குரு நோக்குவதால் நிலம், வீடு, வாகனம் வாங்கி மகிழ்வீர்கள். மாணவர்களுக்கு விரும்பிய கல்லூரியில் இடம் கிடைக்கும். தாயாரின் உடல் நலம் சீராகும். பேச்சுத்திறனால் பெரும் பொருள் ஈட்டுவீர்கள்.



ரிஷபம்

இரண்டில் ராகு, செவ்வாய் இருப்பினும், ராசியை குரு நோக்குவதால் அதிகப்படியான செலவினங்களைச் சமாளிக்க உபரி வருமானங்கள் வரும். ஆசிரியர்கள் மேடைப் பேச்சாளர்கள் போன்றவர்களுக்கு செழிப்பான சூழ்நிலை நிலவி வரும். நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர்கள் வளர்ச்சி காண்பார்கள்.



மிதுனம்

இம்மாதத்தில் ராசி நாயகன் புதன் ராசியிலேயே சஞ்சரிக்க, தன–குடும்ப ஸ்தானத்தை குரு நோக்குவதால், குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். நல்ல எண்ணங்கள் மனதில் உருவாகும். புதியவர்களின் அறிமுகத்தால் அனுகூலம் உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சனைகள் தீரும்.



கடகம்

ஐந்தாமிடத்தில் குரு சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார். பணவரவு அதிகரிக்கும். ஆரோக்கியம் சீர் பெறும். குழந்தைப்பேறு உண்டாகும். திடீர் இடமாற்றம் ஊர் மாற்றங்களை ஒரு சிலர் சந்திக்க நேரிடலாம். வரும் மாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்வது உங்கள் வளர்ச்சியைக் கூட்டும்.



சிம்மம்

வெற்றி வாய்ப்புகள் கூடும். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு எதிர்ப்பார்த்த நல்ல வேலை கிடைக்கும். மனதில் துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தகவல் தொடர்பு இனங்கள் ஆக்கம் தரும். கலைத்துறையினருக்கு சுபிட்சம் கூடும். ஆடை, அணிமணிகள் சேர்க்கை நிகழும்.




கன்னி

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். வரவு திருப்தி தரும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் துரிதமாக நடைபெறத் தொடங்கும். குரு–சுக்ர பார்வை பரிவர்த்தனை காரணமாக குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள்.



துலாம்

சுக்ரன், புதன் சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. பிள்ளைகள் வழியில் எடுத்த முயற்சிகள் வெற்றி தரும். வியாபாரம் அபிவிருத்தியடையும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கணிதத் துறையைச் சேர்ந்தவர்கள், ஏஜென்சி நடத்துபவர்கள் ஆகியோர்களுக்கெல்லாம் முன்னேற்றமான பாதை தெரிய வரும்.



விருச்சிகம்

ராசி நாதன் கடகத்தில் உலவிடினும் குருவின் பார்வை பலத்தால் உங்களது மதிப்பும் அந்தஸ்தும் உயரும். எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை கிடைக்கும். மருத்துவர்கள் போற்றப்படுவார்கள்.



தனுசு

புதன், சுக்ரனைத் தவிர மற்ற கோள்களின் சஞ்சாரம் சிறப்பாக அமையவில்லை. ராசி நாதன் விரயஸ்தானத்தில் உலவிடுவதால் சுபச் செலவுகள் அதிகரிக்கும். உடல் நிலை பாதிப்புகள் மீண்டும் இப்பொழுது வந்து குணமாகும். கணவன்–மனைவியிடையே ஒற்றுமை குறையக் கூடும்.



மகரம்

ராசி நாயகன் விரய வீட்டில் சஞ்சரிப்பினும், வியாழன் லாபஸ்தானத்தில் உலவுவதால் பிள்ளைகளாலும், வாழ்க்கைத் துணைவராலும் அனுகூலம் ஏற்படும். ஏழாம் வீட்டை குரு நோக்குவதால் திருமணம் கூடி வரும். கூட்டு வியாபாரத்தில் எதிர்ப்பார்த்த லாபம் கிடைக்கும். எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்.



கும்பம்

தன குடும்ப ஸ்தானம் குருவின் பார்வையைப் பெறுகிறது.நான்காமிடத்திற்கு யோகக்காரகன் பெயர்ச்சியாகிறார். பொருளாதார நிலை மிகவும் உயரும். நிலம், மனை, வாகனம் வாங்கி மகிழ்வீர்கள். பிரிந்துச் சென்ற உடன் பிறப்புகள் மீண்டும் வந்து இணைந்து பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வர்.



மீனம்

ராசி நாதன் பாக்கியஸ்தானத்தில் சஞ்சரித்துக்கொண்டு ராசியை நோக்குகிறார். ஆரோக்கிய பாதிப்புகள் முற்றிலும் நீங்கும். பொருள் வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சகோதர வழியில் ஏற்பட்ட பிரச்சனை சுமுகமாகத் தீரும். தந்தை வழி உறவினர்களின் ஆதரவு நீங்கும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________
________________

மாவட்டம் & பின்கோடு எண் __________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஓ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: சந்தாதாரர் கையொப்பம்

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## அப்பளாயகுண்டா

# ஸ்ரீபிரசன்னவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

## 13-06-2019 முதல் 21-06-2019 வரை

**13-06-2019 வியாழக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**16-06-2019 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**19-06-2019 புதன் கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**14-06-2019 வெள்ளிக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**17-06-2019 திங்கட்கிழமை**
பகல் : மோஹினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**20-06-2019 வியாழக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**15-06-2019 சனிக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**18-06-2019 செவ்வாய்க்கிழமை**
பகல் : ஹனுமந்த்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**21-06-2019 வெள்ளிக்கிழமை**
பகல் : சக்கர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்





SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Published by
Tirumala Tirupati Devasthanams 25-05-2019
Regd. with the Registrar of Newspapers
under "RNI" No.10742,
Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment
No.PMGK/RNP/WPP-04/2018-2020

திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்
13-06-2019 முதல் 17-06-2019 வரை